மகிழ்ச

164/52
17 JAN 952

மகிழ்ச்சி இல்லம் – விருதுநகர்

உலகத்தில் மிகப் பிரசித்தி பெற்றதும்
கவர்ண்மெண்டாரால்

"பீடிச் சக்கரவர்த்தி"

என்று பட்டம் கிடைக்கப்பெற்றதும்
தங்க மெடல் பரிசு பெற்றதுமான

த. பி. சொக்கலால் ராம்சேட் பீடியை

உபயோகித்து ஆனந்தமடையுங்கள்.

ஊக்கமளிப்பது, உற்சாகம் கொடுப்பது, சோம்பலைத் தவிர்ப்பது.

காரம், குணம், மணம் நிறைந்தது.

இந்தியா, சிலோன், மலேயா முதலிய ஜலப் பிரதேச நாடுகளில் பிரக்கியாதி பெற்றது.

தினமும் ஆயிரக்கணக்கான ஜனங்களுக்கு தொழில் கொடுப்பது.

எப்பொழுதும் எங்கும் கிடைக்கக்கூடியது.

T. P. S. ஸ்ரீராம் சேட்

புரோப்ரைட்டர்,
த. பி. சொக்கலால் ராம்சேட் பீடித்தொழிற்

முக்கூடல் P. O.
(திருநெல்வேலி ஜில்லா)

1394

நண்பர்களுக்கும், வாடிக்கைக்காரர்களுக்கும்
எங்கள் புத்தாண்டு & பொங்கல்
வாழ்த்துக்கள்.

இந்தியாவில் உலவும்
பீடிகளில் இணையற்ற காரம்,
மணம், குணம் நிறைந்து
விளங்கும் எங்கள்

M. K.
தியாகராஜ் போட்டோ
பீடிகளும்,

M. K. T.
ராஜமயில் & மயில் மார்க் பீடிகளும்

தினமும் ஆயிரக்கணக்கான
மக்களுக்கு வேலை கொடுத்தும்,
கோடிக்கணக்கான
அன்பர்களின் மனதைக்
குதூகலிக்கச்செய்தும் வருகிறது.

M. K. T. ராஜ் & சன்ஸ்,

பீடி பாக்டரி, :: முக்கூடல்.

நீங்கள் விருதுநகருக்கு விஜயம் செய்யும்பொழுது

எங்கள் "கணேசர் மார்க்" ஐஸ்கிரீம் ஸ்டாலுக்கு

வந்து

30 வருட அனுபவத்தில் சுகாதார முறைப்படி தயாராகும்

★ ஐஸ்கிரீம் ★ புரூட்சாலிட்

★ கூல்டிரிங் ★ ஆரஞ்சுக் கிரஷ்

★ லெமன் கிரஷ் ★ ஐஸ் சோடா

★ ஐஸ் கலர்

முதலியன அருந்தி உள்ளம் குளிர வேண்டுகிறோம்.

குணம், மணம் நிறைந்தது
ஸ்ரீ அம்பாள் காபி
ஸ்ரீ அம்பாள் காபி
ஸ்ரீ அம்பாள் காபி ஒர்க்ஸ், பஜார், விருதுநகர்.
பொங்கல் வாழ்த்துக்கள்!

Trade Mark
Regd. No. 136625.
டிரேட் மார்க்
ரிஜிஸ்திரேசன்
அறிக்கை

இதிற்கண்ட டிரேட் மார்க்
இந்தியா
கவர்ன்மெண்டாரால்
டிரேட் மார்க் சட்டப்படி
ரிஜிஸ்தர் செய்து
எங்களுக்கு இந்தியா
கவர்ன்மெண்டார்
சர்டிபிகேட்டுகள்
கொடுத்து இருக்கிறார்கள்.

இந்த மார்க்குகளைப்
போல் நல்லெண்ணை
தினுசுகளுக்கு எவரும்
உபயோகிப்பதினின்றும்
தடுக்கப்படுகிறார்கள்.

மீறி உபயோகித்தால்
சட்டப்பிரகாரம்
நடவடிக்கைகளுக்கு
உள்ளாவார்கள் என்பதை
இதன்மூலம்
தெரிவித்துக்கொள்கிறோம்

★

VIRUDHUNAGAR
V.V.S. & SONS.,
Best Gingelly Oil.

நயம் நல்லெண்ணை

எங்கள் சொந்த செக்கில் அசல்தும்பை எள்ளில்
நேர்பார்வையில் தயாரான சுத்தமான
நயம்
நல்லெண்ணையை
வாங்கி உபயோகியுங்கள்
வே.வ.ஷண்முகநாடார் அன்சன்ஸ்
விருதுநகர்.

Telephone 88. Telegrams VEEVEEYES.

V.V. சண்முகநாடார் & சன்ஸ்.
வியாபாரம்,
விருதுநகர்.

G. P. பிலிம்ஸ், 301, மேலமாசிவீதி, மதுரை.

H. O. பொறையார்.

விருதுநகர்

நியூமுத்துவில்

★ இப்பொழுது வெற்றிகரமாக ஓடிக்கொண்டிருக்கிறது! ★



உயர்தரமான ரோட்டரி
ஆயில் மில்களுக்கும்
ஸ்பேர் சாமான்களுக்கும்
சிறந்த இடம்.

சந்திரா இண்டஸ்ட்ரீஸ்
தபால் பெட்டி நிர். 24
விருது நகர்.

அன்பர்கள் அனைவருக்கும்

புத்தாண்டு & பொங்கல் வாழ்த்துக்கள்

பெ. சி. சிதம்பர நாடார் பேரன் செல்வராசன்,

பாத்திர வியாபாரம்,

பெ. சி. சிதம்பர நாடார் தெரு,

விருதுநகர்.

கொடை வள்ளல்
பெ. சி. சிதம்பர நாடார்.

அன்புடையீர்,

முன்பு ராவ்சாகிப் பெ. சி. சிதம்பர **நாடார்** அவர்கள் வைத்திருந்த பாத்திரக்கடைக்கு வடபக்கம் வைத்திருக்கும் எனது பாத்திரக்கடையில் எங்கள் சொந்த தொழிற்சாலையில் கைதேர்ந்த வேலையாட்களைக்கொண்டு அசல் இங்கிலீஷ் தகடுகளில் தயார் செய்யும் **பித்தளை, செம்பு, அலுமினியம்** மற்றும் **ஸ்டெயின்லெஸ் ஸ்டீல்** முதலிய பத்பலவிதமான **பாத்திரங்கள்** சகாயமான விலைக்கு விற்பனை செய்கிறபடியால் அனைவரும் நேரில் வந்து பார்த்து தங்கள் தங்கள் தேவைக்கு வேண்டிய சாமான்களை வாங்கி மகிழ வேண்டுகிறேன்.

பெ. சி. சி. பேரன் செல்வராசன்.

காரம், குணம், மணம்

நிறைந்தது

எவரெஸ்ட்

சுருட்டுகளே.

வாங்கி உபயோகித்து

ஆனந்தமடையுங்கள்

உரிமையாளர்:

K. S. S. அய்யாசாமி,

எவரெஸ்ட் சுருட்டுத் தொழிற்சாலை, விருதுநகர்.



ஸ்பெஷலாக தருவிக்கப்பட்ட உயர்தரமான
நயம் எள்ளில் எங்கள் நேர்பார்வையில்
தயார் செய்யப்படுகிறது

ஆனந்தம் நல்லெண்ணெ

உயர்ந்த குணம், மணத்திற்கு உத்திரவாதம்.

இன்றே ஆர்டர் செய்யுங்கள்.

V. V. வன்னியப்பெருமாள் & சன்ஸ்,

வியாபாரம்,

விருதுநகர் & மதுரை.

மகிழ்ச்சி
பொங்கல் மலர்
1952

கர-தை 1
14-1-'52

ஆண்டு 3
மாதம் 8

ஆசிரியர்: நா. சதானந்தம், விருதுநகர்.

பொருளடக்கம்

வாழ்த்து—கவிமணி தேசிகவிநாயகம் ... 9
பொங்க வேண்டும்!—யோகி சுத்தானந்தபாரதி 10
மோதிய கண்—கலைமகள் கி. வா. ஜகந்நாதன் ... 12
புத்தம் புது மலர்கள்— ம. சி. சிதம்பரம் எம். ஏ., 21
இருண்ட வாழ்வு—கடவுள் 29
மன்னர் பிறந்தார்—அகிலன் 37
புதுவாழ்வு—ரவி 44
விவாகரத்து—கிளர்ச்சி இரா. சு. தங்கப்பழம் 49
பொங்கலும் தமிழரும்—V. கண்ணையா பி. ஏ., 54
நாடோடிக்கதைகள்—நாரணதுரைக்கண்ணன்... 57
குழந்தையின் சிரிப்பில்—விமுதன் ... 69
கன்னியின் சிறை—எம். எஸ். கமலா ... 78
நீதிபடும்பாடு—ஏ. வி. பி. ஆசைத்தம்பி ... 85
அறிவும் அழகும்—நா. சதானந்தம் ... 103
சிந்தனைக் களஞ்சியம்—தொகுத்தவர்
தி. அருணாசலம் எம். ஏ.,

விலை 12 அணா

கதைகளில் வரும் பெயர்களும், சம்பவங்களும் கற்பனையே.
எழுத்தாளர் கருத்துக்களுக்கு ஆசிரியர் பொறுப்பாளியல்ல.

காளி

மார்க்

சோடா, கலர்,

வீரோ, கிரஷ்

—: அமிர்த :—

பழரச பானங்கள்

எல்லாக் கடைகளிலும்

கிடைக்கும்

கேட்டு வாங்குங்கள்.

★

காளி ஏரேட்டட்

வாட்டர் ஓர்க்ஸ்,

தலைமை:

விருதுநகர்.

★

கிளைகள்:

திருநெல்வேலி,

மதுரை.

அன்பர்களுக்கு

எங்கள்

பொங்கல் வாழ்த்துக்கள்.

படம் பார்ப்பவர்களுக்கு

சகல வசதிகளும் நிறைந்த

விருதுநகர்

ஸ்ரீராதாவில்

அஞ்சலிதேவி,

G. வரலக்ஷிமி

முக்கமாலா நடித்த

ரோஹிணியாரின்

நிரபராதி

இப்பொழுது நடைபெறுகிறது.

விரைவில் வருகிறது

ராதாகிருஷ்ணா

பிலிம்ஸாரின்

"குமாரி"

★

அந்தமான்

கைதி

மலர்பற்றி

"வரவேற்பு உண்டா? இல்லையா?'' என்ற கேள்விகளுக்கு விடையை எதிர்பாராமலே 1952ம்ஆண்டு பிறந்து பிரயாணத்தைத் தொடங்கிவிட்டது. பிரிவு உபசாரம்பற்றிக் கவலை இல்லாமலே போய்விட்டது 1951ம் ஆண்டு. ஆனால் "மகிழ்ச்சி தைப்பொங்கல் மலர்'' இவ்வாண்டு உண்டா? என்று இடைவிடாது நம்மைத் துளைத்துக்கொண்டிருந்த நேயர்களின் கையில் இதோ மலரைக் கொடுத்துவிட்டோம். இனி மலர்பற்றிய கருத்து உரைக்க நேயர்களுக்கே உரிமை என்றதால் வேறு ஒன்றும் கூறாது இத்துடன் நிறுத்திக்கொள்ளுகிறோம்.

இம்மலருக்குக் கதை, கட்டுரை, கவிதை வழங்கிய அறிஞர்கள், ஆசிரியர்கள், எழுத்தாளர்களுக்கும், மகிழ்ச்சி அன்பர்களுக்கும் எங்கள் நன்றியும் பொங்கல் வாழ்த்தும் உரித்தாகுக.

நா. சதானந்தம்—ஆசிரியர்.



அட்டைப்படம்:

அவன் ஒரு இளமகன்; அழகன்; சீரியன்; கற்றொழுக்கம் பெற்றவன்; நற்பழக்கம் பூண்டவன். மான் ஒன்றைத் துரத்திச் சோலையின் ஊடே பாய்ந்து சென்ற அவன், அங்கோர் வேங்கைமரத்துப் பரந்த முல்லைக்கொடி மருங்கு, பூங்கொடிபோன்ற ஒரு மான்விழியாள் நிற்கக் கண்டு, அவள் அழகில் மருண்டு நின்றுவிட்டான்.

அவனும் நோக்கினான்; அவளும் நோக்கினாள். கண்கள் ஒன்றியவழி அவர்கள் கருத்தும் ஒன்றியது...... நீல வானில் நிலவு தோன்றிவிட்டதையும் மறந்து இன்ப நிலையில் நின்றனர் நேரம் போவது அறியாது. இந்நிலையைத்தான் நம் மகிழ்ச்சி மலரின் அட்டைப்படமாக அழகொழுகத் தீட்டியுள்ளார் ஓவியர் திரு. ரவீந்திரன் அவர்கள்.

இப்பொழுது வெற்றிகரமாக நடைபெறுகிறது.

ராயல்

சுதர்ஸன்

சின்னப்பா · கண்ணாம்பா · யோகமங்களம் · லலிதா · பாலையா

BHARAT STUDIO

RAYAL TALKIE DISTRIBUTORS

ராயல் டாக்கி டிஸ்டிரிபியூட்டர்ஸ்,

மதுரை — பெஜவாடா — பெங்களூர்.

மகிழ்ச்சி

வாழ்த்து

எக்கலையும் எவ்வறமும்
எத்தொழிலும் ஆராய்ந்து
மக்களுக்கு நல்ல
வழிகாட்டி—மிக்கபுகழ்த்
தென்றமிழ் நாட்டில்
சிறந்து "மகிழ்ச்சி" நீ
என்றுமே வாழ்க இனிது.

தேசிகவிநாயகன்.

சீர்திருத்த மாதப் பத்திரிகை.

218945
சென்னை-600 008

பொங்க

வீரம் பொங்க வேண்டும்—பேச்சில்
விறுவிறுப்பு வேண்டும்
காரம் பொங்க வேண்டும்—வீண்
கயவர் தொல்லை செய்தால்.

ஈரம் பொங்க வேண்டும்—நெஞ்சில்
ஏழை துன்பங் கண்டால்,
தீரம் பொங்க வேண்டும்—பணி
செய்து நாட்டைப் பேண.

சேந்தமிழ்க் கவிதை—என்றால்
சிந்தை தன்னில் அமுதம்
வந்து பொங்க வேண்டும்—அன்பின்
வளமை பொங்க வேண்டும்.

சொந்த நாட்டுவாழ்வைப்—பல
சுக்க லாக்கும் சாதி—அதை
முந்து தகர்க்கவேண்டி—ஒருமை
முயற்சி பொங்க வேண்டும்.

வேண்டும்

மனித னென்று சொன்னால்—உலகில்
    மத விகாரமின்றி
இனவி காரமின்றி—வாழும்
    இன்பம் பொங்க வேண்டும்.

மனநிறைந்த காதல்—கொண்ட
    மனைகள் பொங்க வேண்டும்.
வனம் நிறைந்த மலர்போல்—கலை
    மணமும் பொங்க வேண்டும்.

வட்டவானக் குடைக்கீழ்—வாழும்
    மாந்தர் சாந்தராக
எட்டுத் திக்கும் வீசும்—கதிர்போல்
    எழில் பொலிய வேண்டும்.

கட்டிலாத வுரிமை—நல்ல
    கல்விகேள்வி யறிவு—பொங்கித்
தட்டில்லாதுவாழத்—தொழில்
    சக்தி பொங்க வேண்டும்.

சுத்தானந்தபாரதி.

மோதியகன்

[கி. வா. ஜகந்நாதன்]

ஆண்மையும் அற நினைவும் ஊக்கமும் அன்பும் உடைய பெருமகன் அவன். அழகும், கற்பும், காதலும் உடைய மடமகள் அவள். இருவரும் மணம்புரிந்து இல்லறவாழ்க்கையில் இன்புற்றிருந்தார்கள். இல்வாழ்க்கையில் செய்யவேண்டியவற்றைச் செய்வதற்கும், நுகரவேண்டியதை நுகர்வதற்கும் பொருள் இன்றியமையாதது. பொருள் இல்லார்க்கு இவ்வுலகம்இல்லையல்லவா?

அவன் வறுமையில் உழல்பவன் அல்ல, ஆயினும் பொருள்வளம் மிகுதியாக இருந்தால் அறத்தைப் பின்னும் சிறப்பாக வளர்க்கலாம். அவனும் அவளும் நுகரும் இன்பத்துக்குரிய கருவிகளை மிகுதியாகப் பெற்று நிரப்பலாம். இத்தகைய எண்ணம் அந்த ஆண் மகனுக்கு உண்டாயிற்று. அது அவன் நெஞ்சிலே முளைத்து இலைவிட்டுக் கொடியோடிப் பரந்தது; தன்னைக் காட்டிலும் அதிக வசதிகள்பெற்று வாழ்வாரைக் கண்டபோது அவனுக்கு அந்த எண்ணம் முறுகி வளர்ந்தது. பொருள் ஈட்டுவதற்குத் தக்க ஆற்றலும் பருவமும் அவனிடம் இருந்தன. பொருளால் வரும் விரிவான இன்ப வகைகளையும், செய்வதற்குரிய அறச் செயல்களையும் நினைத்துப் பார்க்கப் பார்க்க அவனுக்கு இன்னும் நிதியைப் பெருக்கவேண்டும் என்ற ஆசை உண்டாயிற்று. எண்ணம் அவாஆக வளர்ந்தவுடன் அதற்குரிய ஆயத்தங்களைச் செய்யத் தொடங்கினான்.

பொருளை ஈட்டுவதற்கு வேறு ஊர்களுக்குச் செல்ல வேண்டும். வேற்று நாட்டுக்கும் செல்லவேண்டியிருக்கும். சில மாதங்கள் தன் காதலியைப் பிரிந்து வாழவேண்டி நேரும். ஒருகணமேனும் பிரியாமல் வாழ்பவர்கள் அவர்கள். உடலும் உயிரும்போல ஒன்றி இன்ப வாழ்விலே ஈடுபட்டவர்கள். பிரிவுத் துன்பத்தை அவர்கள் இன்னும் உணரவில்லை. காதலியைப் பிரிந்து சென்றால் அந்தப் பிரிவை அவள் தாங்குவாளா? அவன்தான் தாங்குவானா?

அவள் நினைவு அவனுக்கு இனிமையைத் தரும். போன இடங்களில் அவளை நினைந்து மகிழலாம். ஆனாலும் நேருக்குநேரே காண்பது போலஆகுமா? அவளுடையபேரழகு

அவன் உள்ளத்தைக் கொள்ளை கொண்டுவிட்டது. அந்த அழகைப் பார்த்து மகிழாதநாளும் ஒருநாளா?

மீண்டும் பொருளின் நினைவு அவனுக்கு வந்தது. பொருள் இருந்தால் போகமும் உடன்வரும். தன் உயிர்க் காதலிக்கு வேண்டிய அணி வகைகளையும் ஆடைவகைகளையும் வாங்கிப் புனையலாம். மாளிகை கட்டலாம். வாகனம் பெறலாம். அறம் செய்து புகழ் பெறலாம். ஆதலின் பொருள் அவசியந்தான்.

இவ்வாறு ஒன்றுக்கொன்று மாறுபட்ட எண்ணங்கள் அவன் உள்ளத்திலே போராடிக்கொண்டிருந்தன. பொருள் வேண்டுமென்றால் காதலியோடு இணைந்து வாழும் வாழ்வு இடையிலே இல்லையாகும். இடையீடில்லாமல் அவளோடுவாழ்ந்திருந்தால் அவசியமானபோது பொருள் கிடைக்காது. அவளுடன் இணைந்திருப்பது, பொருளுக்காகப் பிரிந்து செல்வதுஎன்ற இரண்டும் ஒன்றற்கு ஒன்று எதிராக அவன் உள்ளமென்னும் களத்தில் நின்று போர் செய்தன. இரண்டு எண்ணங்களும் ஒன்றுக்கு ஒன்று இளைக்கவில்லை.

இப்படி உள்ளக்கடலில் மோதும் எண்ண அலைகளினூடே அலைப்புண்டு அவன் தத்தளித்தபோது அவன் காதலி வந்தாள். அவன் எதையோ சிந்தித்துக்கொண்டு அமர்ந்திருப்பதைப் பார்த்தாள். புன்னகை பூத்தபடியே "எந்தக் கோட்டையைப் பிடிக்கத் திட்டம் போடுகிறீர்கள்?" என்று கேட்டாள். அந்தப் புன்னகையின் அழகும் அவளுடைய இன்னுரையின் ஓசையும் அவனுடைய எண்ணங்களை நிறுத்தின. அந்த இரண்டுக்கும் மேலே வேறு ஒன்று அவனுடைய போராட்டத்தைப் போக்கியது. அது என்ன?

அவள் புன்னகை மலரப் பேசிய போதே அவள் தன் மோகனப் பார்வையை அவன்மீது வீசினாள். விழிகள் ஒருமுறை கடைக்கண் அளவும்சென்று மீண்டன. பார்வை ஒரு வெட்டு வெட்டி அவன் உள்ளத்தைச் சுண்டி இழுத்தது. அந்த அளவில் அந்த ஆண்மகன் தன் ஆற்றல் அழிந்து எண்ணச் சிதறல்களைத் திரட்டித் தூற்றிவிட்டான். இப்போது அவன் உள்ளம் ஒரு நிலைக்கு வந்துவிட்டது.

அவள் பார்த்த பார்வையில் எத்தனை கவர்ச்சி! காதில் கனமான பொற்குழையை அணிந்திருந்தாள். வடிந்த காதில் அது ஊசலாடிக் கொண்டிருந்தது. அவன் மனம் கூட அப்படித்தான் ஊசலாடியது. ஆனால் அவள் விழிகள் அந்தக் குழையை மோதின. ஓர் ஓரத்திலிருந்து கடைக்கண் அளவும் சென்றன. அந்தக் கண்கள் தாம் காதளவும் நீண்டிருக்கின்றனவே! ஆகவே பார்வை ஒருமுறை வெட்டி இழுக்கையில் விழி கனங்குழையோடு மோதியதுபோலவே இருந்தது. சிவந்த அரிபடர்ந்த கண்ணை அவன் பார்த்தான். அந்தக் கண்ணிலே தான் எத்தனை குளிர்ச்சி! மழைக் கண்கள் அவை; சேயரி படர்ந்த மழைக்கண்கள்! அவை கனங்குழையோடு அமர்செய்தன; அப்படி அமர்த்த கண்கள் குழையை மாத்திரம் மோதவில்லை; அவன் உள்ளத்தையும் மோதியது. அவள் நோக்கின நோக்கத்தில் இனிமை இருந்தது, விருப்பத்துடன் இனிமை

பொங்க நோக்கின நோக்கந்தான்; ஆயினும் அது அவள் நெஞ்சைச் செகுத்தது. மெல்லப் பாயும் தண்ணியநீர் மணற்குவியலைக் கரைத்து விடுவதில்லையா? அவன் மனத்தில் எழுந்த போராட்டமும் அப்படித்தான் கரைந்துபோயிற்று. அவள் தன் கனங் குழையோடு அமர்த்த சேயரி மழைக்கண்ணுல் அமர்ந்து இனிது நோக்கிய நோக்கம் அவனைச் செகுத்தது. ஒரு தடவை மட்டுமா பார்த்தாள்? பலபல கோணத்திலே பார்த்தாள். அத்தனை பார்வைகளும் சேர்ந்து அவனைச் செகுத்தன. பொருள் வேண்டுமென்று எண்ணிய அவன் எண்ணத்தைக் குலைத்தன. "பொருள் எவ்வளவு வகைகளாக, பெரிதாக இருந்தாலும் இருக்கட்டும், எனக்கு வேண்டியதில்லை, எனக்கு இவளோடு பிரிவில்லாமல் வாழும் வாழ்க்கைதான் வேண்டும்" என்ற உறுதியான முடிவுக்கு வந்துவிட்டான்.

அந்த முடிவு வந்தபிறகு இப்போது நிதானமாக நினைத்துப் பார்க்கிறான். முன்னாலே ஒன்றையொன்று எதிர்த்துநின்ற இரண்டு வகை எண்ணங்களையும் நிறுத்துப் பார்க்கிறான்.

'என்னுடைய ஆருயிர்க் காதலியோடு இடைவிடாது இணைந்து வாழ்ந்தால், பொருள் நமக்குக் கிடைக்காது. இவளோடு நாம் புணரின் பொருள் நம்மோடு புணராது. இதை நினைந்து பொருளைத் தேடிக்கொண்டு இவளைப் பிரிந்து சென்றாலோ இவளுடன் இணையும் இன்பம் அந்தக்காலத்திற்கிட்டாது. பொருள் வயிற் பிரியன் இவளோடு புணர்வு புணராது. இந்த இரண்டுக்கும் நடுவிலே, நெஞ்சமே நீ மிகவும் அல்லற்பட்டாய்!'

தன்நெஞ்சைத் தனியாகப் பிரித்து வைத்துப் பேசுகிறவன்போல அவன் சொல்லிக்கொள்கிறான்.

'என் நெஞ்சே, வாழி அந்த இரண்டு மாறுபட்ட எண்ணங்களிடையே சிக்கிய நீ பொருள் தேடச் சென்றாலும்சரி; செல்லாவிட்டாலும் சரி, நல்லதாகிய ஒன்றை அடைய வேண்டிய உரிமை உனக்கு உண்டு. நல்லதற்கு உரியை நீ. செல்வது நல்லதா? செல்லாமல் நிற்பது நல்லதா? சற்றுச் சிந்திக்க வேண்டும். பொருளைத் தேடிச்சென்றால் இவள் கூட்டுறவு இல்லை. அப்படி இவளை விட்டுப் பிரிந்து சென்று ஈட்டும் பொருள் நல்லதா?'

அவன் இப்போது வாதத்தில் வெற்றியடையநிச்சயித்துவிட்டான். பிரியாமல்இருப்பதே நல்லதுஎன்று சாதிக்கும் உறுதி அவனிடம் வந்திருக்கிறது. ஆதலின் பொருள் நல்லதன்று என்று காட்ட முற்படுகிறான்.

'பொருளை ஈட்டி வருகிறோம். அது எவ்வளவுகாலத்துக்கு நிற்கும்? பொருள் ஒருவரிடத்திலும் நிலையாமல் ஓடிக்கொண்டே இருக்கும் என்று சொல்வார்கள். சென்ற சுவடே தெரியாமல் அது கைமாறுகிறதைஉலகில்பார்த்துக்கொண்டே தான் இருக்கிறோம்!'

பொருள் நிலையாது என்ற நினைவு வந்தவுடன் அவனுக்கு ஓர் உபமானம் மனசிலே தோற்றுகிறது. எப்போதுபார்த்தாலும் பூநிரம்ப இருக்கும் பொய்கை ஒன்று அவன் வீட்டுக்கு அருகில் இருந்தது. காலை

யிலே தாமரை மலரும்; மாலையில் குமுதம் மலரும். தண்ணீர் நிறைந்து விளங்கியதுஅந்தப்பூம்பொய்கை. வாடாப் பூவையுடைய பொய்கை அது. எந்தக் காலத்திலும் பூ இருந்துகொண்டே இருக்கும். அதன் நடுவிலே எத்தனையோ மீன்கள் வாழ்கின்றன. அவை ஓடிஓடி விளையாடுகின்றன. நிலத்தின்மேல் யாராவது ஓடினல் அவன் அடிச்சுவடிகளைக்கொண்டு எந்த வழியே ஓடினன் என்று கண்டுபிடிக்கமுடியும். பொய்கை நாப்பண் மீன் ஓடும்போது அதன் அடிச் சுவட்டையும் அது சென்ற வழியையும் தெரிந்துகொள்ளமுடியுமா? நீரில் எழுதின எழுத்து என்று நிலையாமைக்கு உபமானம் சொல்வார்கள். அதாவது எழுதுபவனுடையநினைப்பிலே இன்ன எழுத்து என்று இருக்கும். மீன் ஓடினல் நம்மிடம் சொல்லிக்கொண்டு ஓடுகிறதா? இந்த வழியாக ஓடவேண்டும் என்று நினைத்துத் திட்டம் போட்டு ஓடுகிறதா? ஒன்றும் இல்லை அது ஓட ஓட அதன் வழி அடுத்த கணத்தில் மறைந்துகொண்டே வருகிறது. இந்தக் காட்சி தலைவனுக்கு நினைவு வந்தது.

'பொருள், வாடாதபூவையுடைய பொய்கையின் நடுவில் ஓடும் மீன் செல்லும்வழியைப்போல விரைவில் அழிந்துபோவதுதானே? எந்தப் பொருளாக இருந்தாலும் எல்லாம் நிலையாமற் போய்விடுபவைகளே. அந்தப் பொருளுக்காகவா இவளை விட்டுப் பிரிவது!'

அவள் அமர்ந்து இனிதுநோக்கிய நோக்கம் அவன் உள்ளத்தில் தண்மையைப் புகுத்தியது.

'நான் சென்று ஈட்டிவரும் செல்வம் சிறிய அளவுடையதாகத்தான் இருக்கும். அதுகிடக்கட்டும், "கடல் சூழ்ந்த இந்த உலகத்தையே மரக்காலாக வைத்து அப்படி ஏழு தடவை அளந்து உனக்குத் தருவேன். நீ உன்காதலியைப் பிரிந்து வா" என்று கடவுளேவந்து சொன்னலும் நான் இவளைப் பிரியமாட்டேன். விழுநீர் சூழ்ந்த வியலகமாகியஉலகமே தூணியாக வைத்து ஏழு தடவை அளக்கும் விழுநிதி பெறினும், இவளுடைய கனங்குழையோடுஅமர்த்த சேயரிமழைக்கண்ணல் அமர்ந்து இனிது நோக்கும் நோக்கத்தால் செகுக்கப்பட்டவனுதலால், அந்தப் பொருள் எத்தனை வகையாக இருந்தாலும் சரி; அது வாழட்டும், எனக்கு வேண்டாம். இன்று என் கைப்பட்ட பெரியநிதி இவள். இவளைப் பிரிதலைவிட வறுமையும் பிணியும் துயரமும் வேறு இல்லை. ஆகவே என் நெஞ்சே, நீ வீணுகச் சபலம் கொள்ளவேண்டாம். நீ வாழ்க! நீ நினைத்த பொருளும் வாழ்க! நான் இவளோடு இன்புற்றுவாழும் இணையற்ற வாழ்வு மாருமல் இருக்கட்டும்.'

இப்போது அவன் ஒருமுடிவுக்கு வந்துவிட்டான். இந்தக் கருத்தை **நற்றிணை**யில் வரும் அழகிய பாட்டு ஒன்று வெளியிடுகிறது. காதலன் தன் நெஞ்சைநோக்கிக் கூறுவதாக அமைந்திருக்கிறது அந்தப்பாட்டு.

புணரிற் புணராது பொருளே; பொருள்வயிற்
பிரியிற் புணராது புணர்வே; ஆயிடைச்

செல்லினும் செல்லா யாயினும்,
நல்லதற்கு
உரிமை வாழிஎன் நெஞ்சே!
பொருளே,
வாடாப் பூவின் பொய்கை
நாப்பண்
ஓடுமீன் வழியிற் கெடுவ; யானே,
விழுநீர் வியலகம் தூணி ஆக
எழுமாண் அளக்கும் விழுநெதி
பெறினும்,
கனங்குழைக்கு அமர்த்த
சேய்அரி மழைக்கண்
அமர்ந்துஇனிது நோக்கமொடு
செகுத்தனன்;
எனைய ஆகுக, வாழிய பொருளே!

[நான் இவளோடு சேர்ந்திருந்தால் பொருள் எனக்குக் கிடைக்காது; பொருளைத்தேடி இவளைப் பிரிந்தால் இவளுடன் இணையும் இன்பம் கிடைக்காது. இந்த இரண்டுக்குமிடையே, பிரிந்து போனாலும், போகாவிட்டாலும், நல்லதாகிய ஒன்றைப் பெறுவதற்கு உரியாய், நீ; என் நெஞ்சமே, வாழி! பொருள், வாடாத பூவையுடைய பொய்கையின் நடுவிலே ஓடுகிற மீனின் வழி உடனே கெடுவதுபோல, விரைவில் அழிந்துவிடும். நான், உயர்ந்த கடல் சூழ்ந்த பரந்த நிலவுலகமே அளவு கருவியாக ஏழுதடவை அளக்கும் உயர்ந்த நிதியைப் பெற்றாலும், கனமான பொற் குழையோடு போராடி மோதும் சிவந்த அரிகளையும் குளிர்ச்சியையும் உடைய கண்களால் விரும்பி இனிது பார்க்கும் காதலியின் பார்வையினால் மோதப்பெற்றேனாதலின், பொருள் எத்தனை வகைகளாக இருந்தாலும் இருக்கட்டும், வாழ்க, நான் பிரிந்துவரமாட்டேன்.

ஆயிடை—அவற்றினிடையில்; நாப்பண்—நடுவில்; கெடுவ—கெடுபவையாகும்; விழுநீர்—விழுப்பமானநீரையுடைய கடல்; வியல்அகம்—பரந்த உலகம்; தூணி — முகத்தலளவைக்குரிய கருவி; எழுமாண்—ஏழுதடவை; விழுநெதி—உயர்ந்தநிதி; மழை—குளிர்ச்சி; அமர்ந்து—விரும்பி; செகுத்தனன்—மோதப்பட்டேன்; எனைய—எத்தனை அளவுடையவை.]

இந்தப் பாட்டைப் பாடின புலவர் **சிறைக்குடி ஆந்தையார்** என்பவர்.

சுழன்றுமேர்ப் பின்ன(து) உலகம்; அதனுல்
உழந்தும் உழவே தலை.

 போட்டோ: V. O. V. P. நாகரத்தினம்.

நகரத்துப் பெண்களின் பொழுது போக்கு!



ரேடியோ
கேட்டல்

புத்தகங்கள்
வாசித்தல்

நகரத்துப் பெண்களின் பொழுது போக்கு!

பின்னல் வேலைகள் செய்தல்

போட்டோ ஆல்பம் சேர்த்தல்

நகரத்துப் பெண்களின் பொழுது போக்கு!



செஸ்
விளையாடல்



கேரம்
விளையாடல்

போட்டோக்கள்: V. O. V. P. நாகரத்தினம்.

புத்தம் புது மலர்கள்

[ம. சி. சிதம்பரம் எம். ஏ.]

ஒவ்வொரு வசந்தமும் புத்தம் புது மலர்களை ஏந்திவருகிறாள்... புது மலர்களோடு புதுக் கனவுகளைக்கொண்டுவருகிறாள்...வாழ்வும் ஒருகணம் தனதுகட்டுக்களை உதறிவிட்டு வானத்து விண்மீன்களோடு தோழமை கொள்ளுகிறது. இதயத்தின் ஆழத்தில் ஒரு புதிய இன்பவூற்று கண் திறந்து பாய்கிறது.

தமிழ்க் கன்னிக்கு இந்நாள் இளவேனில் திருநாள். எத்தனையோ புலவர்கள் இவளுக்கு வாடா மலர்களாகிய தம் புதுக் கவிதை மலர்களைப் பாதகாணிக்கையாகக் கொணர்ந்திருக்கிறார்கள். நிலவின்றி இருண்டிருக்கும் இரவிலே கூம்பியிருக்கும் செந்தாமரைபோன்ற இவளுடைய முகம் மெல்ல மலர்கின்றது. இவளுடையகண்களில்மகிழ்ச்சிக் கனல் ஜொலிக்கிறது.

இவள் வாழ்வில் இதற்கு முன்பு எத்தனையோ வசந்தங்களைக் கண்டிருக்கிறாள். அக்காலத்தில் உதித்த புதுமைக் கவி மலர்களுக்கு 'விருந்து' என்ற அருமைப் பெயரை அளித்தார்கள். ஆம், மக்களுக்கே அவை ஒருவிருந்து தான். இல்லையேல் புதுமைக் கவிதைகளைக் குறித்துக் கலித்தொகையில் 'புலன்நாவிற்பிறந்த புதிதுண்ணும்பொழுது' என்று ஆர்வமுடன் பாடியிருப்பாரா கவிஞர்? இதே உணர்ச்சியைத் தான் கம்பனும் 'புதியன கண்ட போது விடுவரோ புதுமை பார்ப்பார்?' என்று பாடிமகிழ்ந்தான்.

எந்நாட்டிலும் உயிரோடிருக்கும் கவிஞர்களைப்பற்றி எழுதும் போது வாக்குவாதமும் போட்டியும் எழுவது இயல்பே. கவியைப்பற்றி காலம் அளிக்கும் தீர்ப்புத்தான் முடிவானது என்பது அறிஞர்களின் கருத்து. ஆயினும் புதுமையைரசிக்காமல் இருந்துவிட எவனாலும் முடிவதில்லை. ஆகவே நானும் இக்காலத் தமிழ்க் கவிஞர் நால்வர்களைப்பற்றி மாத்திரம் குறிப்பிடுகிறேன். இன்னும் எத்தனையோ கவிஞர்கள் இருப்பார்கள். அவர்களைப்பற்றி நான் அறியேன். அதனால் சிலரை விட்டுவிட்டேனென்று எவரும் கவலைகொள்ள வேண்டுவதில்லை.

கவிதையைப்பற்றிய எண்ணங்கள் எழுவதற்குமுன்பே, 'கவிதையின் இலக்கணம் என்ன?' என்றகேள்வி எழுகின்றது. இக்கேள்வி முதல்முதலில் இந்நாட்டில் எழவில்லை. மேலைநாடுகளிலே எழுந்து கடல்கடந்து வந்து இங்கும் வேலைசெய்யஆரம்பித்துவிட்டது. ஆங்கிலப் புலவர் ஒவ்வொருவரும் ஒவ்வொரு இலக்கணம்வகுத்திருக்கிறார். அவற்றையெல்லாம் ஆராய வேண்டுமென்றால் இங்கு இடமும் காணாது... வாசகர்களும் சலிப்படைய நேரிடும். 'அழகு உணர்ச்சியால் கண்டவற்றை இன்பம் பயப்ப யாப்பது கவிதை' என்பது என்னுடைய வரையறை. இதைக் குறித்துவிட்டு மேலே செல்லுகிறேன்.

நான் தெரிந்தெடுத்த கவிமணிகள் நால்வர்—தேவிஎன்று அன்புடன் அழைக்கப்படும் தேசிக விநாயகம்பிள்ளை, 'சோமு,என்ற புனைபெயரில் நுழைந்துகொண்டிருக்கும் சோமசுந்தரம், ச. து. சு. யோகி, பாரதிதாசன். தேவியைப்பற்றியும், பாரதிதாசனைப் பற்றியும் வாசக அன்பர்களுக்குத் தெரிந்திருக்கலாம். ச. து. யோகி 'தமிழ்க் குமரி' என்ற கவிதைநூலால் தமிழுலகத்திற்கு அறிமுகமானவர். 'சோமு' 'இளவேனில்' என்ற கவிதை நூலின் ஆசிரியர்.



தேவியைப்பற்றி நினைக்கும்பொழுதெல்லாம் அவர் வாழ்க்கையைப்பற்றி பாடியிருக்கும் இரண்டு அடிகளே என்னுள்ளத்தில் எழுகின்றது. அவ்வடிகள் எப்பாட்டிலே வருகின்றன என்பதுகூட இப்பொழுது மறந்துபோய்விட்டது. ஆனால் அவ்வடிகள் மட்டும் என் இதய வீணையில் என்றென்றும் இன்னிசை எழுப்பிக்கொண்டேயிருக்கின்றன. 'சண்டிக் குதிரை மேல் நொண்டித் துரை செய்யும் சவ்வாரிபோலுமிவ் வாழ்வதிலே' என்பதுதான் அவ்வடிகள். வாழ்வினது நொய்மையை எவ்வளவு அழகாகச் சித்தரித்திருக்கி

ஞர்! இவருடைய கவிகளெல்லாம் மலரும் வானும் கதிரும் போல இயற்கையாக எழுகின்றன. விவரிக்க முடியாத எளிமையும் இன்பமும் அப்பாடல்களிலேகலந்திருக்கின்றது. ஆனால் கருத்துக்களைக் கவனித்தால் அவை அறிவின் ஆழ்கடல் முத்துக்கள் எனத் தெளியலாம். மங்கையரைப்பற்றிப் பாடும்போது இவர் சொல்கிறார்:

மங்கைய ராகப் பிறப்பதற்கே
—நல்ல
மாதவம் செய்திட
வேண்டுமம்மா
பங்கயக் கைநலம்
பார்த்தல்லவோ—இந்தப்
பாரில் அறங்கள் வளருமம்மா!

இவருடைய 'பாட்டுக்கோரு புலவன் பாரதியடா' என்னும் அழகியபாடல் வீதிதொறும்முழங்கி வருவதைக்காண்கிறோம். 'ஆசிய ஜோதி' உமர்கய்யாம் எழுதின 'ருபாயாத்' முதலியவை மொழிபெயர்ப்பு நூல்கள். இவரது கவிதைநூல் தற்சமயம் என்வசமின்மையால் இத்துடன் இவருடைய கவிதையைப்பற்றி சொல்வதை நிறுத்திக்கொள்ளுகிறேன்.

ச. து. யோகி தனது 'தமிழ்க்குமரி' என்னும் நூலில் சில அழகிய கவிதைகளை நமக்குத் தந்திருக்கிறார். இவற்றிலே பாரசீகக் கவிதைகளின் மொழிபெயர்ப்பும் சில உள்ளன. உமர் கய்யாம் எழுதின கவிதைகளை ஒவ்வொரு ரசிகனும் படித்து இன்புறவேண்டும். காதல், மது —இவைகள்தான் உமரின்சுவர்க்கம். இதைவிட்டு விண்ணில் சுவர்க்கம் காண்போர் வீணர் என்பது அவனதுகருத்து. அவனது கருத்தெதுவோ அதைப் பற்றிய கவலை நமக்கு இப்பொழுது இல்லை. அக்கருத்துக்களை அவன் எடுத்துச் சொல்லும் முறையிலே ஒரு தனி இன்பம் இருக்கிறது. தன் காதலனைப் பார்த்துச்சொல்லுவதாக அமைக்கப்பெற்ற ஒருபாடல் வருமாறு:

மாதவிப் பூங்கொடி நிழலில்
மணிக்கவிதை நூலொன்றும்
தீதறு செந்தேன் மதுவும்
தீங்கனியும்—பக்கத்தில்
காதலிநீ பாட்டிசைத்துக்
கனிவோடு கூடுவையேல்
ஏதும் இனிக் கவலையில்லை;
இதுவன்றே பரமபதம்!

சிந்தனைக் களஞ்சியம் 1

இல்லற இன்பம்!

வாழ்க்கை என்ற இசைப் பயிற்சியில் கல்யாணம் என்ற அரங்கேற்றம் முடிந்துவிட்டால், அன்பு என்ற சுருதியில் நின்று, பொறுமை, பொறுப்பு ஆகிய பக்கவாத்தியங்களுடன், ஏற்றம், தாழ்வு என்ற மேல்ஸ்தாயி, கீழ்ஸ்தாயிகளிலும், சஞ்சலம், இன்பம், துன்பம், தகராறு முதலிய பற்பல வாழ்க்கை இராகங்களை அன்பின் சுருதியிலேயே இசைக்கத் தெரிந்துகொள்ள வேண்டும்.

இளமையும் இன்பமும் அழகும் நில்லாது சென்றுவிடும் என்று ஏங்கி அவன் பாடும் பாடல்களில் ஒன்றைக் கேளுங்கள்:

இளவேனில் ரோஜாவின்
இதழோடும் குவிவதுமே!
இளமைஎனும் மணம்வீசும்
ஏடுகள்தாம் மூடுதற்கே!
இளங்காவில் ராப்புள்ளின்
இன்னிசை எங்கு ஏகுவதோ!
வளங்கள் எலாம், ஐயையோ
மாய்ந்து ஒழிந்து போவதற்கே!

உலகெல்லாம் போற்றும் உமரின் கவிதைகளைத் தமிழிலே சுவைத்து இன்புறும் வாய்ப்பளித்த ச. து. யோகியாருக்கு தமிழுலகம் கடப்பாடுடையது. தானுகப் பல தனிப் பாடல்கள் எழுதியிருப்பதுடன் 'அகல்யா' என்ற தலைப்பில் அகல்யையின் புராணக் கதையை சிறிது மாற்றியும், 'மேரி மக்தலேனு' என்ற கிறித்துவக் கதையையும் சற்று விரிவாகவும் எழுதியிருக்கிருர். புனிதமான அகல்யையை வஞ்சம் செய்ய இந்திரன்வரும்பொழுது அவள் துயிலுகின்றநிலையை ஒரு அழகு ஓவியமாகக் காட்டுகிருர்:

ஓரத்தோர் நாணற்பாய்
மீதே உறங்குகிருள்
மூரல் கலேயாத
மோகக் கவிதைமகள்.
ஒற்றை அகல்விளக்கத்
தோளி இருளேக் காண்பிக்க
கற்றை இருள்நடுவோர்
கதிர்போலக் கண்வளர்ந்தாள்.
கூந்தல் புரள, கோல
முன்கைத் தண்டின்மேல்
ஏந்து தாமரை முகத்தில்
இனிமைக் கனிவூர
பெண்ணழகுத் தெய்வம்
பேரமைதியோ டுறங்கும்.

கவி தம் குழந்தை இறந்தபொழுது பாடிய 'கண்மணி ராஜம்' என்ற பாடல் உளத்தை உருக்குவதாய் அமைந்திருக்கிறது. அதில் ஒரு பகுதி:

கண்கொடுத்துக் கண்பிடுங்கக்
கடவுளுக்குக் கண்ணிலேயோ?
பெண்கொடுத்துப் பெண்பிடுங்கப்
பிழைஎன்ன செய்தேனே?
நானிருக்க, நானிலத்தில்
நடுங்கித் தளர்வெய்திக்
கூனல் கிழவர்களும்
கிழவியரும் கூடிநிற்க
அசட்டு விழியுடையார்
ஆபாசப் பேயுடலார்
கசட்டுநெஞ்சப் போக்கிரிகள்
கணக்கற்ருர் தாமிருக்க
சின்னஞ் சிறுவயதுச்
சிறுபாவை என்மகளேக்
கல்நெஞ்சக் காலன்
களவுகொண்டான் ஐயையோ!

சிந்தனைக் களஞ்சியம் 2

வாழ்வின் ஒளி!

எக்காரியத்திலும் அன்பின் அணைப்பும், அறிவின் ஆற்றலும், ஆத்மாவின் பண்பும், மனச்சாட்சியின் எடை போடுதலும் இருந்து அதன்படி சொல், செயல் இரண்டையும் சரிப்படுத்திக்கொண்டால் வாழ்வின் ஒளி எழிலுடன் பிரகாசிக்கும்.

மழையைப்பற்றி அவர் பாடும் பொழுது நம்முன்னே மழையே பெய்தாற்போன்றிருக்கிறது.

துடிதுடிக்குது வானம்—அதில்
இடிஇடிக்குது மேகம்
படி குதிக்குது, வெடி வெடிக்குது
கடுகடுக்குரல் காற்றடிக்குது
நடுநடுக்குது கூதல்—சுற்றிச்
சிடுசிடுக்குது காடு......

இவ்வாறே இன்பப் பாடல்கள் பல பாடியிருக்கிறார். 'மேரிமக்தலேனா'வில் மாத்திரம் பழமையின்தொடர்பு அதிமாகக்காணப்படுகிறது. இது அதன் சுவையை ஒருவாறு குறைத்துவிடுகிறது. 'தமிழ்க்குமரி' வெளியான பின் வேறு நூல்களை இவர் வெளியிடவில்லை. இவருடைய மற்ற கவிதைகளையும் தமிழ்நாடு எதிர்நோக்குகிறது.

இளங்கவிஞர் 'சோமு'வின் 'இளவேனில்' என்னும் நூலைக் கற்றோர் இவருடைய பாடல்களில் ஒரு தனித் தன்மையைக் கண்டிருப்பார்கள். இவரது பாடல் ஒவ்வொன்றும் முழுதும் கவனத்தோடு செதுக்கப்பட்ட நமது கோயிற் சிற்பங்களைப் போன்று இருக்கிறது. ஆழ்ந்து செல்லும் உள்ளத்தையும், முழுமையைத் தனது கவியிலும்காட்டும் பாங்கும் இவரிடம் காண்கிறோம். சொல்லும் பொருளும் இசையும் இணைந்து செல்லும் அற்புதமான சில கவிகளைத் தந்திருக்கிறார். 'ஒய்விலாக் காலம்' என்ற பாட்டில்

காலன் ஆழிசுழன் றாடுதம்மா-அது
காது துளைபடச் சாடுதம்மா
ஓலமிட் டேகாதில்
ஊதுதம்மா—தனக்(கு)
ஓய்வுதான் இல்லையேன்
றோதுதம்மா

என்று அவர் பாடும்பொழுது அதன் ஓசை நயம் நம் உள்ளத்தைக் கவருகின்றது. 'திருக்குற்றாலம்' என்ற பாடல் அபாரமாக அமைந்துவிட்டது.

வானை அளந்துநின்ற
மலைகளுண்டு—நல்ல
வாசமோடு தென்றல்உலா
வருவதுண்டு
தேனைச் சோரிந்திடும்பூஞ்
சோலைகண்டு—வாகாய்த்
தெள்ளியநீர் துள்ளிவரும்
ஓடைகளுண்டு

குற்றாலத்திலே குதித்து ஆடித் திரியும் குரங்குகளைக்கண்டு மகிழாதார் யார்? அவைகளைத்தாம் நமது கவிஞரும் சித்தரிக்கிறார்:

கோலக் குரங்கினங்கள்
கோடியங்குண்டு—தாயின்

சிந்தனைக் களஞ்சியம் 3

வெற்றியின் பாதை!

சந்தர்ப்பங்களால் இழுக்கப்பட்டுவிடுவதைவிட சந்தர்ப்பங்களைத் தன்னிலைக்கேற்பச் சரிசெய்துகொள்வதிலேயே வாழ்வின் வெற்றி அமைகிறது.

நினைப்பில் நடுக்கமின்மையும், செய்கையில்சரியாமையும்வெற்றியின் பாதையைப் பலப்படுத்தும்.

தும்பியிலே தொங்கிவரும்
குட்டிகளுண்டு
ஆலம் விழுதினூசல்
ஆடுவதுண்டு—மந்தி
அத்தனையும் அந்தரடித்
தோடுவதுண்டு

'எத்தனைஎத்தனையோ' என்னும் பாடல் உலகில் தோன்றித் தோன்றி மறையும் பொருள்களை எண்ணி இரங்குவதாக அமைந்திருக்கிறது. சோகமான அப் பாட்டின் முடிவு:

எத்தனை கனவுகள்
எத்தனை காதல்கள்
எத்தனை எத்தனையோ—நிதம்
எத்தனை இன்பம்
எத்தனை துன்பம்
எத்தனைஎத்தனையோ-நிதநிதம்
எத்தனை எத்தனையோ.

'பிரிவு' என்பது காதல்கொண்ட உள்ளங்களில் பிரிவுஏற்படுத்திய துயரைக் கூறும் அற்புதமான பாடல்,

நினைவிருக்க வேணும்—உன்மேல்
நேயம் இருந்ததென்ற
நினைவிருக்க வேணும்

என்று ஆரம்பித்து,

இருவரும் மணந்துகோண்(டு)
இன்பமாய் வாழ்வோமென்றே
கருதி யிருந்தோம் பல
கனவுகள் கண்டோமடி
பரிதியின் மேலுமந்தப்
பால்நிலா மேலுந்தானே
உறுதிகள் கோடி செய்தோம்
உன்மத்த ராயிருந்தோம்

என்று சொல்லுகிறது. அதன் முடிவில்,

இனிய கதைகளெல்லாம்
இனிநமக் கில்லையடி
இனிமேல்நீ இன்னொருவர்
இல்லத் துரிமையம்மா!

என்று முடிக்கும்பொழுது சோகத்தின்எல்லையையே நாம் எட்டிவிடுகிறோம். 'சித்தார்த்தன் துறவு','மதுக்கிண்ணம்', 'வெண்ணிலா', 'கைலயங்கிரியில்' முதலிய மற்றப்பாடல்களும் படித்து அனுபவிக்க வேண்டியவை.

புதுமைக்கவி பாரதிதாசனின் கவிதைகளைப் பலர் அவருடைய கட்சிச் சார்பு கருதியும், அவருடையகொள்கைகளைக்கொண்டும் ஒதுக்கி வைத்துவிடுகிறார்கள். கவிஞனுடைய கருத்தையோ, கொள்கையையோ நாம் ஒப்புக்கொண்டபோதிலும், ஒப்புக் கொள்ளாதபோதிலும், அவனுடைய கவிதையைப் படித்து அனுபவிக்க அவை தடையாயிருக்கவேண்டியதில்லை. 'எழுக புலவன்' என்று பாரதியாரால் வாழ்த்தப்பெற்ற இக் கவிமணியின் கவிதைகளிலே மங்காத அழகும், தங்குதடையின்றி எப். பொருளையும் எளிதில் அழகுபெறக் காட்டிச் செல்லும் செம்பாகமானநடையும், தமிழ்வளர்ச்சியில் ஆர்வமும், சமுதாயத்தை மாற்றியமைக்கும் நெறியில் ஒரு வெறியும் கனவிடக் காண்கின்றோம். 'தமிழின் இனிமை' என்ற பாடல் இவரது தமிழார்வத்தைத் தெள்ளென விளக்குவ

218.948

தோடு இவருக்கேஉரித்தான கவி தைப்போக்கையும் காட்டுகிறது.

கனியிடை ஏறிய சுளையும்—
முற்றல்
கழையிடை ஏறிய சாறும்
பனிமலர் ஏறிய தேனும்—
காய்ச்சுப்
பாகிடை ஏறிய சுவையும்,
நனிபசு பொழியும் பாலும்—
தென்னை
நல்கிய குளிரிள நீரும்
இனியன என்பேன் எனினும்
—தமிழை
என்னுயிர் என்பேன் கண்டீர்!

'பில்கணீயம்' என்ற நூலைத் தழுவி எழுதப்பட்ட 'புரட்சிக் கவி'என்னும் நாடகம் அழகான முறையில் அமைந்துவிட்டது. அதிலுள்ள வெண்ணிலாவின் வருணனையைப் படிக்கும்போது கவிதைவெள்ளம் கட்டுடைத்துப் பாய்கின்றஉணர்ச்சிதான் தோன்றுகிறது. அதிலே ஒரு பாட்டு:

அந்தியிருளாற் கருகும்
உலகு கண்டேன்;
அவ்வாறே வான்கண்டேன்;
திசைகள் கண்டேன்;
பிந்தியந்தக் காரிருள்தான்
சிரித்த துண்டோ?
பெருஞ்சிரிப்பின் ஒளிமுத்தோ
நிலவே நீதான்!
சிந்தாமல் சிதறாமல்
அழகை யெல்லாம்
சேகரித்துக் குளிரேற்றி
ஒளியும் ஊட்டி
இந்தாவென் றேஇயற்கை
அன்னை வானில்
எழில்வாழ்வைச் சித்திரித்த
வண்ணந் தானோ!

தமிழ் ஆவணக் காப்பக நூலகம்

இவர் வெளியிட்டுள்ள 'அழகின் சிரிப்பு' என்ற நூல் ஒவ்வொருவரும் படித்து இன்புறவேண்டிய நூல். அதிலே முதலாவதாக அமைந்திருக்கும் 'அழகு' என்னும் பாடலை எத்தனை முறை படித்தாலும் சலிக்காது. சிறு குழந்தை விழியினிலே ஒளியாய் நின்றாள்; திருவிளக்கிற் சிரிக்கின்றாள்'என்பன உள்ளத்தோடு உணர்வையும் கவருந் தன்மையாயிருக்கிறது. எளிதாகவும், அதே சமயத்தில் அழகும் இன்பும் பயந்துசெல்லும் இவரதுகவிதை நடையைப் படித்துத்தான் உணர வேண்டும். தென்றலைப்பற்றிச் சொல்லும்பொழுது,

எழுதிக்கொண் டிருந்தேன்,அங்கே
எழுதிய தாளும் கண்டாய்;
வழியோடு வந்த நீயோ
வழக்கம்போல் இன்பம் தந்தாய்
'எழுதிய தாளை நீஎன்

சிந்தனைக் களஞ்சியம் 4

வாழ்வின் இன்பம்!

வாழ்வின் இன்பம் செல்வத்தின் அடிப்படையில் அமைந்தால், செல்வம் சென்றால் இன்பமில்லை! இளமையின் பலியில் அமைந்தால் இளமை கசங்கி துவண்டுவிடும்!! மனம், வாக்கு, காயம் இவைகள் ஒன்றிய பண்பில் அமைந்தால் பலகாலம் இன்பத்தில் இனிதுடனும், துன்பத்தில் துணிவுடனும் வாழலாம்.

கிளப்பினை' என்று
கேட்டேன்
புழுதியைத் துடைத்தேன்
என்றாய்;
மீண்டும்நீ புணர்ந்தாய்
என்னை!



என்பது இவர் நடைக்கு ஓர் எடுத்துக்காட்டு. 'இன்றெல்லாம் பார்த்திட்டாலும் தெவிட்டாத எழிலின் கூத்து' என்னும் இவர் வாக்கு இவருடைய கவிதைக்கும் பொருந்தும்.

மேலும் 'துன்பம் நேர்கையில் யாழெடுத்துநீ இன்பம் சேர்க்க மாட்டாயா', முழுமை நிலா, அழகுநிலா முளைத்தது விண் மேலே பழமையிலே புது நினைவு பாய்ந்தெழுந்தாற்போலே' 'குடும்ப விளக்கு' என்ற தலைப்பின்கீழ் வரைந்திருக்கும் அழியாச் சொல்லோவியம் எல்லாம் என்றென்றும் இன்பம் பயக்கும் இன்னமுதப்பாடல்களாக இலங்குகின்றன. இவருடைய நடையிலே செய்யுள் நாடகங்கள் எழுதினால் எவ்வளவோ பலனுடையதாயிருக்கும். இவருடைய சில நாடகங்களில் கதைக்கோப்பு (Plot) மிகவும்எளிதாக அமைந்து நாடகத்தின் சிறப்பைக் கெடுத்துவிடுகிறது. இதைவிட்டு மேலைநாட்டு நாடக அமைப்பு முறையில் செய்யுள் நாடகங்கள் எழுதினால் மிகவும் நலமாயிருக்கும். கட்சிக்காகப் போராடும் பாரதிதாசனை சரித்திரம் மறந்துவிடலாம். சங்க காலத்தில் 'கந்தழி' என்ற மெய்யுணர்வையும், பின்பு முருகன், சிவன், கண்ணன்என்ற பல்வேறு இறைவடிவங்களையும் போற்றி வரும் தமிழகம் நாத்திகத்திற்காகப் போராடும் பாரதிதாசனை நினைத்திருக்குமா என்பது ஐயமே. ஆனால் இன்றமிழில் அழியாத சொல்லோவியங்கள் தந்த அழகுக் கவிஞன் பாரதிதாசனை தமிழகம் என்றென்றும் நன்றியொடு நினைத்திருக்கும்.

[கடவுள்]

காலேஜில்பரிச்சைகளுக்குப்பின் விடுமுறை விட்டிருந்தார்கள். திருநெல்வேலியிலிருந்து நண்பன் குருபாதத்துடன் தாமிரபரணி ஆற்றோரங்களில் உள்ள இடங்களைப் பார்த்துவரலாமென கேமிராசகிதம் கிளம்பினேன். நண்பனுக்குச் சொந்த ஊர் அந்தப் பக்கமுள்ளமேலப்பாளையம் அவனுடைய ஓயாத வேண்டுகோளுக்கிணங்கி அங்கு போய்ச் சேர்ந்தோம். நண்பனுடைய வீட்டிலேயே தங்கி பல இடங்களைப் போய்ப் பார்த்துவந்தோம்.

அன்று வெள்ளிக்கிழமை. வேறு எங்கும் செல்லவேண்டாமென்று, தன்வீட்டில் விருந்துகள் பண்ணச் செய்து, அங்கேயேதங்கும்படிவைத்துவிட்டான். ஆனால் சாயங்காலம் பெண்கள் ஆசிரமத்தில் ஏதோ விசேடம் என்றும், சென்று அங்கு பயின்றுவரும் தன் தங்கை கனகமணியைப் பார்த்துவரலாமென்றும் அழைத்தான்.

"ஆசிரமத்தில் உன்தங்கையா! என்னப்பா விசித்திரமாக இருக்கிறது. நீ காலேஜில் படிப்பதும், உன் தங்கை ஆசிரமத்தில் படிப்பதும்!"

"ஆசிரமம் என்றாலே ஏன் இந்த எண்ணம் எல்லோருக்கும் ஏகோபித்து உதயமாகிறதோ தெரியவில்லை. எல்லாம் பின்பு விளங்கும். முதலில் என்னுடன் வா. ஒன்றை கண்ணால்கூட பார்க்காமல் அதைப்பற்றி விருப்போ, வெறுப்போ கொள்ள ஆரம்பித்துவிடுகிறார்கள் பலர்"

"சரி சரி உன் வேதாந்தம் போதும். உன் இஷ்டப்படி உன்னை தொடர்கிறேன்"

ஆசிரமம்என்றால் காவியடித்த கட்டிடமும், அதைச் சுற்றிலும் சிறுசிறு குடிசைகளும் இருக்குமென்று எண்ணினேன். ஆனால் எதிர்பார்த்ததற்கு மாறாக இருந்தன! ஊருக்கு வெளியே ஒரு மைல்தூரம் தள்ளி, நவீன சாதனங்களுடன் பெரியதொரு மாளிகை இருந்தது. அதைச் சுற்றி விளையாட்டு அரங்குகளும், பின்னால் தனித்தனி அறைகள் அமைந்த ஒரு விடுதியும் இருக்

கக்கண்டேன். பல்வேறுபாஷை களும், விஞ்ஞானம் முதல் விவசாயம் வரை கற்பிக்கப்படுகிற தென்றும், "உலக இயல்பு" "வாழ்க்கை வளம்" போன்ற வகுப்புகளுக்கு அனைவரும் செல்லவேண்டுமென்றும், ஆசிரமத்தின் தலைவி பர்வதஅம்மையார் அதில் பேசுவார்கள் என்றும் தெரிந்தேன். சிறிதுநேரம் தங்கிவிட்டு நண்பனுடன் திரும்பினேன்.

"ஏன் வனாந்தரம் போன்ற இடத்தில் இந்த ஆசிரமம் வந்தது" என்று கேட்டேன்.

"அது ஒரு பெரிய கதை. இந்த ஆசிரமத்தின் அம்மையார் பர்வதத்தின் கைங்கரியம்தான் இவ்வளவும். தனது சொத்து அனைத்தையும் ஆசிரமத்தின் பெயரால் எழுதிவிட்டு, எளிய வாழ்க்கை நடத்திவருகிறார்கள்"

"ஏன் எதுவும் காதலில்தோல்வியடைந்து இந்தஉலகத்தையே வெறுத்துவிட்டார்களோ!"

"தோல்வியல்ல, காதலின் பெயரைச்சொல்லி சூழ்ச்சி திட்டமிட்ட ஒருவனிடமிருந்து விடுதலை அடைந்ததின் பலன்தான் இந்த ஆசிரமும் அவருடைய தொண்டும். இங்கு துறவறம் போதிக்கப்படவில்லை. இல்லறத்தில் வெற்றிபெறும்வழி போதிக்கப்படுகிறது. ஆண்களை வெறுத்துத் தள்ளும்படி சொல்லவில்லை அன்பின் அறநெறியால் ஐக்கிய வாழ்வு நடத்த பாதை வகுத்துக் கொடுக்கப்படுகிறது. நிரந்தர மற்ற அழகை நம்பி மோசம் போகவேண்டாமென்றும், மனம் போல வாழ்வு என்ற மந்தரம் போதிக்கப்படுகிறது. அழகு ரசிப்பதற்கே! அனுபவிப்பதற் கல்ல!! என்பதுதான் அவர்கள் கொள்கையின் அடிப்படை"

"எல்லாம் சரிதானப்பா...என்னமோ கதையென்றாயே அதை சொல்லு என்றால் அதை விட்டு விட்டு தேர்தல் பிரசாரம்போல் இடைவிடாமல் பேசிக்கொண்டு போகிறாயே!" என்று கேட்கவே நண்பன் ஆரம்பித்தான் பூர்வாசிரம கதையை.

* * * *

மேலப்பாளையம் 'மாடிவீட்டு' மருதைநாயகத்தைத்தெரியாதவர் அந்தப் பக்கத்திலேயே கிடையாது என்று சொல்லலாம். பரம்பரை பணக்காரர். வாரிசு வழி வழியாக வந்த சொத்து சுகத்துடன் வாழ்ந்துவந்தார். இரட்டையாகப் பிறந்த காளைகள்பூட்டிய வண்டியில், புறப்பட்டுவிட்டால் வண்டியின் சலங்கை சப்தமே மேலப்பாளையம் மிட்டாதார் கிளம்பிவிட்டார் என்று கலகலவென்று அறிவிக்கும். ஊரைச் சுற்றியுள்ள நிலபுலன்கள் அநேகமாய் அவரைச் சேர்ந்ததுதான். எத்தனை சொத்தும் சுகமும் இருந்தும் என்னபயன்? ஒரே ஒரு மகளைத்தவிர மைந்தன் இல்லாத குறையில்தான் இருந்துவந்

தார். அதுமட்டுமல்ல, புத்திர சந்தானத்திற்கு வழியில்லாதபடி கட்டின மனைவி காமாட்சிவேறு மஞ்சள் கயிறுடன் போய்ச் சேர்ந்தாள். தன் தாய்வழிமூலம் கிடைத்த அத்தனை திரண்ட சொத்தையும், நகைகளையும் அப்படியே எழுதிவைத்து, மகளை நல்லபடி கல்யாணம் செய்து வைக்கக் கேட்டுக்கொண்டு கண்ணை மூடினாள். தகப்பனாரின் திரண்ட சொத்திற்கும் வாரிசு பர்வதம்தான்! அவ்வளவையும் சேர்த்தால் இந்த வட்டாரத்திற்கே அவள்தான் ராணிஎன்று சொல்லலாம்.

வாழ்க்கையில் ஏதாவதுஒன்று அமோகமான அதிர்ஷ்டத்துடன் நிரம்பியிருந்தால் அதற்கு பங்கம் கொடுக்கும் வகையில் ஒருகுறை இருக்கத்தான்செய்கிறது! யாவும் இன்ப மயமாய் அமைந்துவிட்டால் அமர வாழ்வு என்றுதான் சொல்லவேண்டும். அதைத்தான் பூவுலகில் காணமுடியாதே! பொறாமையும், போட்டியும், சூழ்ச்சியும் சிக்கலும் நிரம்பிய இவ்வுலகில் மனிதன் எப்படி நிரந்தர நிம்மதியுடன் வாழமுடியும்? சொத்தும்சுகமும் இருந்து என்ன பயன்! பர்வதம் இன்பமாய் வாழமுடியுமா!! வெளிவேஷம், பகட்டை மதிக்கும் இவ்வுலகில் மகிழ்வுடன் வாழ முடியுமா? அத்தனையும்கொடுத்த ஆண்டவன் அவளை அழகுஎன்ற வார்த்தைக்கே இடமில்லாமல் படைத்துவிட்டான். பெண்மைக்குரியசாயல்கள் இருந்தனஎன்று சொல்லலாமேயொழிய பெண்மைக்குரிய மென்மை, கவர்ச்சி, அழகுஇல்லையென்றுதான் சொல்லவேண்டும். தாய்தந்தையர்கள் அழகாயில்லையா? அழகாகத்தான் இருந்தார்கள்! பின் ஏன் இப்படிப்பட்டகுழந்தை அவர்களுக்குப் பிறந்தது? இது யாவராலும் விடுவிக்க முடியாத ஒரு புதிர்தான்! அத்தனையும்கொடுத்து விலை மதிப்பிடமுடியாத அழகைக் கொடுக்காமல் அவன் வஞ்சித்துவிட்டான் அவளை. ஆடம்பரமான அணிகலன்களும், அலங்காரமான ஆடைகளும் ஒருவாறு நிவர்த்திசெய்ததுஎன்றுகூறலாம்.

* * * *

வியாபாரத்தில் விதவிதமாய்ப் பொருளீட்டிய 'புதுபணக்காரர்' பெருமாள்சாமி, தன் மைந்தன் மாணிக்கம் காலேஜ் படிப்பில் பி.ஏ. பட்டப் பரிச்சையில் தேறியதற்கு விருந்தளிப்பு ஒன்று ஏற்பாடுசெய்திருந்தார். மருதைநாயகத்தின் தலைமையில் நடக்க ஏற்பாடு செய்திருந்தது. பர்வதமும் சென்றிருந்தாள். இந்த சமயத்தில் கூட்டத்தில் இருந்தவர்களின் பேச்சு அவள் காதுகளில் விழுந்து துன்பத்தைக் கொடுக்கத்தான் செய்தது. 'யார் அந்த அவலட்சணம்! அதுக்கு இவ்வளவு அலங்காரமா!!' "சும்மா பேசாமல் இரு, அந்தப் பொண்ணு மிட்டாதார் மகள்—பெரிய இடத்துப் பெண்"

விருந்தளிப்பு முடிந்து 'முக்கியமானவர்கள்' மட்டும் பேசிக்கொண்டிருந்தார்கள் 'பெரிய பெரிய விஷயங்களை.' அந்தச் சமயத்தில்தான் மாணிக்கம் அங்குள்ள ஒவ்வொருவரையும் மருதைநாயகத்திற்கு அறிமுகம் செய்துவைத்தான். அந்தவரிசையில் 'ஷோக்'சுந்தரமும் ஒருவன். பேச்சில் கவர்ச்சியும், நடையில் மிடுக்கும், உடையில் வனப்பும் நிறைந்து விளங்கினான். கையில் அன்றாட வாழ்க்கைச்செலவிற்கு அவதிப்படும் நிலையில் இருந்தாலும் பிரபுத்துவ உலகில் பழகி வருபவன். கேலியான பேச்சும், வேடிக்கையான சொற்களும், பணக்கார வீட்டுப் பிள்ளைகளை மகிழ்வித்துவந்தன. பொழுது போவதற்குச் சரியான ஆசாமி என்று ஏதோ இவனுக்கு தீனி போட்டுக்கொண்டு வந்தார்கள். அறிமுகம் செய்துவைத்ததுதான் தாமதம். பேச்சில் தொடர்ந்து கொண்டான். மருதைநாயகத்தை மட்டுமல்ல,பார்வதத்தின்கல்யாண குண மகிமைகளைப்பற்றி சரமாரியாகப்பேசஆரம்பித்துவிட்டான். அவன் பேச்சை ஒருவகையாய் நிறுத்திவிட்டாலும், அவனுடைய மனதில் எழுந்த திட்டம் வேலை செய்ய தொடங்கிவிட்டது. எப்படியாவது பார்வதத்தை அடைய எண்ணினான்! அதற்குரிய திட்டத்தையும் சிந்தித்தான்! அவள் அழகி என்ற காரணமாய் இருப்பதற்கில்லை! கண்டதும் காதல் உண்டாகிவிட்டதுஎன்றும் கூறிவிடமுடியாது! பின்ஏன் அவளை அடைய எண்ணினான்? பெருவாரியான செல்வத்திற்கு உடைமைக்காரி அவள்! உடைமையைப் பற்ற கல்யாணம் செய்வதுதான் வழி!! அதற்கான பூர்வாங்க யோசனைகளை ஆரம்பித்தான்.

> ### சிந்தனைக் களஞ்சியம் 5
> **நன்மை பயக்காது!**
>
> பற்றற்ற உள்ளம், சிந்தனையில்லா மனம், பகுத்தறியா அறிவு, கருணையில்லாகடமை, செழுமையில்லா செயல், ஆண்மையில்லா வலிவு, வடிவமில்லா உருவம், தேவையில்லா தேட்டம் யாவும் நன்மை பயக்காது.........

எத்தனையோ பண்ணையார் வீடுகளில் பார்வதத்தை அடைய திட்டமிட்டிருக்கையில் தான் எப்படி அந்த கூட்டத்தில் தலைவனாக முடியும்! அவர்களும் தங்களின் பணத்தோடுபணத்தை சேர்த்துக்கொண்டு உல்லாசமாக வாழத்தான் அப்படிஎண்ணினார்கள். சம்பிரதாயத்திற்கு ஒரு கல்யாணம்! அதையும் பணம், சொத்துடன் அடைந்தால், அதைக்கொண்டு எத்தனையோ 'ரதிகளை' கண்டு களிக்கலாமே! பணத்தின்வலிமையால் அவர்கள் பணத்தைச் சேர்க்கப் பார்க்கிறார்கள். ஆனால் சுந்தரம் எந்த உதவியால் அவளை அடைய

முயற்சி செய்வான்? தன்னுடைய அலங்காரமான பேச்சு! அதுதான் யாவரையும் அவன் முன் மயங்கச்செய்துவிடுகிறதே! அதை அவளிடம் பிரயோகித்துவிட்டால்! இதுதான் அவனுடைய திட்டம். திட்டம் நிறைவேற பார்வதத்தை தனியாக சந்திக்கவேண்டுமே. அந்த சந்தர்ப்பத்தைத்தான் எதிர்பார்த்துக்கொண்டிருந்தான்.

இந்தச் சமயத்தில்தான் பார்வதத்திற்கு வயிற்றில் நோய்கண்டு அதற்குரிய ரணசிகிச்சைசெய்து வீட்டிலிருந்தாள். சமயம் மட்டுமல்ல சந்தர்ப்பமும் சுந்தரத்தின் திட்டத்திற்கேற்ப அமைந்தது. வருஷத்திற்கொருதரம் ஊருக்கு கிழக்கே நான்கு மைல் தூரத்திலுள்ள தங்களுடைய குலதெய்வத்தை மருதைநாயகம் வழிபடுவது வழக்கம். கும்பாபிஷேகமும்,கோலாகலமும் திமிலோகப்படும். வேடிக்கை, விநோதங்களைக் காண ஊரே அங்கு திரண்டிருக்குமென்றால் அது மிகையில்லை. டாக்டரின் கட்டளைப்படி பார்வதம் வீட்டிலேயே தங்கினாள் இதையறிந்த சுந்தரம் வீட்டினுள் நுழைந்தான்.

''தாங்கள் யார்?''

"என்னைத் தெரியவில்லையா! நான்தான் சுந்தரம்...அன்று பெருமாள்சாமியின் விருந்தளிப்பில் மாணிக்கம் அறிமுகம்செய்துவைத்தாரே! அதன்பின் இன்று டாக்டரிடம் சென்றிருந்தபொழுது தாங்கள்நோய்வாய்ப்பட்டிருப்பதறிந்து ஓடோடி வந்தேன்... அடடா எப்படிஇருந்த உடம்பு இப்படிப் போய்விட்டதே! உடம்புமெலிந்தாலும் தங்களின் அழகுதான் நிலைகுலையாது நிரந்தரமாய் இருக்கிறது''

"என்ன, நான் அழகாய் இருக்கிறேனா!''

"இருக்கிறேனா என்று கேட்கிறீர்களே! தங்களைப்பற்றி உங்களுக்கே தெரியாது! தாங்கள் அழகாய் இல்லையென்றால்...... அழகு என்ற சொல்லிற்கே அர்த்தமில்லைஎன்று கூறுவேன்'' இவ்வாறு வர்ணிக்க ஆரம்பித்தான். எந்தப் பெண்தான் தன் அழகைப்பற்றி வர்ணித்தால் மகிழ்ச்சியுடன் ஏற்காமல் இருப்பாள். அதுவும் அவலட்சணம் என்று எண்ணி ஏங்கிக்கொண்டிருந்த பார்வதத்திற்கு கிடைக்காத செல்வம் கிடைத்திருப்பதாக எண்ணி பூரித்தாள். இதிலிருந்துதான் ஆரம்பித்தது அவர்களுடைய சந்திப்பு. ஒவ்வொரு தடவையும் அவளைப்பற்றி வர்ணிப்பதுதான் அவனுடையவேலை

சிந்தனைக் களஞ்சியம் 6

நன்மை பயக்கும்!

......தன்னுள் அறிந்து, பிறருள் நோக்கி, பொதுவுள் பகுத்து, பான்மைமிகு செயல் பாங்குடன்செய்தால் எல்லோருக்கும் நன்மை பயக்கும்.

கடைசியில் இந்தச் சந்திப்பு மருதைநாயகத்திற்கு தெரியவந்தது. மகளின் மனது நோகக் கூடாது என்ற எண்ணத்துடனும், நிதானத்துடனும் கேட்டார். இதுவரை தந்தையிடம் எதையும் ஒளித்துப் பேசியறியாத பர்வதமும் ஒப்புக்கொண்டாள். இருவருடைய கல்யாண விஷயமாய் தான் யோசித்து முடிவு கூறுவதாகச் சொல்லிவிட்டு சுந்தரத்தின் பூர்வோத்திரம், நடைமுறை வாழ்க்கை நிலைமை யாவற்றையும்விசாரித்து, கடைசியில் அவனுடைய நோக்கம் எதுவாய் இருக்குமென்று ஊகித்தறிந்தார். பர்வதத்தை, அவனை மறந்துவிடும்படி சொன்னார். தன்னுடையவிருப்பத்திற்கு மாறாக தந்தை எதுவும் சொல்ல மாட்டார் என்று எண்ணிய பர்வதத்தின் மனம் களங்கியது. தன்னை முழு மனதுடன் காதலிக்கும் சுந்தரத்தை எப்படி மறப்பது! சத்தியம்வேறு செய்துவிட்டேனே என்று தடுமாறினாள். தந்தையிடம், தான் சுந்தரத்திற்கு வாக்குக்கொடுத்துவிட்டதைக் கூறி, அவனைப்பற்றி புகழ்ந்து கூறினாள்.

"பர்வதம், எல்லாம் எனக்குத் தெரியும். உன் மனதுப்படி நான் நடக்கவில்லைஎன்று நினைக்கலாம். ஆனால் உன் நன்மையைக் கருதி நான் இக்கல்யாணம் வேண்டாமென்கிறேன். அவன் உன்னை விரும்பியோ உன் அழகிற்காகவோ கல்யாணம் செய்ய விரும்பவில்லை. உன்னுடைய சொத்திற்காகவும், பணத்திற்காகவும்தான் உன்னை மணக்க விரும்புகிறான்" என்றுகூறினார்.

தந்தையிடம்பேசுகிறோம் என்பதைக்கூட மறந்து "காதலர்களுக்கு பணம் பிரதானமல்ல! அழகு லட்சியமல்ல!! குணம் தான் பெரிது"என்று கூறினாள்.

"எல்லாம் வெளிவேஷம்! உண்மையாக உன்னை நேசிக்கவில்லை! உன் நன்மையைக் கருதி சொல்கிறேன், அவனை மறந்துவிடு" என்று மீண்டும் சொன்னார். தன் மகளின் மனதை மாற்ற முடியவில்லையே என்ற வருத்தத்துடன் இருந்து வந்தார்.

'செல்வந்தரின் சம்பந்தம் இல்லையே, பணத்தோடு பணம் சேரவில்லை என்று பணத்தைப் பிரதானமாகக்கருதியே சுந்தரத்தை நிராகரிக்கிறார்' என்று எண்ணி

சிந்தனைக் களஞ்சியம் 7

கடமையும் இன்பமும்!

கடமை என்ற கரும்பலகையில், நேர்மை என்ற எழுதுகோலால், அறிவு என்ற சிற்பத் திறமை கொண்டு, நற்செயல் என்ற அழகு சித்திரங்களை உருவாக்கினால், சிற்பிக்கும், மற்றவர்க்கும் இன்ப அமுதாகவும், இதய கீதமாகவும் இருக்கும்.

னாள் பார்வதம். "பணம்! இது தான் என் வாழ்க்கையிலேயே உலகம் தெரியாதபடி தடுத்தது! இதுதான் இன்றும்என்னுடைய மனோரதம் ஈடேறாதபடி தடுக்கிறது" என்று சஞ்சலப்பட்டாள். இந்த சொத்துஎன்ற கோட்டையிலிருந்து, பணம் என்ற காவலாளியை தப்பி வெளியேறிவிட்டால் சுந்தரத்தோடுசுதந்திரமாய் வாழலாமென்று எண்ணினாள்.

தங்களுடையசொத்தும், பணமும் ஒன்றும் வேண்டாமென்று கடிதம் எழுதி வைத்ததுடன், நகைகள் அனைத்தையும் கழற்றி வைத்துவிட்டு கிளம்பினாள். சுந்தரத்திற்கும் கடிதம் எழுதி, தான் செல்வம்என்ற கோட்டையிலிருந்து, பணம் என்ற பாப மூட்டையை விட்டுவிட்டு, தூய்மையுடன் வெளிவந்து அவனிடம் அடைக்கலம் புகுவதாயும், இருவரும் உழைத்து இந்த உலகத்தில் வாழ்க்கை நடத்துவோமென்றும் குறிப்பிட்டநேரத்தில் வந்து சந்தித்து அழைத்துச் செல்லும்படி எழுதியிருந்தாள்.

சுந்தரம்கையில்கடிதம்கிடைத்ததும், 'இதுவா நம் திட்டம்! உழைத்துச் சாப்பிடலாமென்று கூறுகிறாளே!! இதற்கு இந்த அவலட்சணம்தானா தேவை' என எண்ணினான். இருந்தபோதிலும் பார்வதம் அணிந்திருக்கும் வைரநகைகளே லட்சக்கணக்கில் இருக்குமே என்ற எண்ணம் தோன்றவே அகப்பட்டவரை ஆதாயம்தானே என்று கிளம்பினான். காதலனைக் கண்டவுடன் பேரானந்தம்கொண்டாள். உலகத்திலேயே பெரிய அதிர்ஷ்டசாலி என்று எண்ணிப் பூரித்தாள். ஆனால் அவன்...ஏமாற்றமடைந்தான்! ஒருவித நகையுமில்லாமல் வந்திருந்த அவளிடமிருந்து நழுவ எண்ணினான். "பார்வதம் இங்கேயே இரு, ஒரு வண்டி கொண்டுவருகிறேன்" என்று சென்றவன் திரும்பவே இல்லை! காத்திருந்தாள்! பயன்!! வண்டிற்குரிய தேன் கிடைக்காவிட்டால் அது ஏன் புஷ்பத்தை நாடுகிறது!

காத்திருந்து பயன் இல்லையென்று நேரம் செல்லச்செல்ல உணர்ந்தாள். திரும்ப வீட்டிற்குச் செல்லவும் மனமில்லை. வெளியில் சென்று தேடவும் இயலாது. என்ன செய்வதென்று திகைத்து நிற்கையில் தோட்டக்காரனின் குடிசை பக்கத்தி

சிந்தனைக் களஞ்சியம் 8

வாழ்வில் கடமை!

கடமை என்ற கோயிலில் அன்புஎன்ற கடவுளை; திறந்த உள்ளம், தெளிந்த செயல் என்ற தூப, தீப நைவேத்தியங்கள்செய்து; நல்லெண்ணம், நல்வழி, நற்செயல் என்ற பரிநாமங்களை ஓதி; தியாகம், திண்மை வரங்களைப் பெற்றுக் கொண்டால் வாழ்வின் பின் வேண்டுவது என்ன?

விருப்பது ஞாபகம் வந்தது. அங்குசென்று தங்கினுள். இன்னும் வரலாமென்று நம்பிக்கை இருக்கத்தான் செய்தது. நேரம் செல்லச்செல்ல அதுவும் மடிந்து கொண்டு வந்தது.

மறுதினம் பங்களா சென்ற தோட்டக்காரன் திடுக்கிடும் செய்தியோடு திரும்பினுன். அன்று இரவு அவளுடைய கடிதத்தைப் பார்த்துவிட்டு, பிரக்ஞையற்றுவிழுந்த அவள் தந்தை படுக்கையில்படுத்தபடி ஏதேதோ பிதற்றிக்கொண்டிருக்கிருர் என்று கூறினுன். தந்தைக்கு—அன்புடன், சீரும், சிறப்புடன் வளர்த்த தந்தைக்குத் துரோகம் விளைவித்துவிட்டு அவர் முகத்திலேயே விழிக்க விரும்பவில்லை. இருந்தாலும் வீடு சென்று பின்னல் இருந்தபடியே கவனித்து வந்தாள். தான் வீட்டில்இருப்பதாகச்சொல்லவேண்டாமென்று வேலைக்காரர்களுக்கும் சொல்லியிருந்தாள். மருதைநாயகம் 'பர்வதம், பர்வதம்' என்று முணங்கிக்கொண்டிருந்தார். ஒரு தினம் அவள் வீட்டில் இருப்பதை எப்படியோ அறிந்து "பர்வதம் உன்னை ஒருதடவை பார்த்துவிட்டுச் சாகிறேன்" என மூச்செல்லாம் கொடுத்துக் கத்திஞர். பர்வதம் 'அப்பா' என்று அலறிக்கொண்டே அவர் காலடியில் விழுவதற்கும், "சுகமாய் வாழு" என்று அவர் கூறிக்கொண்டே உயிர்விடுவதற்கும் சரியாய் இருந்தது.

இதன்பின் அலங்காரத்தை வெறுத்தாள்! ஆடம்பரத்தை ஒதுக்கினுள்!! மீண்டும் அவளை தன்வயப்படுத்தலாமென்று சுந்தரம் முயன்றுபார்த்தான். அன்று இருண்டுவிட்ட இதயத்தில் காதல் ஒளி இல்லாமலே அஸ்தமித்துவிட்டது. தன்னுடைய வாழ்க்கையையேவெறுத்து, சீர்குலைந்து கிடக்கும் பெண்களை சீர்தூக்கிவிட, வாழ்விற்கு நல்வழிகாட்ட "பெண்கள் ஆசிரமம்" உண்டாக்கி, தன் திரண்ட சொத்துக்களையெல்லாம் அதற்காக எழுதி வைத்து இந்தத் தொண்டைச் செய்துவருகிருர்கள்.

* * * *

"எப்படியோ வாழ்க்கையில் ஏற்படும் ஏற்ற தாழ்வுகள் அவரவர்களுடைய எண்ண அலைகளுக்கேற்ப இயைந்து, முன்பின் செய்கைகளை கொள்கைகளுடன் வழிவகுக்கின்றன. அழகு பிரதானமல்ல ஐக்கிய இல்லற வாழ்விற்கு, அன்புதான் பிரதானம்! பணமல்ல இன்பமளிப்பது, பக்குவமான வாழ்க்கைதான் இன்பமளிக்கும்" என்ற கொள்கைகளை பிரதானமாகப் பரப்பிவருகிருர்கள்—என்று நண்பன் கூறி முடித்தான். "வாழ்க அவர் தொண்டு" என்று என்னையுமறியாமல் கூறினேன்.

★



சென்னைப்பட்டிணத்தில் இரவு பத்து மணியாகியது. கடற்கரையில் இப்போது கூட்டமில்லை. கடைகளை எல்லாம் முன்பே சாத்திவிட்டார்கள். போக்குவரத்து மிகவும் குறைந்துவிட்டது. சொந்தக்கார் வைத்திருப்பவர்களும் டாக்ஸியில் போவோரும்மட்டிலும் குறுக்கும் நெடுக்கும் நகரத்துத் தெருக்களில் இழைந்துகொண்டிருந்தார்கள்.

வானத்தை மேகங்கள் மூடிக் கொண்டன. சில்லென்று குளிர் காற்று வீசியது. விரைவில்வரப் போகும் மழைக்குஅஞ்சி, வழக்கமாகத் திறந்த வெளியில் கண் வளரும் பிச்சைக்காரக் கூட்டம், தங்கள் உடலை எங்காவது கூரையின்கீழ் கிடத்திக்கொள்ள ஒவ்வொருஇடமாய்த்தேடியலைந்தது.

பிச்சைக்காரர்கள்கிடக்கட்டும். அவர்களுக்கு வேறுவேலை கிடையாது. எப்போதும் இப்படித் தான் அவர்கள் எதற்காவது அலைந்துகொண்டு இருப்பார்கள். இன்றைக்கு இடம், நாளைக்குச் சோறு, அதற்கு மறுநாள் துணி ...அப்பாடா! இந்தத் தொல்லை பிடித்த மனிதர்களை விட்டுவிட்டு நாம் பெரிய மனிதர்களைக் கவனிப்போம்.

பெரிய மனிதர்கள் முப்பது பேர் அந்த வேளையில் மாம்பலத்தில் உள்ள விட்டல்ராமின் மாடியில் கூடியிருந்தார்கள். பங்களாவின் காம்பவுண்டுக்குள்ளும் அதற்கு வெளியிலும் அந்தப் பிரமுகர்களின் கார்கள் நின்றன. மழை வேகமாய்க் கொட்டத் தொடங்கியது. கார் டிரைவர்கள் கார்களுக்குள்ளேயே தங்களுடைய தேகத்தைப் பந்துபோல் சுருட்டிக்கொண்டு உட்கார்ந்தார்கள். அவர்களுக்குத் தங்கள் எஜமானர்களை வீடுகளில் விட்டுவிட்டுத் தங்கள் வீடுகளுக்கு இந்தக் கொட்டும் மழையில் நடந்துசெல்லவேண்டுமே என்ற கவலை. ஆயிரம் ஆயிரமாய்ப் பணத்தைக் கொட்டி வாங்கிய

கார் நனைகிறதே என்ற கவலை அவர்களுக்கு எப்படி வரும்? பணத்தருமை அதைச் சம்பாதித்தவர்களுக்குத்தான் தெரியும். மாடியிலிருந்த பிரமுகர்கள் பலர் மழை வந்தவுடன் தங்கள் கார்களை நினைத்துக்கொண்டார்கள்.

விட்டல்ராமின்பையன்ஜானகிராமனுக்கு இது முதல் ஆண்டு நிறைவுவிழா. இந்த விழாவைக் கொண்டாடுவதற்காக அவர் முக்கியமான சிலரை மட்டிலும் தம் வீட்டிற்கு அழைத்திருந்தார். ஏற்கனவே அவருக்கு நான்கு பெண் குழந்தைகள் இருந்தன; இந்தப்பையன்தான் அவருடைய குலத்தையும் பணத்தையும் வளர்க்க வந்த அருஞ்செல்வன்.

விட்டல்ராம் பெரியவியாபாரி; நல்ல பணக்காரர்; அரசியல், சமூக சேவை, பெண்கள் முன்னேற்றம் முதல் அவருடைய சொந்த சாதி வளர்ச்சிச் சங்கம் வரை அவர்பெயர் அடிபட்டது. அந்தக் கூட்டத்தில் இருந்த எல்லோர்பெயருமே அப்படித்தான். ஏதாவது ஒருவகையில் இல்லாவிட்டால் இன்னொரு வகையில் பத்திரிகைகளில் அடிபட்டுக்கொண்டே இருக்கும்.

இப்போதுள்ள அரசியலை ஆதரித்துப் பணக்காரர் ஆனவர் அங்கே இருந்தார்; இதே அரசியலைத் தீவிரமாக எதிர்த்துப் பொருள் தேடியவரும் அங்குதான் இருந்தார். இன்னும் அந்தக் கூட்டத்தில் கடவுளையும் மதத்தையும் புகழ்ந்து, படிக்காத ஏழைகளை ஏமாற்றிப் பிரமுகர்கள் ஆனவர்களும், கடவுளையும் மதத்தையும் இகழ்ந்து படித்த ஏழைகளை ஏமாற்றிப் பிரபலமானவர்களும் இருந்தார்கள்.

விருந்து பிரமாதமாக இருந்தது. ரேஷன் காலமாதலால் அரிசி உணவு அங்கு இல்லை. அரிசி வாங்குவதற்காக வெளிநாட்டுக்குப் பணம் போகக்கூடாது என்ற கண்டிப்பான கொள்கையுடையவர்விட்டல்ராம் ஆகையால் ரேஷன்சட்டத்திற்கு மதிப்புக் கொடுத்து, ஆஸ்திரேலியாவிலிருந்தும், அமெரிக்காவிலிருந்தும் தயாரான உணவுப் பண்டங்களை இந்த விருந்தின் போது வழங்கினார். வெண்ணெய் பிஸ்கட்டுகள், அன்னாசிப் பழத் துண்டுகள், பச்சைப் பட்டாணி—இன்னும் பெயர் தெரியாத பலவகை'டின்'பண்டங்கள்!

விருந்துக்குநடுநாயகமானஒரு வயதுப் பாபல் ஜானகிராம் தொட்டிலில் விரலைச் சூப்பியபடியே தூங்கிக்கொண்டிருந்தான். விருந்துக்கு வந்திருந்த பெண்மணிகள் சிலர் அவனை அப்படியேஉலுக்கி எடுத்துவிட்டார்கள். அடுத்த ஆண்டு நிறைவு வரும்வரை அவனுக்கு இதனால் ஏற்பட்ட உடல் வலி தீராதுபோலிருந்தது.

விட்டல்ராமும் அவர் மனைவியும் மேஜையின் ஒருமூலையிலும்,

மற்றவர்கள் மேஜையைச் சுற்றியும் இருந்தார்கள். சாப்பாடு முடிந்தது. சில பிரமுகர்கள் எழுந்து குழந்தையை மனமாற வாழ்த்தினர்கள்.

வாழ்த்து நடந்துகொண்டிருக்கும்சமயம் ஒரு முக்கியமான சமூகப் பிரச்னை அந்தஇடத்தில் திடீரென்று கிளம்பியது. பிரமுகர்களெல்லாம் ஒரேமுகமாய் வாழ்த்துப் படலத்தை மறந்துவிட்டு, அந்தச் சமூகப் பிரச்னையை விவாதிக்கத் தொடங்கினர்கள்.

மக்கட் பெருக்கத்தைப்பற்றிய சிக்கல்அது. அரிசி கண்ட்ரோல், துணி கண்ட்ரோல், வீட்டுக் கண்ட்ரோல் இல்லையா? இதைப் போல் குழந்தைக் கண்ட்ரோல் விஷயம் அது!

“நண்பர் விட்டல்ராமுக்கு இது ஐந்தாவது குழந்தை. நாட்டின் வளத்தில் நம்பிக்கை உள்ள அவர் இத்துடன் நிறுத்திக்கொள்வார் என்று நம்புகிறேன்” என்றார் ஒரு அறிஞர்.

இதைக்கேட்ட விட்டல்ராமின் மனைவி உடனே அந்தஇடத்தைவிட்டு உள்ளே எழுந்துசென்றாள். அவளுக்கு இப்போது ஏழுமாதம் என்று தெரிந்திருந்தால் அந்த அறிஞர் இப்படிப் பேசியிருக்க மாட்டார்.

“மக்கட் பெருக்கத்தைக் குறைக்க வேண்டியது மிகமிக அவசியம். ஆனால் அதற்கு வழி?” என்றார் இன்னொரு சீர்திருத்தவாதி.

“வழியா! இந்த இருபதாவது நூற்றாண்டில் வழியா இல்லை? விஞ்ஞானம் இருக்கிறது வழிகாட்ட!” என்றார் எந்தக் கஷ்டமான சிக்கலையும் விஞ்ஞான ரீதியில் அலசிப்பார்க்கும்ஒருவர்.

விஞ்ஞானத்தை அஞ்ஞானமென்று கருதும் இன்னொரு மதவாதி இதை ஒப்புக்கொள்ளவில்லை. “மக்கட் பெருக்கம் குறைய வேண்டும் என்பதை யாரும் மறுக்க மாட்டார்கள். ஆனால் அதற்கு வழி விஞ்ஞானமல்ல; பிரம்மஞானம்! புலனடக்கம் வேண்டும் ஸார், புலனடக்கம்!” என்றார் அழுத்தந்திருத்தமாக. அந்தப் புலனடக்கப் புண்ணியவானின் ஏழாவது பெண்குழந்தை அப்போதுஅவர் வீட்டிற்குத் தன்னுடைய நாலாவது பிரசவத்திற்காக வந்திருந்தாள்!

காரசாரமாகப் பேச்சு வார்த்தைகள் நடந்தன. இந்த அடிப்படையில் நாட்டு மக்களின் ஏழ்மையைப்பற்றியும், பகுத்தறிவைப்பற்றியும், பட்டினிச் சாவைப்பற்றியும் அவர்கள்உருக்கத்தோடு பேசித் தீர்த்தார்கள். நாட்டு வைத்தியர்கள் சிலர் எல்லா வியாதிகளுக்கும் தயாராக வைத்திருக்கும் ஒரே குளிகையான‘ சர்வரோகநிவாரணி’யைப் போல, உணவுப் பிரச்னைமுதல்

உலகயுத்தம்வரை தீர்க்கக்கூடியது இந்தக் 'குழந்தை கண்ட்ரோல்' தான் என்ற முடிவுக்கு எல்லோரும் ஏகமனதாய் வந்தார்கள்.

அங்கே இருந்த பெண்களுக்கு மட்டிலும் இதில் கொஞ்சம் வருத்தம். எல்லா ஆண்களுமே 'பரந்த நோக்கத்தோடு' தேசத்தின் நன்மையைப்பற்றியே பேசினார்களே தவிர, ஒருவராவது பெண்களுக்கு இதனால் எவ்வளவு நன்மை உண்டாகும் என்பதைக் குறிப்பிடவில்லை. சுமந்து பெற்கும் அநுபவத்தை அந்தப் பிரம தேவன் ஆண்களுக்கும் கொஞ்சம் அளித்திருந்தால், அவர்கள் இப்படிக் கண்மூடித்தனமாய் நடந்துகொள்வார்களா?

நேரம் ஆயிற்று. கூட்டம் கலைந்தது. பிரமுகர்கள் எல்லோரும் கட்சி வேறுபாடுகளையும், கொள்கை வேறுபாடுகளையும் மறந்து இந்தத்துறையில் ஒன்றுகூடி உழைப்பதாகத் தீர்மானத்துக்கு வந்தார்கள். பதினொரு மணிக்கு மேல் கார்கள் அந்த வீட்டைவிட்டு வெளியே கிளம்பின. மழை இப்போது இல்லை. வானம் தெளிவாக இருந்தது. மீன்கள் சிரித்தன.

இரவு ஒருமணி...

விட்டல்ராமின் பங்களாவிளக்குகள் அணைந்தன. வேலைக்காரர்கள் உறங்கிவிட்டார்கள். மாடியில் அவருடைய படுக்கையறையில் மட்டும் நீலநிற விளக்குக் கண்சிமிட்டியது. அவர் மனைவி அயர்ந்துபோய்க் கட்டிலில் படுத்திருந்தாள். அரைத் தூக்கம் அவளுக்கு.

"சீதா" என்றார் விட்டல்ராம்.

அவள் அவரை ஏறிட்டுப் பார்த்தாள். அவருடைய முகத்தில் அசட்டுச் சிரிப்புத் தெரிந்தது. அந்தச்சிரிப்பின் அர்த்தம் அவளுக்கு நன்றாய்த் தெரியும். கோபம் பற்றிக்கொண்டு வந்தது அவளுக்கு.

"உங்களுக்கு மூளையே கிடையாது! நீங்களும் உங்கள் விருந்தும்..."

"அதுகிடக்கட்டும் சீதா..."

"நாழியாகிறது; போய்த்தூங்குங்கள்! உங்களுடைய சிரிப்பைக்கண்டு ஏமாந்தால் இப்படி வருஷத்திற்கு ஒரு விருந்து வைக்கவேண்டியதுதான்"

மறு வார்த்தை பேசவில்லை விட்டல்ராம். அந்த நீலநிற விளக்கையும் அணைத்துவிட்டுத் தம்முடைய கட்டிலில் வந்து உட்கார்ந்தார். அரைமணிநேரம் ஆகியது. அவள் உறங்கிவிட்டாள். ஆனால் அவர் உறங்கவில்லை.

ஏதோ நினைத்துக்கொண்டவர் போல் கீழே இறங்கி வந்தார். கார் வாசல் தாழ்வாரத்தில் நின்றது. காரின் கதவைத் திறந்துகொண்டு உள்ளே உட்கார்ந்தார். காம்பவுண்டுக்கு வெளியே வந்த

வுடன் சின்னஞ்சிறு கருவண்டு போல் அந்த ஹிந்துஸ்தான்கார் வெளியே பறந்தது.

கார் பலரோடுகளில் திரிந்தது. கண்டவிடமெல்லாம் அலைந்தது. சமுத்திரக்கரைப் பக்கம் ஊர்ந்தது. குறுகலான சந்துகளுக்குள்ளெல்லாம் புகுந்து ஓரிடத்திலும் தங்காமல்—தங்க முடியாமல்—களைத்துப்போய்த் திரும்பவும் பங்களாப் பக்கமே வந்தது

காம்பவுண்டுக்கு வெளியே அடர்த்தியான ஒரு வேப்பமரம் உண்டு. காரின் வெளிச்சம் அந்தமரத்தடியில் பாய்ந்தபோது அங்கே ஒதுங்கிஉட்கார்ந்திருந்த ஒரு உருவத்தைப் பார்த்தார் விட்டல்ராம். காரைக் கண்டவுடன் பயந்துகொண்டே அது எழுந்துநின்றது. இப்போது நன்ருக அந்த உருவத்தை அவர் உற்றுப் பார்த்தார். அவள் ஒரு பெண்; கையில் தேவாங்கைப் போல் ஒரு குழந்தையை வைத்திருந்தாள். குழந்தைக்குப் பால் வாங்கக் காசு வேண்டுமென்று சென்னை நகரத்து ஹோட்டல் வாசல்களில் நின்று போவோர் வருவோரை வழி மறிக்கும் எத்தனையோ ஏழைத் தாய்ப் பெண்களில் அவளும் ஒருத்தி.

விட்டல்ராம் காரைவிட்டுக் கீழே இறங்கினர். சட்டைப் பையில் கையைவிட்டு ஒரு முழு ரூபாயை எடுத்தார். அவளிடம் சென்று, "இந்தா, ஒரு ரூபாய்; வைத்துக்கொள்" என்ருர்.

வெள்ளிப் பணத்தை இந்த உருவத்தில் அவள் இதுவரை கண்ணுல் மட்டும் பார்த்திருக்கிருள்; கையால் தொட்டதில்லை. ஆகையால், அவர் அந்தப் பணத்தைத் தொடுவதற்கு அவளை அநுமதித்ததற்காக அவள் அவர் தன் உடலைத் தொட அநுமதித்தாள்.

தேவாங்குக் குழந்தை மரத்தடியில் தாயாரைக் காணுமல் ஒருநிமிஷம் அலறியது.

அப்போது அந்தக் கருப்பு நிறக் காருக்குள் ஒரே இருட்டு.



காரின் வெளி விளக்குகளையும் அவர்முன்பே அணைத்துவிட்டார்.

அப்புறம்?

பத்து மாதங்கள் கழித்து அந்த வெள்ளிப் பணம் அந்தப் பிச்சைக்காரிக்கு ஒரு வெள்ளை நிறக் குழந்தையாகப் பிறந்தது. அந்தக் குழந்தையின் ஆண்டு நிறைவை யாரும் விமரிசையாகக் கொண்டாடமாட்டார்கள். யாரும் அதை வாழ்த்த மாட்டார்கள். யாருக்கும் விட்டல்ராம் இதற்காக ஒரு விருந்து வைக்கமாட்டார்.

அவருக்கு இப்படித் தம்முடைய அருமைக் குழந்தை ஒன்று, நடுத்தெருவில் அலறித் துடிப்பதற்காகவோ, கையேந்திப் பிச்சையெடுப்பதற்காகவோ, சொறிநாய்போல் சோற்றுக்கலைவதற்காகவோ, தொற்றுநோயை பரப்பித்திரிவதற்காகவோ அதே சென்னை நகரத்தில் எங்கோ ஒரு குப்பைமேட்டில் பிறந்து வளர்கிறது என்ற விபரம் தெரியாது.

நீங்களும் நானும் விட்டல்ராமும் இந்தநாட்டு மன்னர்கள் தாம். அந்தக் குப்பைமேட்டுக் குழந்தைகூட இந்நாட்டு மன்னன்தான்.

மகிழ்ச்சி

(சீர்திருத்த மாத இதழ்.)

ஆசிரியர்: நா. சதானந்தம்

★

ஆண்டுச் சந்தா
(தபாலில்)
ரூ. 2–4–0

தனி இதழ்
ரூ. 0–3–0

★

ஏஜண்டு இல்லாத ஊர்களுக்கு டிபாசிட் கட்டக்கூடிய ஏஜண்டுகள் தேவை!

★

எல்லா சுதேசமித்திரன் ஸ்டால்களிலும் மகிழ்ச்சி கிடைக்கும்.

★

மகிழ்ச்சி இல்லம்,
விருதுநகர்.

தி சென்ட்ரல் பேப்பர் மார்ட்,

48, கீழாவணிமூல வீதி,

ம து ரை .

நண்பர்களுக்கும் வாடிக்கையாளர்களுக்கும்
எங்கள் புத்தாண்டு & பொங்கல்
வாழ்த்துக்கள்

★

எங்களிடம் உள்நாடு &
வெளிநாடுகளில் தயாராகும்
அச்சாபீஸ்களுக்குத் தேவையான
ஆர்ட், பாண்டு, நியூஸ் பிரிண்ட் போன்ற
எல்லாவிதமான பேப்பர்கள், போர்டுகள்,
மற்றும் பலவித கல்யாணக் கார்டுகள்,
கவர்களும், மலிவான விலையில்
மொத்தமாகவும், சில்லறை
யாகவும் கிடைக்கும்.

THE CENTRAL PAPER MART,

48, East Avanimoola St.,

MADURAI.

புது வாழ்வு

ஓட்டைக் குடிசைத் தொழிலாளி—உளம்
ஒடிந்து விட்ட விவசாயி
கேட்டை நீக்கும் குடியரசும்—தையிற்
கிளர்ந்தெழ வேண்டிப் பாட்டிசைப்போம்!

அமுதப் பொங்க லருந்துகையில்—நம்
அருமைத் தோழர் பட்டினியில்
குமுறிக் கொதித்திடல் நினைத்திடுவோம்—அந்தக்
குறையும் நீக்க முயன்றிடுவோம்!

களத்தில் குவிக்கும் நெல்போல—நம்
கருத்தில் நிறைவு கூட்டிடுவோம்
உளத்தில் நன்மை பிறற்குதவி—தமிழன்
உண்மைப் பண்பை நாட்டிடுவோம்!

ஆகாப் பழமைகள் தகர்த்திடுவோம்—கலை
யாவினும் பிறரை நிகர்த்திடுவோம்
பாகில் இனிக்கும் பொங்கல்போல்—நாமும்
பண்பில் இனிய ராகிடுவோம்!

ஏழை எளியர் இல்லையாக்கி—மனிதர்
'எவரும் சரிநிகர்' என்பதாக்கிக்
கோழை படாச்செல் வமா(ம்)உழவை—வாழ்வில்
குறைவறப் பேணி வளர்த்திடுவோம்!

பொங்கல் நாளில் புதுவாழ்வு—தமிழர்
போற்றிப் புகழப் பெருவாழ்வாம்
எங்கணும் இன்பம் பொங்குகவே—நம்
இழிவு நீங்கிடப் பொங்குகவே!

—"ரவி"

மகிழ்ச்சிப் படகு

மகிழ்ச்சி மலர்—1952. போட்டோ: V. O. V. P. இராமமூர்த்தி.

லலிதா

அஞ்சலிதேவி

கடற்கரையிலே........

 போட்டோ: V. O. V. P. நாகரத்தினம்.

வடநாட்டு நடிகைகள்!

சுரையா

நர்கீஸ்

நிம்மி

விவாகரத்து

['கிளர்ச்சி' இரா. சு. தங்கப்பழம்—தூத்துக்குடி.]

"அவள் பேரழகி, அவளோடு வாழ மறுக்கிருன் அந்தத் தறுதலே. கட்டிய தாலிக்காவது ஒரு கௌரவம்கொடுக்கவேண்டாமா! ச்தா சப்பாணி மூக்குக்காரி வீட்டிலே அவனுக்கு ஜாகை, எப்படித்தான் மயக்கினுளோ அந்த சண்டாளி"

"இதைவிட புருஷனுக்கு எங்கே போகிறது; கண்நிறைந்த அழகு, கட்டுமஸ்தான உடல், கைநிறைய பணம் வைத்திருக்கிருன்—இந்தச் சிறுக்கிக்கு இவனேடுசேர்ந்து வாழமுடியவில்லையாம். ஆறுமாதம் அம்மாவீட்டிலும், மூன்றுமாதம் பாட்டிவீட்டிலும் கிடக்கிருள்"

"அட மானங்கெட்டவளே, குனிஞ்ச தலேய நிமிராம நடப்பாளே, கட்டை விரல்லதானே கண்ணு இருக்கும், அவளா இப்படி நடந்தா, எவளத்தான் நம்ப முடியுது"

"தங்கச்சிலே மாதிரி, வீட்டில ஒருத்தியை வச்சிக்கிட்டு அந்த தமுக்குக்காரியோட சுத்துருன் இந்த தடிப்பய"

இப்படியெல்லாம் சங்கதிகள் சதா நம் காதுகளில் அடிபட்டுக் கொண்டே இருக்கின்றன. சர்வ சாதாரணமாக நாலுபேர் பேச நாமும் கேட்டுக்கொண்டுதான் இருக்கிருேம். சமுதாயத்தில் இந்த வழக்கு நிகழ்ச்சிகள், சறுக்கு படலங்கள் ஏன் ஏற்படுகின்றன. எப்படி உண்டாகிறது என்பதை நாம் யோசிப்பதில்லே. யோசித்தாலும் ஒரு முடிவுக்கு வரமுடியவில்லே.

உடற்கூறு உள நூல்கள், மானிட மர்ம சாஸ்திரங்களைப் படித்துவிட்டா குப்பனும், சுப்பனும் வாழ்கிருர்கள்? "வாழ்க்கை ஒரு கலே" என்று பேணுவீரர் வர்ணிக்கிருர், பிரசங்கி சொல்மாரி பொழிந்துவிடுகிருர், கவிஞர் ஒரு காவியமே தீட்டிவிடுகிருர். எத்தனேபேர் இந்தக் கலே வாழ்வு வாழ்கிருர்களோ தெரியவில்லே—ஆனுல் அதிகம் பேர் வாழமுடியவில்லே என்பது மாத்திரம் நன்ருகத் தெரிகிறது.

அந்த வாழமுடியாமல் போனவர்களில் ரூபி—லூயிஸ், மறக்க

முடியாத தம்பதிகள்; உடைந்த கண்ணாடிகள்.

* * * *

தேவசபையின் முன்பு தம்பதியாகிக்கொண்டவர்கள் ரூபி—லூயிஸ். ஏசுவின் விசுவாசிகள், பக்தியுள்ள ஜீவன்கள், பரமண்டலத்தில் அசையாத பற்றுள்ளவர்கள், ஒழுக்கசீலர்கள், உத்தமத் தம்பதிகள்—தெருவாசிகள் எல்லோருமே இப்படித்தான் அவர்களைப்பற்றி பேசினர்கள்.

லூயிஸ் ஒரு ஆலைத் தொழிலாளி. தன்னுடைய வயதான தாய், வாழ்க்கைத் துணை ரூபி, இவர்களோடு தன் குடும்பத்தை நடத்திவந்தான்.

ரூபி—உண்மையிலேயே அவள் ரூபிதான். செயின்ட்பீட்டர் தெருவில் அவள் குடியேறிய பிறகு, துள்ளுமத காளைகள் துடுக்கு வாலிபர்கள் சிலர் ரூபியின் உள்ளத்தில் குடியேறிவிடுவதற்குப் பட்டபாடு, அலைந்த அலைச்சல்களை ஆண்டவன்(!)தான் அறிவார். அந்திசாய்கிற நேரம் ஆலையிலிருந்து திரும்பும் தன் லூயிசை எதிர்பார்த்து அவள் கதவடிவோரத்துக்கு வரும்பொழுது, உள்ளத்தையும்உடலையுமே சாயவிட்டு சமாளிக்கமுடியாமல் திரியும் பல 'கயஸ்'களை காணுவது கண்கொள்ளா காட்சியாக இருக்கும்.

இந்த காதற் போர்க்களத்தில், கொரிலா முறையைக் கடைப் பிடித்து கடுமையான கண் தாக்குதலை நடத்திவந்தவன் ஜேம்ஸ். அழகன் என்று சொல்லமுடியாது என்ருலும் ஆடம்பரக்காரன். பணக்காரன் இல்லை, ஆனல் பகட்டு, பணக்காரனைவிட பலமாக இருந்தது. சுருக்கமாகச் சொன்னல் லூயிசைவிட ஆளை மயக்குகிற ஆகர்ஷணசக்தி ஜேம்ஸிடம் அதிகமாகஇருந்தது டிப்-டாப் டெயிலரிங் மார்ட்டில் (Tip Top Tailoring Mart) வேலை பார்க்கும் ஒரு சாதாரண தையல்தொழிலாளிதான்ஜேம்ஸ்.

தெரு முனையில் குடியிருந்த ஜேம்ஸ் தன் தொழிலை நோக்கிப் போக தினம் நாலுமுறை ரூபியின் வீட்டைக் கடந்துதான் போகவேண்டும். ரூபியும் தினம் நாலுமுறை ஜேம்ஸை தவருமல் பார்த்துக்கொண்டே வந்தாள். அது ஏன் என்பது நமக்கு விளங்கவில்லை!

கண்களால் நடித்து, கடிதங்களால் பேசி அவர்கள் காதல் வளர்ந்துவந்தது. இந்த இடத்தில்தான் காதல் ஆராய்ச்சியும், உளநூல் சாஸ்திரமும் பலருக்கு புரியாது!

உற்பத்தியைப்பெருக்க வேலையில்லா திண்டாட்டத்தை ஒழிக்க சர்க்காரும் முதலாளிகளும் சேர்ந்து இரவு பகல் 24 மணி நேரமும் ஆலைகளில்வேலைவாங்க ஆரம்பித்தார்கள். லூயிசும், ஒரு வாரம் இரவு, ஒரு வாரம்

பகல் (Night & Day shifts) என்று மாறிமாறி வேலை பார்க்க வேண்டியது வந்தது.

ரூபி—ஜேம்ஸ் கள்ளச்சந்திப்புக்கு எத்தனையோ இரவுவாரங்கள் இனமாக தானம் செய்யப்பட்டன. பகல்வாரத்தில் லூயிசுக்கு பத்தினி, இரவு வாரத்தில் ஜேம்சுக்கு காதலி—ரூபி தனக்குத்தானே தயாரித்துக்கொண்ட கால அட்டவணை இது.

எத்தனை நாளைக்குத்தான் ரூபி இப்படியே காலத்தை தள்ள முடியும்? சர்க்காரின் ரகசியமே சந்திக்கு வந்திடும் பொழுது சாதாரண ரூபியின் சங்கதி வெளிக்கு வராமலா போய்விடமுடியும்? எதிர் வீட்டு ஏகாம்பரமும் பக்கத்து வீட்டு பாலம்மாளும் ஏதோ குசுகுசுவென்று பேசிக்கொண்டார்கள். அன்றைக்குமாலைதான் பாலம்மாள் புருஷன் சந்திக்கடையில் சாயாகுடித்துக்கொண்டிருக்கும்பொழுது அந்தவழியே போன ஜேம்ஸை ஒருமாதிரியாகப் பார்த்தான். அந்தப் பார்வையில் அடங்கிக்கிடந்த அர்த்த புஷ்டியை ஜேம்ஸ் எப்படித் தெரிந்துகொள்ள முடியும்?

கையாலாகாத காதலர்கள், ரூபியின் காதல் பரீட்சையில் தோல்வியடைந்துபோன இழந்த காதலர்கள் சிலர், இரவு நேரங்களில்கரித்துண்டுகளைக்கொண்டு, ரூபியைப்பற்றி சுவரெல்லாம் என்னவெல்லாமோ எழுதிப்போட ஆரம்பித்துவிட்டனர். எல்லாவற்றிற்கும்மேலாக, குழாயடிச் சண்டையில் கிளம்பிய வாக்கு வாதத்தில் 'மானங்கெட்ட மருமகளை அடக்க முடியல்ல, வாய் வேற பேசவந்திட்டியே' என்று லூயிசின் தாயாரிடத்தில் குப்பம்மாள் போட்ட குண்டுதான் மகாபயங்கரமாக வந்துமுடிந்தது.

இரவுவாரம்தான். இரவு 12 மணியிருக்கும். இன்பபுரியை நோக்கி ஜேம்ஸ் வந்தான். தகரக் கதவுத் தாழ்ப்பாளைத் தட்டிவிட்டான். எதிர்பார்த்து இருப்பதுபோல இரண்டாவது கதவு

திறந்தே இருந்தது. சரேலென உள்ளே போனான். ஆனால் படீரென்று கதவு வெளியேஇருந்து இழுத்துச் சாத்தப்பட்டது. அதைத் தொடர்ந்து 'ஐயோ கள்ளன் கள்ளன்' என்று பலமான சத்தம்.

ஆ...ஓ...என்ற அலறல்கள், பிடி விடாதே என்ற கர்ஜனைகள். ஊர் கூடிற்று உள்ளே, அகப்பட்டுக்கொண்டான் ஜேம்ஸ். லூயிசின் தாயார்தான் இந்தச் சண்டமாருத வேலையைச் செய்தவள் என்பதை ஜேம்ஸ் எப்படி தெரிந்திருக்க முடியும்? வழக்கம்போல சுருண்டு படுத்து சுகமாக தூங்குவாள் அந்தக் கிழவி என்றுதானே அவன் நினைத்திருப்பான்!

கதவைத்திறந்து கையும் மெய்யுமாக ஜேம்ஸை பிடித்தார்கள். ஒரு நிமிஷத்தைக்கூட வீணாக்கி விடாமல் அடியும் உதையும் சரமாரியாக நடந்தது. கட்டி இழுத்து ஜேம்ஸைப் பிடித்து வெளிச்சத்தில் கொண்டு நிறுத்தினார்கள்.

பக்கத்து வீட்டு பாலம்மாள் புருஷன், இடிஇடியென்று பலமாக சிரித்தான். "ஓ இவனா! இவன் பொன்னு, பொருளு திருட வந்திருக்க மாட்டானே, பொண்ணத்தான் திருடவந்திருப்பான்" என்று ஒரு கிண்டலை கிளப்பினான். ஏகாம்பரம் புருஷன் வந்தான், "அடசே, இது இன்னைக்கு நேத்து நடக்கிற சமாச்சாரமா, எவ்வளவோநாளா நடந்துகிட்டுத்தானே இருக்கு" என்றான்.

இந்த குழப்படி, கூப்பாடுகளெல்லாம் நடக்கும்பொழுது, ரூபி எங்கும் ஓடி ஒளிந்து கொள்ளவில்லை. ஓரமாக நின்று எல்லாவற்றையும் கவனித்துக் கொண்டுதான் இருந்தாள். ஒரு பெரிய மனிதர் வந்தார், "ஏம்ப்பா வீணா கத்தறீங்க, என்ன்தான் நடந்ததுன்னு விசாரிப்போமே ஏண்டா, தம்பி, இந்த நேரத்தில நீஏண்டா இந்த வீட்டுக்குள்ள வந்தே" என்றார். ஜேம்ஸ் வாயைத் திறக்க ஆரம்பித்தான். "நான் ஒண்ணும், திருட வரல்லிங்க, ரூபிதான் வரச்சொல்லியிருந்தா, அதனாலதான் வந்தேன்" என்றான். எல்லோரும் ரூபியைப்பார்த்தார்கள். ரூபி, "ஆமென்" என்று கூறுவதுபோல அமைதியாகநின்றாள்.

"ஐயா, எல்லா புண்ணியவான்களும் சேர்ந்து, இந்த சிறுக்கி, என் மகளையும் குடும்பத்தையும் கெடுக்கவந்த சண்டாளி கழுத்திலகிடக்கிற தாலியையும் நகையையும் மட்டும் கழட்டிக்கிட்டு, அவள அவனோடையே விரட்டிருங்க" என்றாள் லூயிசின் தாயார். அப்பொழுதும் மௌனமாகத்தான் நின்றாள் ரூபி.

ஒரு புதிய மனிதர் வந்தார், "மணி $1\frac{1}{2}$யாகப் போவுது; அவ புருஷன் இப்ப மில்லிலஇருந்து வந்திருவான். இந்தப்பயலஅடிச்சு விரட்டிருங்க அல்லது அவன் வந்தான்னு ஏதாவது பழிபாவம் வந்து சேர்ந்திரும்" என்றார்.

ஜேம்ஸ் விரட்டப்பட்டான். ரூபிக்கு ஊரார்உபதேசம்செய்து கொண்டிருந்தார்கள். சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி ஜாடை மொழியில் தங்கள் வாய் வரிசைகளைக் காட்டிக்கொண்டிருந்தார்கள் சில பெண்கள்.

லூயிஸ் வந்துசேர்ந்தான். மனைவி மாற்றானோடு போன சங்கதியை எப்படி மற்றவர்கள் அவனிடம் மனந்துணிந்து கூறுவார்கள்! தெளிவு சுளிவாக அவன் தாயார்தான் அந்த சோக கட்டத்தைவிளக்கினாள். லூயிஸ் துள்ளவில்லை; துடித்துவிடவுமில்லை; ரூபியை துண்டு துண்டாக வெட்டிவிடவுமில்லை.

*   *   *   *

மறுநாள், தேவசபையின் முன்பு, கிறிஸ்துவ சம்பிரதாயப்படி விசாரணை நடந்தது. ரூபி இனிமேல் லூயிசுக்கு மனைவியாக இருக்கத் தகுதியற்றவள் என்று தீர்ப்பளிக்கப்பட்டது. ரூபி அப்பொழுதும் மயங்கி கீழே விழுந்துவிடவில்லை.

*   *   *   *

உற்றார் உறவினர் தூண்டுதலின்பேரில் இரண்டு மாதங்களுக்குப்பிறகு ஜீவனாம்சம்கோரி, ரூபி, லூயிஸ்மீது ஒருவழக்குத் தொடர்ந்தாள்.

விவாகரத்துக்கு அடிப்படையான விபச்சார நிகழ்ச்சியை, ஏகாம்பரம், பாலம்பாள், புருஷர்களை சாட்சியாகக் கொண்டு வாதாடினான் லூயிஸ். ரூபி அப்பொழுதும் மறுத்துவிடவில்லை. ஆனால், "லூயிஸ் எனக்கு கணவனாக இருக்கத் தகுதியற்றவன்" என்று ஐந்து வார்த்தைகளை மாத்திரம் சொன்னாள். அங்கும் "விவாக ரத்து"தான் தீர்ப்பாக இருந்தது.

இப்பொழுது ரூபி, எங்கோ ஒரு கிறிஸ்துவ மடத்தில் இருக்கிறாளாம்! ★

நடக்காதது!	நடப்பது!
ஒருவனோ அல்லது பல ஆடவரோ நன்கு ஆடை அணிந்து பாதையில் சென்றால் எந்தப் பெண்ணும் அவனை அழகு பார்த்துக்கொண்டு பின் தொடர்ந்து செல்லமாட்டாள். ஆனால்......	ஒரு வேற்றுப் பெண்ணோ, பலபெண்களோ அழகுற ஆடை அணிந்து சென்றால், அவர்கள் போகும் இடம்வரைக்கூட கொண்டு சென்று விட்டுவரும் ஆடவர்கள் இருக்கிறார்கள்.

V. கண்ணையா, பி. ஏ.,
Assistant Secretary, Local Administration Department, Madras.

பொங்கல் என்றாலே எங்கும் புதுமணம் கமழ்கிறது. தமிழ்நாட்டில் தனிப்பெரும் தொழில் வழி வகுத்த விழா பொங்கல் என்று கூறலாம். எதாவது தொழிலை ஆரம்பிக்கலாமென்று யாராவது பெரியவர்களிடம் சென்று சொன்னால் "எல்லாம் தை பிறக்கட்டும், ஆரம்பிக்கலாம்" என்று பதில் சொல்லி அனுப்புவார்கள். ஒன்றும் தொழில் இல்லையே, எங்கும் வேலை கிடைக்கவில்லையே என்று கலங்கிக் கொண்டிருப்பவர்களைப் பார்த்து "தை பிறந்தால் வழி பிறக்கும்" "தை பிறந்தால் தரித்திரம் நீங்கும்" என்றெல்லாம் சமாதானமாகக் கூறுவதைப் பார்த்திருக்கிறோம். இதை வெறும் சமாதான வார்த்தைஎன்று மட்டும் சொல்லிவிட முடியாது. அதில் உண்மையும், உட்கருத்தும் அடங்கித்தான் இருக்கிறது.

பொங்கலின் உண்மை தாத்பரியத்தை அறியவேண்டுமானால் சிறிதே கிராமப் பக்கம் சென்று கவனிக்கவேண்டும். பச்சைப்பசேரென்ற பசுமையான பயிர்களும், அறுவடைக்குத் தயார்என்று கதிர்களுடன் காட்சியளிக்கும் நகரங்களில் பொங்கலைப்பற்றி என்ன தெரிந்து கொள்ளமுடியும்! ஏதோ சம்பிரதாயத்திற்காக 'பொங்கல்வாழ்த்து' என்று ஒருவருக்கொருவர்பரிமாறிக் கொள்கிறார்கள். தொழில் வழி

வகுத்த, இயற்கையோடு இணைந்த இந்த திருவிழா நான்கு தினங்கள் கொண்டாடப்பட்டு வந்தன. தற் சமயம் இதன்முக்யத்வம் குறைந்து கொண்டுவருகிறது. இவ்விழாவின் தாத்பரியம், கொண்டாடுவதின் கோட்பாடுஎன்னவென்பதை சிறிது ஆராயலாம்.

போகிப் பண்டிகை:

"உழவிற்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்" என்று பாடினார் பாரதியார். உழவிற்கு ஆதாரம் மழை. மழையில்லையேல் விளைச்சல் இல்லை. வானம் பொய்த்தால் வையத்தில் பஞ்சமும் பசியும்தான் நிலவும். மழையின் பெருமையை அறிந்துதான் திருவள்ளுவரும் கடவுள் வாழ்த்திற்கு அடுத்து "வான் சிறப்பு" என்று மழையின் பெருமையைக் குறித்து பாடியிருக்கிறார்.

"செய்யாப் பெருங்கடல்
நீர்சென்று புயல்முகந்து
பெய்யாக் கொடுக்கும் பிறர்க்கு"

என்று இரண்டு அடிகளில் எவ்வளவு அழகாகப் பாடியிருக்கிறார். மழை வருகிறதென்றாலே மக்களுக்குக் குதூகலம்தான். மழையின் முற்குறிகளை எவ்வளவு தெள்ளத் தெளிய ஆராய்ந்து வைத்திருந்தார்கள் என்று பின்வரும் பாடலிலிருந்து அறியலாம்.

"ஆற்றுவெள்ளம் நாளைவரத்
தோற்றுதேகுறி—மலை
யாளமின்னல் ஈழமின்னல்
சூழமின்னுதே
நேற்றுமின்றும் கொம்புசுற்றிக்
காற்றடிக்குதே—கேணி
நீர்ப்படு சொறித் தவளை
கூப்பிடுதே
சேற்றுநண்டு சேற்றுவளை
ஏற்றடைக்குதே—மழை
தேடிஒரு கோடி
வானம்பாடி பாடுதே"

மேலும் மழை (குளிர்) காலம் மார்கழி மாதத்தோடு முடிவடைகிறது. ஆகையால் இது மழைக்கால முடிவு விழாவாகும். முடிவடைந்த மழைக்கு நன்றி செலுத்தி பிரிவு உபசாரம் செய்ய ஏற்பட்ட விழா என்று கூறலாம்.

பெரும் பொங்கல்:

தற்காலத்தில் இந்தப் பொங்கல் தான் எங்கும் விமரிசையாகக் கொண்டாடப்படுகிறது. இயற்கையோடு இயைந்த இறைவனை வழி பட்டார்கள் தமிழர்கள். காலையில் கதிரவன் எழுமுன் எழுந்து, வயலில் புது நெல், புதுக்கரும்பு, புது மஞ்சள், புதுக்கிழங்கு, புதுவாழை அனைத்தையும் அறுவடை செய்து பொங்கலிட்டு, சூரியனுக்குப்படைத்து கொண்டாடிவந்தார்கள். மழை மட்டுமல்ல, வெயிலும் இருந்தால் தான் பயிர் நன்றாக கதிர்விட்டு வளரும். ஆகையால் பெரும் பொங்கல் பொங்கி சூரியனுக்குப் படைத்து உண்டு களித்தனர்.

இந்தப் பொங்கலை சூரியன் தென் திசை போக்கை நிறுத்தி வடதிசை திரும்பும் தினத்தில், அதாவது கோடைகால ஆரம்பநாளில் கொண்டாடுகிறார்கள். இந்த தினமே உத்திராயண ஆரம்ப தினம். இதைப் பெரும்பொங்கல் என்றும், சூரியன் பொங்கல் என்றும். அறுவடை திருவிழா என்றும் கூறுவதுண்டு.

மாட்டுப் பொங்கல்:

அடுத்தபடியாக உழவர்களுக்கு உறுபயனாகஉள்ளது ஆடு, மாடுகள்.

மேழிச் செல்வம்தான் நாட்டின் உண்மையான செல்வம் என்று கருதப்பட்டது. நிலத்திற்கு உரத்தை அளிக்கின்றன. உழுவதற்கு உபயோகப்படுகின்றன. கிணற்றிலிருந்து கவலைமூலம் தண்ணீர் இறைக்க உபயோகப்படுகின்றன. விளைந்த பயிரின் கதிர்களிலிருந்து விளைமணிகளைப் பிரிக்க உபயோகப்படுகின்றன. விளைந்த தான்யங்களை வண்டிகளில்ஏற்றி நாட்டிற்குக்கொண்டு வரவும் சாதனமாய் இருக்கின்றன. இவைகளைத்தவிர ஆவின்பால் அனைவருக்கும் ஆரோக்கிய உணவாக இருக்கிறது. இவ்வளவு நன்மைகளையும், கஷ்டங்களை கிஞ்சித்தும் பொருட்படுத்தாது கடும் வெயிலிலும், மழையிலும் உழைக்கும் கால்நடைகளுக்கு "மாட்டுப் பொங்கல்" என்று ஏற்படுத்திக்கொண்டாடிவருவது தமிழர்களின் நன்றி மறவாத தன்மையை நன்குபுலப்படுத்துகிறது மாட்டுப் பொங்கலன்று மாடுகள் அலங்காரம் செய்யப்பட்டு யதேஷ்டையாய் எங்கும்செல்ல அவிழ்த்து விடப்படுகின்றன.

கன்னிப்பொங்கல்:

கனப் பொழுதில் காரியங்களைச் சாதிக்க நினைக்கும் இக்காலத்தில் கன்னிப் பொங்கல் சிறிது சிறிதாக முக்யத்வத்தை இழந்துவருகிறது. கன்னிப் பொங்கலன்று சிற்றிளம் பெண்கள் கூட்டமாகக்கூடி கும்மியடித்துக்கொண்டு ஆற்றங்கரைக்குச் செல்கின்றனர். அங்கேயே மனம் போனபடி விளையாடிவிட்டு, கூட்டுப் பொங்கல் செய்து ஆற்றுக்குப் படைத்து, சாப்பிட்டுச் சாயங்கால மாக வீடுதிரும்புகிறார்கள்.

மழை பெய்யத் தவறினால், ஜீவ நதிகள் எக்காலத்திலும் பயிர்கள் வளர தண்ணீர் கொடுக்கின்றன. ஆற்றின் பெருமையை அறிந்து, அதைப் பயன்படுத்த, பல்லாண்டுகளுக்கு முன்னமேயே காவேரி நதியை ஐம்பெரும் பிரிவுகளாகப் பிரித்து "கல்லணை"யை சோழ மன்னன் கட்டினான். நதிகளைக் கன்னிகள் என்று அழைப்பது தமிழர்களின் மரபு. நவகன்னிகள் என்றும், சப்த கன்னிகள் என்றும் போற்றிவணங்கிவந்தார்கள். தமிழ் நாட்டிலுள்ள கோயில்களில் கன்னியம்மன்விக்கிரகங்களை ஆராய்ந்தால், நதிகளுக்கு அவர்கள் கொடுத்த முக்கியமும், கன்னிப் பொங்கலின் மகத்துவமும் நன்கு புலப்படும்.

ஆகையால் பொங்கல் பண்டிகை இயற்கையின் நிழலில், தொழில் வழி வகுத்த திருவிழாவாகும். தொழில்களின் மூலப் பொருளும், வாழ்வின் அன்றாட தேவையான உணவுப்பொருளும் உழுது பயிரிடுதலால் கிடைக்கின்றன. அவைகளின் இன்றியமையாத ஆதாரங்கள் மழை, சூரியன், கால்நடைகள், வற்றாத ஆறுகள் இவைகளுக்கு நன்றி செலுத்தவே பொங்கல் பண்டிகை தமிழர்களால் ஏற்பட்டது என்று கூறலாம். புதுமணம் கமழும் புனித பொங்கலைப் போற்றி வணங்குவோமாக!

நாடோடிக் கதைகள்

[நாரண-துரைக்கண்ணன்]

"ஒரு ஊரிலே ஒரு ராஜா வாம். அந்தராஜாவுக்கு இரண்டு பிள்ளைகளாம்......" இப்படி பாட்டிமாரிடம் கதைகள் கேட்காத பிள்ளைகளே இருக்க முடியாது. சிறிது வயதாகி எழுதப் படிக்கத் தெரிந்தபின், "முன்னொரு காலத்திலே அளகாபுரி தேசத்திலே அமரேசன் என்ற அரசன் இருந்தான்" என்பது போன்ற நாடோடிக் கதைகள் நம் முன்னர் குவிந்து 'படியுங்கள், படியுங்கள்' என்று ஆவலைத் தூண்டிக்கொண்டிருக்கும். நாம் பிறந்ததிலிருந்து இதுவரை எத்தனை பேரிடம் எத்தனைவிதமான கதைகளைக் கேட்டுவந்திருக்கிறோம். பாட்டிமாரும் அத்தைமாரும் மற்றவர்களும் கதைகதையாக நமக்குச் சொல்லிவந்த கதைகளுக்குத்தான் கணக்குண்டா? இக்கதைகளெல்லாம் ஏட்டிலா வந்திருக்கின்றன? இவை எழுதாத இலக்கியமாகத்தான் எத்தனையோ காலமாக இருந்து வருகின்றன; பரம்பரையாக வழங்கப்பட்டு வந்திருக்கின்றன; காலம்மாறினாலும் தாம் மாறாமல் தலைமுறை தலைமுறையாக வழங்கிச் சிரஞ்சீவித் தன்மையைப் பெற்றிருக்கின்றன என்பதை நினைத்துப் பார்க்கும்போது ஆச்சரியம்உண்டாகிறதல்லவா? இவ்விதம் என்றென்றும் இவை உயிருடன் உலவி வருவதற்குக் காரணம் என்ன என்று யோசித்துப் பார்த்தால் கதைப்போக்கின்சிறப்பும் கற்பனாவளமும் வார்த்தைகளின் வலிமையும்தான் காரணமாகும் என்பது நமக்குப்புலனாகும்.

'தேவேந்திரனால்கொடுக்கப்பட்ட ஆயிரத்தெண் மாற்றுறையுடைய நவரத்தினகசிதமுள்ள முப்பத்திரண்டு பிரதிமை சூழ்ந்த சிம்மாதனத்தைப் பெற்றுப் பிரமகுலமாகியவேதாளத்தையே வாகனமாக்கிக் கொண்டு இரண்டாயிரம்வருடகாலம்காடாறு மாதம் நாடாறுமாதம் அரசுசெய்து முடிவில் சாலிவாகனனால் உயிர் இழந்தார்'

என வருணிக்கப்படும் விக்கிரமாதித்தன் கதையை எத்தனை முறை எத்தனை பேரிடம் நாம்

கேட்டிருப்போம்; படித்திருப்போம். ஆனாலும்,

"அகோ வாரும் போஜமகாராஜரே! எங்கள் வீராதிவீர விக்கிரமாதித்த மகாராஜனும் பட்டியாகிய மந்திரியும் யாதொரு குறைவுமின்றி விரதப்படி முதலில் இச்சிம்மாதனத்தில் நாடாறு மாதத் தவணையிருந்து இராஜரீகஞ்செய்யும்நாளையில் அந்த உச்சிமாகாளி நகரத்திற்கு இருகாத வழிக்கப்புறம் ஆரணிய வனத்தில் காளிகா தேவியென்றொரு அம்மனுண்டு. அந்த அம்மன் சந்நிதிக்கு நேர் அரைநாழிகை வழி தூரத்தில் ஒரு முருக்கமரம் இருந்தது. அம்முருக்க மரத்தில் ஒரு வேதாளமானது தலைகீழாய்த் தொங்கிக்கொண்டிருந்தது" என்றும்,

"அப்போதுமுனிவன் அரசனைப் பார்த்துசந்தோஷித்து வாருமையா விக்கிரமாதித்தனே! உம்மையழைத்த காரியம் இந்த வனத்தில் ஒரு முருக்கமரத்தின்மேல் உயர்ந்த கிளையில் ஒரு வேதாளம் தொங்குகின்றது. அது யாவர் கையிலும் அகப்படாது. நீர் மிகப் பலவானாகையால் உமது கையில் அகப்படும். அதை எப்படியாவது உபாய தந்திரத்தினால்பிடித்துக் கட்டிக்கொண்டு வந்து என் முன்னே விடவேண்டுமென்று சொல்ல, அப்படியே கொண்டுவருகிறேனென்று விடைபெற்றுக்கொண்டு மகா விசாலம் பொருந்திய வனாந்திரத்தில் முருக்கமரத்தைத் தேடிப்போகையில் அம்மரத்தில் உயர்ந்த கிளையில் தலைகீழாய்த் தொங்குகின்ற வேதாளத்தைக் கண்டு பிடித்துக் கட்டித் தோளின்பேரில் வைத்துக்கொண்டு வருகையில் வேதாளமானது சொல்லும்: கேளுமையாராஜனே! நமக்கு வழி தொலையவேண்டும். ஆகையால் அதற்கொரு கதை சொல்லுகிறேன் நீர் விடை கொடுக்க வேண்டும்" என்றும் கூறப்படும் கதையைப் படிக்கும்போதுவிக்கிரமாதித்தன் விடை கொடுக்காவிட்டாலும், 'சொல்வேதாளமே கேட்கிறோம்' என்று நமக்குச் சொல்ல ஆசை தோன்றுகிறதன்றோ!

கூடுவிட்டுக் கூடுபாயும் இந்த் விக்கிரமாதித்தன் கதையைப் போலவே, நமக்குக் கேட்க— படிக்க— ஆவலுணர்ச்சியைத் தூண்டும் மற்றொருகதை 'மதன காமராஜன் கதை.' மந்திரிகுமாரனால் சொல்லப்பட்ட பன்னிரண்டு கதைகளிலும் 12 விதமான குணச் சித்திரங்களை—கதையின் விசித்திரப் போக்கை—காதல், வீரம், அதிசயம், சோகம் முதலிய சுவைகளை—நாம் பார்க்கிறோம். மந்திரிகுமாரன் தன்னை அணைய வந்த இளைய இராஜகுமாரியின் காதலை மாற்றுவதற்காகச் சொன்ன 'பூனைக்குட்டி வளர்த்த கதை' என்ற இரண்டாவது கதையில் வரும் ஒரு சிறு காட்சியைப் பார்ப்போம்:

"இராஜ குமாரன் முத்துப் பல்லக்கைவிட்டு இறங்கி நாகலோகத்தாரை அனுப்பிவிட்டு, காட்டில் சில தூரம் நடந்து ஆதிசேஷன் கொடுத்த கணையாழியின் திறத்தையறியலாமென்று கருதி பரமசிவனை நினைத்து அக்காடெல்லாம்பஸ்மீகரமாக எரிந்துபோகக்கடவது என்று நினைத்தான். நினைத்தமாத்திரத்தில்

இராஜகுமாரன் இருந்த இடம்தவிர மற்ற வனமெல்லாம் பஸ்மீகரமாக வெறும் பூமியாயிற்று. உடனே இராஜகுமாரன் கண்டு மகிழ்ந்து ஐந்நூறு காதவழி அகல நீளமுள்ள ஒரு நகரம் மாட மாளிகை கூட கோபுரம் முதலியவையோடு உண்டாகவேண்டுமென்று நினைத்தான். அப்படியே உண்டாயிற்று. உடனே இராஜகுமாரன் கண்டு அந்த நகரத்திற்கு நிஷதபுரியென்று பெயரிட்டு தன்னைப் பாதுகாத்துவந்த நகரத்துக்குடிகள் இங்கு வரவேண்டுமென்று நினைத்தான். பூனையும் தாயும் வந்துசேர்ந்தார்கள். இராஜகுமாரன் தன் நகரத்திலிருக்கிற மந்திரி பிரதானி முதலியவர்கள் இங்கு வரவேண்டுமென்று நினைத்தான்.. அப்படியே வந்துசேர்ந்தார்கள். தான் அரசனாகி மகுடாபிஷேகம் பெற்று குடிகளையழைத்து, உங்கள்கருத்துக்கிசைந்தபடி உழுது பயிரிட்டுச் சீவனஞ் செய்துவாருங்கள். என்னைப் பாதுகாத்து வந்ததற்குப் பிரதியுபகாரம் இதுதான் என்று கூறி அவர்களுக்கு வேண்டியவற்றைஉதவி கிரமமாக இராஜ்ஜிய பரிபாலனம் செய்துவந்தான்.

மந்திரி குமாரன் பெயரில் மறைந்து நின்று பாமரரஞ்சகமாகக் கதைகளைச்சொல்லியுள்ள இந் நாடோடிக் கதாசிரியன் யாரோ? ஆனால், அவன்சொல்லி விட்டுச்சென்ற கதைகளில் அப்படியே நாம் மனத்தைப் பறிகொடுத்து விடுகிறோம். இது போன்றே நாலுமந்திரி கதை, தமிழறியும்பெருமாள் கதை என்று எத்தனையோ நாடோடிக் கதைகள் கணக்கில்லாமல் நம் நாட்டில்வழங்கிவந்திருக்கின்றன கர்நாடகப் போக்கில் உள்ள அக் கதைகளை நவநாகரீகம்மேலோங்கியிருப்பதாகச் சொல்லும் இந்த இருபதாம் நூற்றாண்டில்கூட விழுந்துவிழுந்து படிக்கும் எண்ணற்ற மக்களை நம் நாட்டில் எங்கும் காணலாம். இவ்விதம் மக்களுக்கு மிகப் பரிச்சயமான இக் கதைகளில் பல, வெள்ளித்திரையில் விதவிதமான பெயர்களில் வெளிவந்திருப்பதை நீங்கள் அறிவீர்கள்.

நாடோடிக் கதைகள் வசன ரூபத்தில் மட்டுமில்லை. பாட்டு வடிவத்திலும் பலஇருக்கின்றன. அல்லிஅரசாணி மாலை, பவளக் கொடி மாலை, புலந்திரன் களவு மாலை, நல்லதங்காள் கதை, ஆரவல்லி சூரவல்லி கதை, காத்தவராயன் கதை, மின்னொளியாள் குறம் போன்றவைகளை அவைகளில் முக்கியமாகக் குறிப்பிடலாம். இக்கதைகளை யார் பாட்டாகப் புனைந்து பரவவிட்டது என்று யாருக்கும் தெரியாது. ஆனால், நளன் சரித்திரத்தை வெண்பாவில் அற்புதமாகப்பாடி, 'வெண்பாவில் புகழேந்தி' என்று நல்லிசைப் புலவர் பெருமக்கள் பலரால் வியந்து பாராட்டப் பட்ட புகழேந்திப்புலவர் பாடியதாக பிரசுரிக்கப்பட்டுப் பரவி வருகின்றன. என்ன காரணத்தாலோ தங்கள் பேர் ஊரைத் தெரிவிக்காமல், பிறர் பெயரால் தங்கள் கதைகளையும் கவிதை

களையும் உலவி விட்டிருக்கிறார்கள் அந்தக்காலத்து நாடோடிப் புலவர்கள். அத்துடன் அவர்களிடம் இன்னொரு விசேஷத்தையும் நாம்பார்க்கலாம். அவர்கள் சிருஷ்டித்து சிரஞ்சீவித் தன்மையுடன் நிலவ விட்டிருக்கும் கதைகளை முழுதும் கற்பனைப் பாத்திரங்களாகவேபுனையாமல், சரித்திர நாயகர்கள், இதிகாச, புராணங்களிலுள்ள புருஷர்களைப் பாத்திரங்களாகக் கொண்டும் அமைத்திருக்கிறார்கள். அதனால் அவர்கள் கதைகளுக்கு இன்னும் வலிமையும் உணர்ச்சியும் ஏற்பட்டிருக்கிறது. அந்த வகையைச் சேர்ந்ததுதான் தேசிங்குராஜன் கதை. செஞ்சிக்கோட்டைக்கு அதிபதியாகிய ராஜாதேசிங்கு மோவுத்துக்காரன் என்னும் முஸ்லிம் நண்பன் துணையோடு டில்லி பாதுஷாவை எதிர்த்துப் போராடியதைப்பாடியிருக்கிறான் யாரோ ஒரு பாவலன். அதை வாய்விட்டுப் பாடினால்தான் அதன் அழகையும் ரசனையையும் நாம் அனுபவிக்க முடியும்.

"முப்பது குதிரைக்குச்
சர்தாரையா மோவுத்துக்காரனும்
நவாபு பாளையத்தைத் திரும்பிப்
பார்த்தான் மோவுத்துக்காரனும்
கண்ணாலே கண்டதுங் கோப
மாச்சுது மோவுத்துக்காரனுக்கு
இடது காலுக்குச் சிமிட்டா
கொடுத்தான் நீலவேணிக்கு
காகரவென்று சுழன்று
வருகுது நீலவேணிக்குதிரை
ராஜாமுன்னே சுற்றிவந்தான்
மோவுத்துக்காரனும்
குதிரையை விட்டுக் கீழே
குதித்தான் மோவுத்துக்காரனும்
மண்டி போட்டுச் சலாம்
வாங்கினான் மோவுத்துக்காரனும்
நானொருசேதி சொல்கிறேன்
கேளும் ராஜாதேசிங்கு
முதற்சண்டைக்கு உத்தாரம்
தாரும் ராஜாதேசிங்கு
சந்தோஷமாக உத்தாரம்
தாரும் ராஜாதேசிங்கு
முதல்யூகத்தி லிருந்தானையா
சுபங்கிதுரை தானும்
கடைசியூகத்தி லிருந்தானையா
நவாப்பு சைதுல்லா
இரண்டுபேரையும் வெட்டிக்
கெலிக்கிறேன் ராஜாதேசிங்கு
அந்தப் பேச்சைக் காதிலே
கேட்டான் ராஜாதேசிங்கு
கலகலவென்று சிரித்தானையா
ராஜாதேசிங்கு
என்னபேச்சுப் பேசினாயடா
மோவுத்துக்காரா நீ
அண்ணனுமில்லே தம்பியுமில்லே
மோவுத்துக்காரா நீ
கையிற் கங்கணம் கட்டி
யிருக்கிறாய் மோவுத்துக்காரா நீ
சண்டை முகத்தைப் பார்த்
தறியாயே மோவுத்துக்காரா நீ
ஒண்டியாய் சண்டை பண்ண
வேண்டாம் மோவுத்துக்காரா நீ
நானும்நீயும் புகுந்து வெட்டுவோம்
மோவுத்துக்காராநீ"

இந்தப் பாடல் அடிகளில் பிரமாதமான கவிதாநயமும் சொல்லழகும் இல்லாவிட்டாலும் உணர்ச்சி பாவம் நிறைந்திருக்கிறது என்பதை யாரும் மறுக்க முடியாது.

'கட்டபொம்மன் கதை' யும் இதுபோன்றதுதான்.

"வானம் பொழியுது பூமி விளையுது
வரிப்பணம் கட்டுவது
என் வெள்ளையர்க்கு"

என்று வில்லுப்பாட்டில் கோஷ்டியாகக் கூடிக் கிராமங்களில் பாடுவதை இன்றைக்கெல்லாம் நாம்கேட்டுக்கொண்டிருக்கலாம். செவிமடுத்துக் கேட்போருக்கு அவ்வளவு உணர்ச்சிப்பெருக்கை ஊட்டும்.

எட்டில்எழுமலே வாய்மொழியாகவே நாடு முழுதும் வழங்கி வந்தாலும், இந்த நாடோடிக் கதைகளில், பெரியகாவியங்களில் இதிகாசபுராணங்களில் உள்ளது போல, அந்தந்தக் காலத்து மக்களின் பண்பாடு, வழக்க ஒழுக்கங்கள், கலைநாகரிங்கள் முதலியவை ஓரளவேனும் பிரதிபலிப்பதை நாம் பார்க்கலாம். மனித சமுதாய நிலையைப் படம் பிடித்துக் காட்டும் காலக்கண்ணாடிகள் தாம் கலை இலக்கியங்கள் என்ற உண்மைக்கு மேற்குறித்தது போன்ற நாடோடிக் கதைகளும் இலக்கணமாக இருக்கின்றன. வேதம், உபநிஷதங்களிலுள்ள உண்மைகளும் தத்துவங்களும் கூட இந்நாடோடிக் கதைகளில் பொதிந்திருக்கின்றன.

இதுபோன்ற நாடோடிக் கதைகள் நம் நாட்டில் மட்டும் இல்லை. உலகிலுள்ள மற்ற நாடுகளிலும் ஏராளமாக இருக்கின்றன. பிருஹத்ஜாதகக் கதைகள், ஈசாபு தேசத்துக் கதைகள், பர்ஸியக் கதைகள், அராபியக்கதைகள் ஆகியவைகளை இங்கு முக்கியமாகக் குறிப்பிடலாம்.

விக்கிரமாதித்தன்கதை, மதன காமராஜன் கதை தினுசில்தான் அராபியக் கதைகள் போன்றவை அமைந்திருக்கின்றன. மந்திரி குமாரன் தன்னைக் கூடிக் களிக்க விரும்பும் இரு இராஜகுமாரிகளின் கவனத்தை வேறுவழியில் திருப்ப ஒவ்வொரு இரவும் கதைகள் சொல்லிக் காலங்கழிப்பது போல்தான் அராபிக்கதையிலும் வித்வ விவேக யுக்திக்கு வித்தாகிய மந்திரி குமாரி யொருத்தி ஷாரேயரென்னும்பாதுஷாவுக்கு ஆயிரத்தொரு நாள் இரவில் கதை சொல்லி, அவன் அன்றாடம் ஒவ்வொரு பெண்ணைக் கலியாணஞ் செய்து சேர்ந்து பின் கழுத்தை வெட்டி வந்த கொலை பாதகத்தை நிறுத்தினாள். பிறநாட்டு நாடோடிக்கதைகளில் அராபிக் கதை பலவகையிலும் சிறப்பு வாய்ந்தது. அதன் கதைச் சிறப்பை மேனாட்டு அறிஞர்கள் பலர் புகழ்கின்றனர்.

அப்பேர்ப்பட்ட சிறந்த அராபிக் கதைகளில் ஒரு சிறு சம்பவத்தைப் பார்ப்போம்.

"இவ்வாறாக அவர்களிருவரும் அரண்மனையைவிட்டு ரகசியமாகப் புறப்பட்டு பகல் முழுவதும் நடந்து அன்றிராத்திரி ஓர்சோலையில் படுத்திருந்து உதயமாகுமுன் எழுந்திருந்து கடற்கரையோரத்தில் புல்லும்

புனலுமுள்ளதாய் பெரிய விருக்ஷங்கள் தழைத்திருக்குமிடத்தில் வந்து ஒருமரத்தினடியில் இளைப்பாற உட்கார்ந்து பேசிக்கொண்டிருக்கும் போது சமுத்திரத்திலேயிருந்துண்டான ஒரு பயமும் நடுக்கமுமுள்ள இரைச்சலைக்கேட்டுப் பயந்தார்கள். அப்போது சமுத்திரம்பிளந்து அதிலிருந்து பெரிதானகருநிறம்போன்ற ஸ்தம்பம்போலொன்றெழும்பி மேகமண்டலமளவும் அளாவிநிற்க இவர்கள் விரைவிலெழுந்திருந்து ஒரு மரத்திலேறி ஒளித்துக்கொண்டு இரைச்சலுண்டானதையும் சமுத்திரம் பிளந்த இடத்தையும் பார்த்துக் கொண்டேயிருக்கையில் அந்தப் பெரிய கறுத்தஸ்தம்பமானது கரையைநோக்கி அசைந்தாடிக்கொண்டு வரக் கண்டபோது அதைஅவர்கள் இன்னதென்று தெரிந்துகொள்ள மாட்டாமல் சற்று நேரம் சென்ற பின்பு மனிதர்களுக்குக் கொடிய சத்துருவாய் எப்பொழுதும் தீங்கு செய்துகொண்டேயிருக்கிற துஷ்ட பூதங்களில் ஒன்றாயிருக்கக் கண்டார்கள். பின்பு கறுத்த நிறமாயும் பயங்கரமுள்ளதாயுமிருந்தது. அப்படிக்கொத்த பூதம் எழுகினுற் செய்யப்பட்ட நான்கு பூட்டிட்டிருக்கும் பெரிதான ஒரு கண்ணாடிப் பெட்டியைத் தன் தலைமீது வைத்துக் கொண்டு இந்த ராஜபுத்திரர்கள் பதுங்கிக்கொண்டிருக்கும் மரத்தினடியில்வந்தொதுங்கி அதைஇறக்கி வைக்க, அதைக் கண்டவர்களிருவரும் இன்றிறந்தோமென்றெண்ணிக்கொண்டார்கள். அவர்கள் அப்படியிருக்க, அந்தப் பூதம் அப்பெட்டியினருகில் உட்கார்ந்து தன் அரையில் கட்டிக்கொண்டிருந்த நான்கு சாவியையும் அவிழ்த்து அந்தப் பெட்டியைத் திறக்க அதிலிருந்து நிறஞ் சிறந்த வஸ்திராலங்காரமுள்ளவளாயும் இராஜ வடிவு கொண்டவளாயும் நிறைந்தஅழகுள்ளவளாயும் இருக்கிற ஒரு ஸ்திரீ வெளியில் வந்தாள்.........''

இதுபோன்ற கற்பனைக் களஞ்சியங்கள்—கதைச் சுரங்கங்கள் எழுதாதஇலக்கியங்களாக எழில் பெற்றுவிளங்குகின்றன. ஆனல் இந் நாடோடிக் கதைகளில் பெரும்பாலானவை பொழுது போக்குக் குரியனவாயிருக்கின்றனவேயொழிய, அறிவு விருந்தாய்—சிந்தனையைத் தூண்டுவனவாய்—மனிதனின் சிறந்த பண்பைப் பிரதிபலிப்பனவாய்—வாழ்க்கைக்குவழிகாட்டுவனவாய் இல்லை என்பதை இங்கு சொல்லாமலிருக்கமுடியவில்லை. இவற்றில் உயர்ந்த கொள்கையுடையோரையும் குணச் சிறப்புடையோரையும் உன்னத லட்சியங் கொண்டோரையும் காண்பது அரிதாக இருக்கிறது. கலையும் இலக்கியமும் காமுகர் காணும் கனவுகள் என்று யாரோ பிதற்றி விட்டுப் போனது அராபிக் கதைகள் போன்ற நாடோடிக் கதைகளை மனதிற்கொண்டுதான் போலும் என்று எண்ணவேண்டியிருக்கின்றது.

அச்சும் தாளும் எழுதுகோலும் புழங்கும் இக்காலத்தில் எழுதாத இலக்கியங்கள் ஏற்படுவதற்குச்சாத்தியமில்லையானலும் நாடோடியாகக் கட்டிவிடப்படும்

கதைகள் எதிர்காலத்திலும் ஏற்படும்என்றே நம்புகிறேன். அவ்விதம்ஏற்படும் நாடோடிக் கதைகள் மனிதப் பண்பை—மனித நாகரிகத்தின் தலை சிறந்த பாரம்பரியத்தை—பிரதிபலித்துக் காட்டி, நல்லியற்கையும் நல்லெண்ணமும்நல்லுணர்ச்சிகளும் ஏற்படுத்தி, நம் நாட்டு இலக்கியத்தில் மகோன்னத நிலையை உண்டாக்க வேண்டுமென்றே நான் விரும்புகிறேன். முடியாட்சிக் காலத்தில், இராஜா, மந்திரி, இராஜகுமாரன், இராஜகுமாரத்தி கதைகள் ஏற்பட்டது இயற்கை. எங்கும் குடியாட்சியேற்பட்டுவரும் இக்காலத்தில் மக்கள் எண்ணங்களுக்கும் பேச்சுக்கும் செயலுக்கும் மதிப்புக் கொடுக்கப்பட வேண்டுமென்று அவாவியிருக்கும் இக்காலத்தில் உழவன், தொழிலாளி போன்ற பாட்டாளி வர்க்கத்தின் ஆசாபாசங்களை அழியாச் சித்திரங்களாக்கிப் புதுமை இலக்கியத்தை நாடோடிக் கதைகளிலும் ஏன் உண்டாக்கக்கூடாது?

★

[சென்னை ரேடியோ நிலையத்தில் நிகழ்ந்த 'எழுதாத இலக்கியம்' என்ற தொடரில் இரண்டாவது சொற்பொழிவு இது.]

எக்காலத்தும் மாறுதவை

"கோபுர மார்க்"

தீப்பெட்டிகளே!



சைடு மருந்து
தண்ணீருக்குக் கலையாது.
50 டிக்கிரி பாரன் ஹீட்டில்
குச்சிகள் கழிவில்லாமல்
பொருத்தக்கூடியது.

★

The Southern India Match Co.,
SIVAKASI.
Tel:- "SIMCO"

Tel: PAANA. Phone: 83.

V. O. V. PALANISWAMY & SONS,

METAL. BRASS VESSELS & STAINLESS STEELWARE MERCHANTS.

72, P. S. Chidambara Nadar Street,

VIRUDHUNAGAR.

கைதேர்ந்த ஆட்களால், எங்கள் நேர்பார்வையில் சொந்த பாக்டரியில் தயாராகும் வெங்கலம், பித்தளை, செம்பு, அலுமினியப் பாத்திரங்கள் உழைப்பிற்கும் உறுதிக்கும் உத்திரவாதம்.

V. O. V. பழனிச்சாமி & சன்ஸ்,

வெங்கலபாத்திரம், அலுமினியம் &
எவர்சில்வர் வியாபாரம்,

72, பெ. சி. சிதம்பர நாடார் தெரு,

விருதுநகர்.

நெஞ்சில் உரமுமின்றி
நேர்மைத் திரமுமின்றி
வஞ்சனை சொல்வாரடீ—கிளியே
வாய்ச்சொல்லில் வீரரடீ.

—பாரதியார்.

வடநாட்டு நடிகர்கள்!



ராஜ்கபூர்

அசோக்குமார்



திலிப்குமார்

வடநாட்டு நடிகைகள்!

சுரையா

நர்கீஸ்

நிம்ரி

பொதுவுடைமைப் பூங்கா கண்டு வந்த கலைவாணர் கிருஷ்ணன்—மதுரம்.



குழந்தையின் சிரிப்பில்......

[விமுதன்]

கனகசுந்தரத்தைப்பற்றி நீங்கள் அவசியம் தெரிந்துகொள்ள வேண்டும். திருமணமாகியும் அவன் தனி வாழ்க்கை நடத்தியதற்காக அல்ல, சுகவாழ்வு கூவியழைத்தும் கைகட்டிச் சேவகத்தில்மோகம்கொண்டவன். கனகசுந்தரம் பி. ஏ. பட்டம் பெற்றவன். அழகான தோற்றம்; அன்புள்ள பார்வை. மயில்வாகன் கம்பெனியில்சாதாரணகுமஸ்தா. கம்பெனி வேலைகளை திறமையுடனும் நேர்மையுடனும் செய்யக்கூடியவனென எல்லோராலும் புகழப்பட்டவன்.

சொந்த ஊர் அழகாபுரி என்ற கிராமம். அங்கு ஒரு வீடும், சொற்ப நிலங்களும் உண்டு. அவன் தூரபந்துவான முத்துராமலிங்கபாண்டியர் தன் பெண்ணைக் கலியாணம்செய்துகொடுப்பதாகசொல்லியனுப்பினார். இது அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது. அவர் பெரிய மிராசுதார் மட்டுமல்ல, வட்டிக்குப் பணம் கொடுத்து வாங்கும் லேவாதேவியும் செய்துவந்தார். அங்குள்ள பதினெட்டுக் கிராமத்திற்கும் முத்துராமலிங்க பாண்டியர்தான் பெரிய பணக்காரர். அப்படியுள்ளவர் மதுரை மயில்வாகன் கம்பெனியிலுள்ள சாதாரண குமஸ்தாவுக்குப் பெண் கொடுப்பதென்றால் யாரும் நம்பக்கூட மாட்டார்கள். கனகசுந்தரம் இவ்வளவு பெரியஇடத்து சம்பந்தம் வேண்டாமென முதலில்சொல்லிவிட்டான். சில முக்கிய நண்பர்கள் வற்புறுத்தலின்மேல் பின் ஒப்புக்கொண்டான். கலியாணமும் சிறப்பாக நடந்தது. வானவேடிக்கை, தஞ்சாவூர் மேளம், பட்டிணத்து பரதநாட்டியம் எல்லாம் ஏகத் தடபுடல். கலியாணம் முடிந்து ஒரு மாதம் ஆகிவிட்டது. தன் மாமாவிடம் “மதுரைக்குப் போக வேண்டும் லக்ஷ்மியையும் அனுப்பிவையுங்கள்” என்று கேட்டான்.

“மதுரைக்கு என்ன அவசரம், அந்தக் கம்பெனிவேலையை ராஜிநாமா செய்துவிட்டு இங்கேயே இருங்கள். நமக்கு லேவாதேவி வகையில் கொஞ்சம் கோர்ட்டு விவகாரமிருக்கிறது. இதையும் இந்தப் பண்ணைத் தொழிலையும் கொஞ்சம் மேல்பார்வை செய்து வந்தால் எனக்கு உதவியாக இருக்கும்” என்று சொன்னார் முத்துராமலிங்கபாண்டியர்.

“கம்பெனியின் சென்ற வருஷக் கணக்கு இன்கம்டேக்ஸில்

பார்வையாகாமல் இருக்கிறது. மேலும் அடுத்த மாதம் புதுக் கணக்குப் போடவேண்டியதிருக்கிறது. திடீரென்று நின்றுவிட்டால் முதலாளிவருத்தப்படுவார். ஆகையால் கணக்குகளெல்லாம் முடித்து முதலாளியிடமும் ஒரு வார்த்தை சொல்லிவிட்டு வருகிறேன்'' என்ருன் கனகசுந்தரம்.

பாண்டியர் கொஞ்சம் முன் கோபி. ஆகவே கோபம் வந்துவிட்டது. ''சரி மாப்பிள்ளை அப்படியே செய்யுங்கள். லக்ஷ்மியை அடுத்த மாதம் அனுப்பிவைக்கிறேன்'' என்று முகத்தை வேறு பக்கம் திருப்பி சொல்லிக்கொண்டே எழுந்து போய்விட்டார். கனகசுந்தரத்திற்கு நறுக்கெனப் பட்டது. ''ஓநாயும் ஆட்டுக் குட்டியும் கதையாக முடிந்தது'' என முணுமுணுத்தான். நேராக மனைவி லக்ஷ்மியிடம் போய் ''நான் மதுரை போகிறேன்'' என்று சொல்லி பதிலை எதிர்பார்க்காமலேயே புறப்பட்டுவிட்டான். பெண்கொடுத்த மாமன் வீட்டில் வேலைசெய்து சுகவாழ்வு வாழ்வதைவிட வேறுயிடங்களில் கூலிவேலை செய்து அரைவயிற்றுக்கஞ்சியை குடித்துக்கொண்டு வாழ்க்கையை நடத்துவது எவ்வளவோ மேல் என்பது கனகசுந்தரத்தின் அபிப்பிராயம். ''ஏதோபடித்திருக்கிருன், பெண்ணைக் கொடுத்தால் வீட்டோடு இருந்து எல்லா வேலைகளையும் கவனித்துக்கொள்வான் என்று கலியாணத்தைச் செய்துவைக்க; கிணறு வெட்ட பூதம் புறப்பட்டது போலல்லவா நடந்துவிட்டது'' என்பது முத்துராமலிங்க பாண்டியர் அபிப்பிராயம். இந்த மாறுபட்ட அபிப்பிராயமே மனஸ்தாபத்திற்கு காரணம்.

2

கனகசுந்தரத்திற்குப் பன்னிரண்டு வயது இருக்கும்போதே அவன் தகப்பனர் காலமாகிவிட்டார். அவனுக்கு உடன்பிறந்தோர் யாருமில்லை. கலியாணத்திற்குப் பின்னும் வயதான தன் தாயார் சமையல் செய்வது அவனுக்கு வருத்தமாகவேயிருந்தது. மாமனர் சொல்லியபடி மாதம் ஒன்ருகிவிட்டது; மனைவி வரவில்லை. கடிதம் எழுதினுன் பதில் இல்லை. இரண்டாவது கடிதம் எழுதுவதைவிட நேரில் போவது நல்லது என நினைத்து கிராமத்திற்குப் புறப்பட்டான். மாமாவைப் பார்த்து லக்ஷ்மியை அனுப்பிவைக்கும்படிகேட்டான்.

''இன்கம்டேக்ஸ் வேலைகள் எல்லாம் முடிந்துவிட்டதா? புதுக்கணக்குப் போட்டாகிவிட்டதா? உங்கள்முதலாளி என்ன சொன்னர்?'' என்று பழைய பல்லவியை பாடினர் பாண்டியர்.

''புதுக் கணக்குப் போட்டாகிவிட்டது, இன்கம்டேக்ஸ்முடியவில்லை. முதலாளியிடம் ஒன்றும் கேட்கவில்லை'' என்ருன் கனகசுந்தரம். இருவரும்சிறிதுநேரம்

ஒன்றும்பேசவில்லை. "நாளைக்கு நல்லநாள் லக்ஷிமியை அனுப்பி வையுங்கள்" என்று கனகசுந்தரம் மறுபடியும் கேட்டான். "உள்ளே இருக்கிறாள் லக்ஷிமி, நீங்களே கேளுங்கள்" என்று சொல்லி எழுந்துபோய்விட்டார் பாண்டியர். கனகசுந்தரம் வீட்டிற்குள் போய் லக்ஷிமியைப் பார்த்தான். அவள் தகப்பனாரிடம் பேசிய விஷயங்களை சொன்னான். கூட வரும்படி அழைத்தான்.

"மதுரையில் சௌகர்யமான வீடா? வேலையாட்கள் இருக்கிறார்களா? அடிக்கடி கிராமத்திற்கு வர சௌகர்யம் செய்து கொடுப்பீர்களா?" இப்படிக் கேள்விகளை அடுக்கிக்கொண்டே போனாள் லக்ஷிமி. மனைவியின் கேள்விகள்கன்னத்தில்அறைவது போலிருந்தது. லக்ஷிமி பேசிய பேச்சுக்கள் எல்லாம் பணத்திமிரிலேயிருந்துவரும் வார்த்தைகளாக அவன் காதிலே ஒலித்தது. கனகசுந்தரம் பொறுமையை இழந்தான். "லக்ஷிமி, உங்கள் குடும்பத்திலுள்ள பணம் உங்கள் குடும்பத்தோடுபிறந்ததல்ல. எப்படியோ பணம் வந்தது. அந்த பணத்தினால் இன்பத்தை விலைக்குப் பெற முடியாது. நீ இப்பொழுது இன்பம்என்று நினைப்பது உனக்குத் துன்பமாகவே முடியும்; ஞாபகத்தில் வைத்துக் கொள்" என்றான். அவன் மனைவியிடம்கூறிய வார்த்தைகள் தெளிவாகவும் அழுத்தமாகவும் இருந்தன. மனைவியிடம் பேசிய பின்பு வேறு யாரிடமும் பேசவுமில்லை. ஊருக்குப் போவதாக சொல்லிக்கொள்ளவும் இல்லை. நேராக புறப்பட்டு மதுரைவந்து சேர்ந்தான். தன் தாயாரிடம் லக்ஷிமி மதுரைக்கு வரப் பிரியப்படவில்லை என்று சொல்லிவிட்டான். தன் மருமகளை எதிர்பார்த்திருந்த அவன் தாயார், லக்ஷிமி வரவில்லை என்பதைக் கேட்டதும்வருந்தினாள். "முத்துராமலிங்க பாண்டியர் என்ன சொன்னார்" என்று கேட்டாள். "பணக்காரர் போக்கே எனக்கு பிடிக்கவில்லை என்று முன்பே சொன்னேனே, திரும்பத்திரும்ப என்னைக் கேட்கிறாயே" என வருத்தப்பட்டான் கனகசுந்தரம். அதற்குமேல் அவன் தாயார் ஒன்றும் கேட்கவில்லை. இப்படியே நாட்கள் வாரமாகி, வாரங்கள் மாதமாகி நான்கு கடந்துவிட்டன.

3

இந்த நான்கு மாதமாக கனகசுந்தரம் கிராமத்துப் பக்கமே போகவில்லை. முத்துராமலிங்க பாண்டியர் பலதடவை மதுரை வந்தும் கனகசுந்தரத்தைப்பார்க்கவில்லை. பெரியஇடத்துப்பெண் வீட்டோடு இருந்தால் கேட்கவா வேண்டும்? 'உலைவாயைமூடிவிடலாம் ஊர்வாயை மூட முடியுமா?' கிராமத்துமக்கள் என்ன என்னமோபேசிக்கொண்டார்கள்

பாண்டியரிடம் நெருங்கி பழகிய நண்பர்கள் மகளை ஏன் அனுப்பவில்லை என்று கேட்டதற்கு, மகளுக்கு உடம்பு சரியில்லை என்றும் கூடிய சீக்கிரம் அனுப்ப வேண்டுமென பொய்சொல்லியும் வந்தார். தான் நினைத்தது நடைபெறவில்லையேஎன்ற வீம்பு ஒரு பக்கமும், பெண் புருஷனிடமிருந்துதான் வாழவேண்டுமென்ற நியாயம் ஒருபக்கமும் அவர் மனதிற்குள் போராடிக்கொண்டிருந்தது.

லக்ஷிமி முதலில் தன் கணவனைப்பற்றி லட்சியமே செய்யவில்லை. அவன் நான்கு மாதத்திற்கு முன்பு சொல்லிய வார்த்தைகளை அப்பொழுது நையாண்டி செய்தாள். கூடிய சீக்கிரம் தன் கணவன் தன்னிடம் வந்து கெஞ்சுவான் என்று இறுமாந்திருந்தாள். அவளுடைய கனவுகள் எல்லாம் நாளாக நாளாக சிதறிக்கொண்டிருந்தன. "பணத்தினால் இன்பத்தைப் பெற முடியாது. நீ இப்பொழுது இன்பம் என்று நினைப்பது உனக்கு துன்பமாகவே முடியும்" என்று கணவன் முன்னால் சொல்லிய வார்த்தைகள் ஒவ்வொன்றும் இப்பொழுது அவளுக்கு இடி முழக்கம்போல் தெரிந்தது. மேலும் லக்ஷிமியின் தோழிகள் அனைவருக்கும் கலியாணமாகி விட்டன. அவர்கள் ஒருவருக்கொருவர் அவர்களுடைய கணவன்களைப்பற்றி பேசிக்கொண்டிருப்பதை கேட்கும்போதெல்லாம் லக்ஷிமியின்மனது துடிதுடிக்கும் ஏதோ பறிகொடுத்ததைப்போல தோன்றும். இரவு படுக்கைக்கு போனால் ஒரே சிந்தனை, பலபல கற்பனை, பயங்கரத் தோற்றம், தூக்கம் எப்பொழுதோ வரும். தன் கணவனைப்பற்றி நினைக்க நினைக்க அவள் வாழ்க்கை அவளுக்கு பாலைவனம்போல் தோன்றியது. அடிக்கடி கண்ணாடி முன் நின்று அலங்காரம்செய்துகொள்ளும் லட்சுமி, இப்பொழுது தலையைக்கூட வாருவது இல்லை. தன் மகளின் மனோநிலையை தெரிந்து கொண்ட பாண்டியர், ஒருநாள். "லக்ஷிமி! மாப்பிள்ளையிடமிருந்து ஏதாவது கடிதம் வந்ததாம்மா?" என்று கேட்டார்.

"இல்லையப்பா"

"நீயாவது எழுதம்மா"

"எப்படியப்பா எழுதுவது"

அதற்குமேல் இருவரும் ஒன்றும் பேசிக்கொள்ளவில்லை. இச்சிறியசம்பாஷணைமூலம் தகப்பன் மகளுடைய நிலைமையையும், மகள் தகப்பனாருடைய நிலைமையையும் ஒருவாறு அறிந்து கொண்டார்கள். அதற்குப்பின்பு லக்ஷிமி கணவனுக்கு சில கடிதங்கள் எழுதினாள். ஆனால் ஒன்றையும் அனுப்பவில்லை. கடிதம் எழுதுவாள் எழுதியபின்பு வாசித்துப் பார்ப்பாள். அவள் மனதில் என்ன தோன்றுமோ உடனே எழுதியகடிதத்தை கிழித்து விடுவாள்.

ஒருநாள் லக்ஷ்மி மதுரையிலுள்ள தன்தோழி மீனாவுக்கு கடிதம் ஒன்று எழுதினாள். அக்கடிதத்தில் தான் கணவரை முன்னால் அலட்சியம் செய்ததையும் அதற்காக இப்பொழுது வருந்துவதையும் விபரமாக எழுதி, இனி என்ன கஷ்டம் வந்தபோதிலும் கணவருடன் கூடிவாழவிரும்புவதாகவும் அதற்கு உதவி செய்ய வேண்டுமென கேட்டிருந்தாள்.

4

மீனாவின் கணவன் நடராஜனும் கனகசுந்தரமும் ஆப்த நண்பர்கள். இருவரும் ஒரேயிடத்தில்தான் வேலை பார்க்கிறார்கள். கனகசுந்தரம் கலியாணத்திற்கு மீனாவும் நடராஜனும் வந்திருந்தார்கள் கலியாணத்தின் மறுநாள் தோழிகள் என்ற முறையில் மீனாவும் லக்ஷ்மியும் சந்தித்துப் பேசிக்கொண்டிருக்கும்போது "நாம் இருவரும் தோழிகள் நம் இருவர் கணவரும் ஒரேயிடத்தில் வேலைபார்க்கும் தோழர்கள்" என்று விளையாட்டுப் பேச்சில் மீனா சொல்லிய வார்த்தைகள் ஞாபகத்திற்கு வந்தது. மீனா மூலமாகத்தான் இனி விமோசனம் கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன் லக்ஷ்மி மீனாவுக்கு கடிதம் எழுதினாள். கடிதம் எழுதி பதிலுக்காக ஒவ்வொரு நாளும் ஏங்கிக்கொண்டிருந்தாள். ஆறுவதுநாள் மீனாவிடமிருந்து பதில் வந்தது. பதில் மிகச் சுருக்கமாகவே இருந்தது.

மதுரை

அன்புள்ள லக்ஷ்மிக்கு,

உனது கடிதம் கிடைத்தது. தப்புகள் எல்லாம் உன்னுடையதே. மனைவிஎன்ற முறையில் கணவரைப் பார்க்க வேண்டும். பணக்காரி என்ற முறையில் கணவரைப் பார்த்தால் விபரீதங்கள்தான்நடக்கும் இது பழைய வழக்கத்திற்கும் புதிய நாகரீகத்திற்கும்கூட பொருத்தமில்லை. நேற்று உன் கணவர் எங்கள் வீட்டிற்கு வந்தார். உனக்காக நானும் என் கணவரும் எவ்வளவோ வாதாடினோம். எங்களுடைய வற்புறுத்தலுக்காக ஒரு நிபந்தனையின்மேல் உன்னை ஏற்றுக்கொள்ளசம்மதித்துவிட்டார். அவர்கூறும் நிபந்தனை, எனக்கு நிபந்தனையாகவே தெரியவில்லை. கலியாணத்தின்போது அவர் செய்துபோட்டதிருமங்கல்யமும் கைவளையல்களையும்தவிர நீஎந்த நகையையும் அணிந்துகொண்டு வரக்கூடாதாம். அவசியம் ஏற்பட்டாலன்றி தாய்வீட்டை மறந்துவிடவேண்டுமாம். இது ஒரு நிபந்தனையா? நீ அவர்விருப்பம் போல்நடப்பதுநல்லது. உடனே புறப்பட்டு வா. அடுத்த வெள்ளிக்கிழமை நல்லநாள். அன்று உன்னை எதிர்பார்க்கிறேன்.

உன் தோழி, மீனா.

லக்ஷ்மி கடிதத்தைப் படித்தாள். பலமுறை படித்தாள். அவள்கண்களிலிருந்து கண்ணீர் கலங்கியது. அது ஆனந்தக்

கண்ணீர். ஆடினாள், பாடினாள், ஓடினாள் தகப்பனிடம். கடிதத்தைக் காண்பித்தாள். லக்ஷிமி எதிர்பார்த்தபடி அவர் சந்தோஷப்படவில்லை. அதற்கு மாறாக அவர் மீசை துடித்தது.

"என்ன? பிச்சைக்காரியைப் போல நகைகளை அணியக் கூடாதா? தாய்வீட்டை மறந்து விட வேண்டுமா? தடியன், வந்து கூட்டிக்கொண்டும் போக மாட்டானாம்?" எனக் கர்ஜித்தார் பாண்டியர்.

"அப்பா!"

"என்னம்மா!"

"அவரைத் திட்டாதீர்கள் அப்பா!" என்றுசொல்லி அடக்க முடியாத கண்ணீரை ஊற்றுப் போல விட்டாள். அதற்குமேல் லக்ஷிமியால் எதுவும் பேசமுடியவில்லை. விம்மிவிம்மி அழுதாள். முத்துராமலிங்கபாண்டியர் என்ன செய்வதென்று தெரியாது விழித்தார்.

"லக்ஷிமி அழாதேயம்மா! நான் இனி திட்டவில்லையம்மா! உன் இஷ்டப்படி செய்யம்மா!" என சிறுகுழந்தைபோல கெஞ்சினார். எதற்கும் அசையாத பாண்டியருக்கும் தன்மகள் அழுவதைப்பார்த்துத் தொண்டை அடைத்துக்கொண்டது. நல்ல வேளையாக அப்பொழுது பணிப் பெண்வந்து லக்ஷிமியை படுக்கை அறைக்கு அழைத்துக்கொண்டு போய்விட்டாள். சோகக் கட்டமும் அத்துடன் முடிந்தது.

5

அன்று புதன்கிழமை. மறுநாள் காலைஆகாரம் தகப்பனும் மகளும் ஒன்றாகவே உட்கார்ந்து சாப்பிட்டார்கள். சாப்பிடும் போது மெதுவாக பேச்சை ஆரம்பித்தார்பாண்டியர். தானே மதுரைக்குப் போய் மாப்பிள்ளையை நேரில் பார்த்து கூப்பிட்டு வருவதாகச் சொன்னார். லக்ஷிமி அதற்கு ஒப்பவில்லை. தன் தகப்பனார் கொஞ்சம் முன்கோபக்காரர் போன இடத்தில் விபரீதமாகநடந்துவிட்டால் தன்வாழ்க்கையே பாழாகிவிடுமெனபயந்து போக வேண்டாமென தடுத்து விட்டாள்.

வெள்ளிக்கிழமை காலை, மதுரைக்குப் புறப்படும் நேரம், வைரத் தோடையும் வைர மூக்குத்தியையும் கழுத்துநிக்கல்லையும் கழற்றி தன் தகப்பனாரிடம் கொடுத்து விடைபெறும் காட்சி பரிதாபமாக இருந்தது. நகைகளை வாங்கும்போது பாண்டியர் கை நடுங்கியது. "போய் சௌக்கியமாக வாம்மா" என்று கஷ்டத்துடன் விடைகொடுத்து, துணைக்கு தக்க ஆள்களுடன் அனுப்பிவைத்தார்.

லக்ஷிமி மதுரைபோய் சேர்ந்ததும் நேராக மீனா வீட்டிற்குப் போய் துணைக்கு வந்த ஆட்களை அனுப்பிவிட்டாள். லக்ஷிமியை மீனா அன்புடன் வரவேற்றாள். "நகையில்லாமலிருப்பதும் ஒருவித அழகாகத்தானிருக்கிறது.

நீ எங்கு வராமலிருந்துவிடுவாயோ என நினைத்தேன். நல்ல வேளையாக வந்துவிட்டாய், சாப்பிடு இருவரும் உன் மாமியாரிடம் போவோம்'' என்றுள் மீனு. தோழியின் உற்சாகமான பேச்சு லக்ஷிமிக்கு சந்தோஷத்தைக் கொடுத்தது. லக்ஷிமி முதலில் சாப்பிட மறுத்தாள். மீனு விடவில்லை வம்பு செய்து சாப்பிடும்படி செய்துவிட்டாள். பின்பு இருவரும் ஏதேதோ பேசிக் கொண்டிருந்தார்கள். மணியும் நான்குஅடித்தது. அடுத்த வீதியிலுள்ள கனகசுந்தரம்வீட்டிற்கு இருவரும்புறப்பட்டார்கள். மீனு வாசல் ஏறும்போதே மாமி! மாமி!! இது யார் பாருங்கோ என்று கத்திக்கொண்டே போனுள். கனகசுந்தரத்தின் தாயாருக்கு லக்ஷிமி வந்ததில் மகிழ்ச்சியேயாயினும் அவள் நகைகள் அணியாமல் வந்ததைப் பார்க்க கலக்கம் ஏற்பட்டது. காரணத்தை அறிய மீனுவை தனியாக கூப்பிட்டு கேட்டாள் ''எல்லாம் உங்கள் மகன் உத்தரவுதான்'' என்று மீனு நடந்த விபரங்களை சொன்னுள். இப்பொழுது மாமியாரும் மருமகளும் ஒன்றுகிவிட்டார்கள். லக்ஷிமியைஉட்காரும்படி சொல்லி ஊரிலுள்ள எல்லோருடைய க்ஷேமங்களையும் விசாரித்தாள் மாமி. தான் வந்த காரியம் மங்களமாக முடிந்துவிட்ட சந்தோஷத்தில் மீனுவும் தன் வீடு திரும்பினுள். மாலை 6 மணிக்கு கனகசுந்தரம் வீடு வந்து சேர்ந்தான். வீட்டிற்குள் நுழைந்ததும் லக்ஷிமியைத்தான் முதலில் பார்த்தான். ''லட்சுமி, எப்போது வந்தாய்? சௌக்கியமா?'' என்று கேட்டுக்கொண்டிருக்கும்போதே அவன் தாயார் வந்துவிட்டாள்.

''நீபடித்ததுஇவ்வளவுதானு?''

''என்னம்மா?''

''வயதுப்பெண் நகை போட வேண்டாமென்றுல் வேறு யார் போட்டுக்கொள்வது?''

''லட்சுமியை சொல்லுகிறுயா? ஒரு காரணத்திற்காகச் சொன்னேன். சம்பளம் வந்ததும் வாங்கிப் போடுவோம்'' என்றுன் கனகசுந்தரம். அதற்குமேல் தன் தாயாரிடம் பேச்சை வளர்க்க பிரியமில்லாதவனுக வெளியில் போய் வருவதாகச் சொல்லிப் புறப்பட்டுவிட்டான்.

இரவு சமையல்வேலை ஆரம்பமாகியது. லட்சுமி சமையலைத் தான் கவனிப்பதாக சொன்னுள். அதற்கு ''ஊரிலிருந்து வந்தது அலுப்பாக இருக்கும். நாளை முதல் நீயே கவனித்துக்கொள்'' என்று மாமி சொல்லிவிட்டாள். அதுபோலவே பின்னுல் வீட்டு வேலைகளௌல்லாம் லட்சுமிதான் பார்த்துவந்தாள். 'பணக்கார வீட்டுப்பெண்ணுயிற்றே, பழக்கமில்லாத பெண் இவ்வளவு வேலைகளை செய்து, நாளை உடம்புக்கு ஏதாவது வந்துவிட்டால்......' என நினைத்து மாமிவந்து வேலை

நேரத்தில் குறுக்கிடுவாள். மாமி என்ன சொன்னபோதிலும் லட்சுமி சிரித்துக்கொண்டே எல்லா வேலைகளையும் செய்து வந்தது எல்லோருக்கும் ஆச்சரியமாக இருந்தது. கனகசுந்தரமும் பழைய சம்பவங்களைப் பாராட்டாமல் லட்சுமியிடம் அன்பாக நடந்துகொண்டான். மாலையில் வீட்டுக்கு வரும்போதெல்லாம் பூ வாங்கிவருவதும், அதைத் தானேசூட்டுவதாக சொல்வதும், அதற்கு லட்சுமி 'அய்யோ! அம்மா பார்த்துவிட்டால்......' என்று முல்லைச் சிரிப்போடு சிணுங்கி ஓடுவதும் தினசரிச் சம்பவங்களாகிவிட்டன.

6

கனகசுந்தரம் தன் தாயாரிடம் சொல்லியபடி சம்பளம் கிடைத்ததும் ரூ. 48க்கு ஒரு ஜதை தோடு வாங்கி தன் மனைவியிடம் கொடுத்தான். லட்சுமி அது வைரத்தோடு இல்லை என்பதைத் தெரிந்தும் சந்தோஷத்துடன் அணிந்துகொண்டு மாமியாரிடமும் போய்க் காட்டினாள். லட்சுமி தன் தகப்பனாரைப்பற்றியும் கிராமத்தைப்பற்றியும் நினைப்பாளோ என்னமோ, ஆனால் வீட்டில் யாரிடமும் பேசியதில்லை. குடும்பம் சந்தோஷமாக நடந்துகொண்டிருந்தது. லட்சுமியும் கர்ப்பவதியானாள். அழகான ஆண் குழந்தையைப் பெற்றாள். இனி குதூகலத்திற்கு கேட்கவா வேண்டும். அவர்களுடைய குதூகலம் அதிகநாள் நீடிக்கவில்லை. குழந்தை பிறந்த நேரமோ அல்லது கனகசுந்தரத்தின் பொல்லா வேளையோமயில்வாகன்கம்பெனி முதலாளிக்கும் கனகசுந்தரத்திற்கும் கணக்குவிஷயத்தில்தகராறு ஏற்பட்டது. கணக்கு தகராறு வார்த்தை தகராறாக மாறி வேலைக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டது. வேறு வேலைக்கு முயற்சிசெய்தும்கிடைக்கவில்லை. எழுதாத மனுஇல்லை. போகாத இடமுமில்லை. வேலைபோய் ஆறு மாதமாகிவிட்டது இருக்கக்கூடிய நகைகளையும் விற்றாகிவிட்டது. நாளை சாப்பாட்டிற்கு யாரிடம் கடன் கேட்பது என்று யோசித்துக்கொண்டிருக்கும்போது திடீரென்று 'தினகரன் கம்பெனி'யிலிருந்து அழைப்பு வந்தது. முதலாளியைப் பார்த்தான். உடனே வேலை கிடைத்தது. சாதாரண வேலையா? மானேஜர் வேலை. மாதம் ரூ 300 சம்பளம். நூறுரூபாய் சம்பளத்தில் குமஸ்தா வேலை போய் பதிலாக ரூ. 300 சம்பளத்தில் மானேஜர் வேலை கிடைத்தால் மகிழ்ச்சிக்கு சொல்லவாவேண்டும்? கம்பெனி பியூன் எப்பொழுதும் வீட்டு வாசலில் நிற்க, வீடே அலங்காரமாயிருந்தது.

புதிய வேலைக்குப்போய் பத்து நாள்தானிருக்கும். மாமனார் சிபார்சு மூலமே தனக்கு புதிய வேலை கிடைத்ததாக தெரிந்தது. இந்த விஷயத்தை அறிந்ததும்

கனகசுந்தரத்திற்கு கம்பெனியில் வேலையிலே கவனம் செல்லவில்லை. தன் மனைவி லக்ஷிமியினால் ஏதோ சூதுநடந்துவிட்டதாக நினைத்தான். தான் இதுவரை காப்பாற்றிவந்த கௌரவம் போய்விட்டதாக அவனுக்குத் தோன்றியது. வழக்கமாக புறப்பட்டுவரும் நேரத்திற்கு முன்னதாகவே வீட்டிற்குப் புறப்பட்டு வந்தான். வந்ததும் "லக்ஷிமி உன் தகப்பனருக்கு ஏதாவது கடிதம் எழுதினயா?"

"இரண்டு மாதத்திற்கு முன்னல் எழுதினேன்"

"எதற்காக எழுதினய்?"

"எழுதக்கூடாது என்று நீங்கள் சொல்லவில்லையே?"

"அவசியம்எற்பட்டாலன்றி தாய் வீட்டை மறந்துவிடவேண்டுமென சொன்னதின் அர்த்தமென்ன?"

"அவசியம் எற்பட்டது எழுதினேன்"

"என்ன அவசியம்?" என தன் கோபத்தைஎல்லாம் காட்ட சப்தத்துடன் கேட்டான்.

"இந்தக் குழந்தை உயிர் வாழ! உங்கள் குழந்தை நல்லபடிஜீவிக்க" என்று சொல்லி இடுப்பிலிருந்த குழந்தையை கனகசுந்தரத்திடம் நீட்டினள். அப்பொழுது பையன் தன் பொக்கு வாயைத் திறந்து சிரித்துக்கொண்டு கனகசுந்தரத்திடம் தாவினன். அவ்வளவுதான் குழந்தையின் சிரிப்பில் கோபம் மறைந்தது. "அட போக்கிரிப் பயலே" என்று சொல்லி குழந்தையை வாங்கினன். வெளியில் கார் சத்தம் கேட்டது. வாசல் பக்கம் முத்துராமலிங்கபாண்டியர் காரில் இருந்து இறங்கி வந்துகொண்டிருந்தார்.

"வாருங்கமாமா! உங்கள்பேரனை ஆசீர்வாதம் செய்யுங்கள்" என்முன் கனகசுந்தரம்.

"ஆசீர்வாதமா! இன்று ஆசீர்வாதம் செய்ய முடியாது. நாளை பொங்கல், மங்களஸ்நானம் செய்து கோடி உடுத்தி ஆசீர்வாதம் செய்வேன். ஊருக்குப் போகவேண்டும் எல்லோரும் புறப்படுங்கள்" என்று சொல்லி பாண்டியர் கனகசுந்தரத்தைப் பார்க்க, கனகசுந்தரம் தன் தாயைப் பார்க்க, தாயார் லக்ஷிமியைப் பார்த்தாள். லக்ஷிமியின் கண்களில் நீர்கோர்த்து கீழே விழ துடித்துக்கொண்டிருந்தது

"அடி அசடே! அப்பா வந்திருக்கிருர் அழுகிருயே! எல்லோரும் கிராமத்திற்குப் போய் சந்தோஷமாக பொங்கலைக் கொண்டாடி விட்டு வாருங்கள்" என்றுள் மாமி.

"மாமி, நீங்களும் கூடவந்தால் தான் போவேன். நீங்கள் வரவில்லையானல் நான் போகவில்லை" என்று சாகஸபிகுசெய்தாள் லக்ஷிமி.

"வாம்மா போய் வந்துவிடலாம்" என்று கனகசுந்தரம் சொல்ல எல்லோரும் காரில் உட்கார்ந்தார்கள். காரும் 'பொங்கலோ பொங்கல்' என்ற சப்தத்துடன் கிராமத்தை நோக்கிக் கிளம்பியது.

கன்னியின் சிறை

"பெரியப்பா!

என் இந்தக் கடிதம் உங்களை வருந்தச் செய்திடினும், உண்மையை வெளியிடத் துணிந்த என்னை மன்னிப்பீர்களென்று நம்புகிறேன்" என்று தொடங்கி ஆவேசம் வந்தவன்போல் நீண்ட கடிதத்தை எழுதி முடித்தான். மணி மூன்று அடித்து நின்றது. ஆச்சரியத்துடன் சுவற்றிலிருந்த கடியாரத்தைப் பார்த்துக்கொண்டே கடிதத்தை மடித்து மேஜையின்மேலிருந்த புஸ்தகத்தின்கீழ் சொருகிவிட்டு சற்றேபடுத்தான்.

இரவு பதினோரு மணிக்கு படுக்கவந்தவன் பற்பல எண்ணக்கோட்டைகளை எழுப்பிக்கொண்டு, பைத்தியம் பிடித்தவன்போல் தன் அறையில் உலாவிக்கொண்டு இருந்தும் அவன் உள்ளத் துடிப்பைக் கட்டுப்படுத்த முடியாமல் கடிதம் எழுத அமர்ந்தான். பொழுதுபோனது தெரியவில்லை.

எம். எஸ். கமலா

இரண்டு வருடத்துக்குமுன் சத்தியமூர்த்தி அங்கு முதல் முதல் வந்த அன்று நடந்த சம்பவம் நினைவிற்கு வந்தது. ஸ்ரீ. சாம்பசிவம் சத்தியமூர்த்தியின் தந்தைக்குச் சொந்தச் சகோதரரல்ல. ஆப்த நண்பர் சத்தியமூர்த்தி இண்டரில் தேறியதும் அவனை பி. ஏ. படிக்க வைக்க அவன் தந்தை அவனை அழைத்துக்கொண்டுவந்தார் சாம்பசிவத்தின் வீட்டிற்கு.

மாலை ஆறு மணி இருக்கும். திருச்சியிலுள்ள தம் பங்களாவில் சாம்பசிவம் போர்டிகோவின் முன் அமர்ந்து தெருவில் விளையாடும் குழந்தைகளைப் பார்த்துக்கொண்டிருந்தார். அச்சமயம் சத்தியமூர்த்தியை அழைத்துக்கொண்டு அவன் தந்தை அங்குவந்தார்.

"யார்? ராதாகிருஷ்ணனா? வா! வா!" என்று அழைத்தார் சாம்பமூர்த்தி.

"உன்னிடம்தான் வந்தேன் அண்ணா! சத்தியமூர்த்திக்கு பி. ஏ. வகுப்பில் இடமிருக்கிறதென்று 'செண்ட் ஜோஸப்ஸி'லிருந்து கடிதம்வந்தது. அவனை சேர்த்துவிட்டுப் போகலாமென்றிருக்கிறேன்"

"ரொம்ப சந்தோஷம்"

"இருக்க வசதியாய் இடம் ஒன்றும் கிடைக்காதுபோலிருக்கிறது. ஹோட்டலில் சாப்பிட்டுக்கொண்டு, இடம் கிடைக்கும் வரை உன் வீட்டிலிருப்பான். சற்று கவனித்துக்கொண்டால் தேவலை"என்றார்ராதாகிருஷ்ணர்

"தம்பி! காலில் செருப்பை மாட்டிக்கொண்டே பேசினால் ஒன்றும் நடவாது. செத்தெ நிதானமாய்ப் பேசு" என்னும்போது "விளக்கைக்கூட போட்டுக்கொள்ளாமல் இருட்டில்பேசுகிறீர்களே!" என்று சொல்லிக்கொண்டே வந்து வெராந்தாவிலிருந்த விளக்கைப் போட்டுக்கொண்டே அவ்விடம் வந்தாள் சரஸ்வதி. சத்தியமூர்த்தியும் அவளைப் பார்த்தனர். இருபது வயது நிரம்பிய அழகிய மங்கை.

"ராதா! பெரியவன் பெண்டாட்டி. இவளும் பி. ஏ.தான் படிக்கப்போகிறாள். அவன் செத்ததும் படிக்கிறேனென்று இங்கேயே இருக்காள்" என்று சத்தியமூர்த்தியின் தந்தையிடம் சொல்லி, "சரஸ்வதி! என் பிராண சிநேகிதன் ராதாகிருஷ்ணன் என்று சொல்வேனே இவன்தான். இவன் பிள்ளையும் பி.ஏ. தான் படிக்க வந்திருக்கானாம்' போய் யசோதையிடம் சொல்'. என்றார்.

"நான் ஆனர்ஸில் சேரப் போகிறேன் மாமா" என்றாள் வெடுக்கென்று.

"பி. ஏ.வில் ஸீட் கெடச்சுடுத்தே!"

"கெடச்சா சேர்ந்துவிட வேணுமா? இன்னிக்கு எக்னமிக்ஸ் ஆனர்ஸ் கொடுப்பதாக எழுதியிருக்கிறார்கள்"

"அப்படியானால்சேர்"என்றார்

* * * *

இரவு எல்லோரும் சாப்பிட அமர்ந்தார்கள். சாம்பசிவத்தின் பிள்ளை ராமநாதனும், சரஸ்வதியும்கூட அமர்ந்தனர். சரஸ்வதி சாம்பசிவத்திடமும் யசோதையம்மாளிடத்திலும் பெற்றோர்களிடம் சலுகையுடன்விளையாடும் குழந்தைபோல் சகஜமாய்பேசிக்கொண்டிருந்தாள். ஒரு ஓரத்தில் தலைகுனிந்து அடக்கமாய் உட்கார்ந்திருக்கும் ராமநாதனைப் பார்த்து "மாமா! ராமுக்கு யாரையாவது பார்த்தால் எங்கிருந்துதான் வந்து வெட்கம் ஒட்டிக்கொள்ளுமோ தெரியவில்லை —அம்மா! ராமுவாயைத்திறந்து கேட்டால்தான் பரிமாறவேணும் —ராமு புதுசா யாரும் பெண் கொடுக்க வரல்லே! அப்பாவின்

தம்பி ராதாகிருஷ்ணர்தான் வந்திருக்கிறார்—என்மாமா! நீங்கள் இவரிடம் சொல்லவில்லையா? ராமு பெண் குணம் படைத்த ஆண் உருவம் என்று'' இப்படிச் சொல்லிகலகலவென்றுசிரித்தாள்

"ராதா! நீராமநாதனைப் பார்த்ததில்லையே! நீவந்தபோது அவன் இங்கு இருந்ததில்லை. இவன் இண்டர் படிக்கிறான். ராமு! சத்தியமூர்த்தி பி. ஏ. படிக்க வந்திருக்கிறான். காலேஜுக்கு நீயும் அவனும் சேர்ந்து போகலாம். சரஸு ராமுவின் அறைக்குப் பக்கத்து அறையை சத்தியமூர்த்திக்குக் கொடு'' என்றார். சத்தியமூர்த்திக்கு ஆச்சரியமாயிருந்தது. பிள்ளை இறந்தபின் நாட்டுப்பெண்ணை அன்பாய்ப் பார்த்துக்கொள்ளும் அந்தக் கருணைத் தம்பதிகள் அதிசயப் பிறவிகள்தானோ என்னவோ?

ராதாகிருஷ்ணர் ஒருவாரம் இருந்து தன் பிள்ளையை சாம்பசிவத்திடம் விட்டுச் சென்றார். சாம்பசிவம், செல்வத்திலும் செல்வாக்கிலும், உதாரகுணத்திலும், பண்பாட்டிலும்உயர்ந்தவர். சத்தியமூர்த்தியை தன் தம்பி மகனாகவே கருதி அவன் தேவைகளெல்லாவற்றையும் பூர்த்திசெய்வார். சரஸு, ராமு, சத்தியமூர்த்தி மூவரும் சேர்ந்து கலாசாலைக்கு செல்வதும், ஒருவயிற்றில் பிறந்தவர்களைப்போல் ஒற்றுமையுடனிருந்தார்கள். சரஸு மாத்திரம் எப்பொழுதும் குறும்புத்தனமாகப் பேசிக்கொண்டும் விளையாடிக்கொண்டுமிருப்பாள். அதுவும் ராமுவும் அவளும் சேர்ந்துவிட்டால் போதும். அர்த்தமற்ற விளையாட்டும் பேச்சும்தான் அதிகமாயிருக்கும். சத்தியமூர்த்திக்கு சரஸுவின் மேல் அவனையறியாது அன்பு வளர்ந்தது. அவள் நினைவு ஒன்றைத்தவிர வேறு எவ்வித எண்ணமும் அவனுக்குத் தோன்றவில்லை. அவள் நினைவு அதிகமாக ஆக அவளையே கூர்ந்து பார்க்கத் தொடங்கினான்.

சரஸுவின்குறும்புத்தனமும், விளையாட்டும், சந்தோஷமும் வெளிப் பார்வைக்கேயல்லாது, உண்மையில் அவள் மறைவாயிருக்கும்போது ஏதோ ஆழங்காணா யோசனையிலாழ்ந்து கவலைப்படுகிறாளென்பது தெரிந்தது.

* * * *

ஒருநாள் சத்தியமூர்த்தியும், சரஸுவும் தோட்டத்தில் உலாவிக்கொண்டிருந்தனர். சரஸு ஏதேதோ பேசிக்கொண்டிருந்

தாள். அவள் பேச்சை வெகு சிரத்தையாய்க் கேட்டுக்கொண்டே நடந்தான். அதில் அவள் ஏதோ பயங்கரமான கரையில் நின்று அதைத் தாண்ட பிரயத்தனம் செய்து, தாண்ட முடியாமல் தவிப்பதைப்போல் தெரிந்தது. தான் அவளுக்கு கைகொடுத்து கரை ஏற்ற முடியுமென்று எண்ணினான். ஆனால் ஒன்றும்பேசாமல் சம்பங்கி மரத்தடியிலிருந்த புல்திடலில் போய் அமர்ந்தான்.

"என்ன சத்தியமூர்த்தி? ஏதோ யோசனை செய்துகொண்டிருக்கிறாய்?"

"என்னுடைய யோசனை...... சொல்ல......ஆம்......நீ என்னை மணந்துகொண்டால்...நான்..."

"மூர்த்தி! நான்...இந்த விஷயத்தை...நீ கேட்டு......" என்றவள் கண்களில் தோன்றிய சலனத்தை மறைத்துக்கொண்டு, சர்வசகஜமாய் சொல்பவள்போல் "எனக்கம்மாதிரி அபிப்பிராயமேயில்லை. அம்மாதிரி பேச்சை என்முன் எடுக்காதே" என்றாள்.

சத்தியமூர்த்தியின் முகம் கருத்தது. அவள் முகத்தை உற்றுப் பார்த்தான். அவள் அம்மாதிரி ரசமட்டமாய் பேசியது அதுதான் முதல்தடவை. அதைவிட அவள் அவனைநான்கு வார்த்தைகள் சொல்லி ஏசியிருந்தாலும் அவனுக்கு அவமானமாயிருக்காது. தன்குட்டு வெளிப்பட்டுப்போனாற்போல் தோன்றியது. இவ்வளவிற்கும் காரணம் சரஸுதான் என்றும் நினைத்தான். இனி அந்த வீட்டில் எப்படி இருப்பது? எங்காவது போய் விடலாமென்று தோன்றியது. ஒன்றரை வருஷத்திற்குமேல் சொந்தத் தந்தையிடமிருப்பதை விட அதிகசலுகையுடன் வளர்ந்த சாம்பசிவத்தைவிட்டு, அதிலும் பரீக்ஷைக்கு இரண்டுமாதமிருக்கும்போது எப்படி போவது? அப்பாவுக்கு என்ன சொல்வது? அப்பாவைபாவது எதையாவது சொல்லி ஏமாற்றலாம். பெரியப்பாவிடம் என்ன சொல்லி ஏமாற்றுவது?

சத்தியமூர்த்திக்கு இரவு சாப்பாடு வேண்டியதாயிருக்கவில்லை. இழுத்துப் போர்த்திக்கொண்டு படுத்தான். சரஸு மாத்திரம் ஒன்றுமேநடவாதுபோல் குறும்புப் பேச்சும், கொம்மாளமுமாய் சிரித்துக்கொண்டு சுற்றிவந்தாள். அந்த சிரிப்பில் எவ்வளவு ரகசியங்கள்தான் புதைந்துகிடக்கின்றனவோ என்று தோன்றியது சத்தியமூர்த்திக்கு.

* * * *

இரவு வீட்டில் அனைவரும் தூங்கிவிட்டனர். ராமுவும், சரஸுவும் மேஜையின்முன்புஸ்தகங்களுடன் அமர்ந்திருந்தனர். சத்தியமூர்த்திக்குப் போர்வைக்குள் இருக்கை கொள்ளவில்லை. தன் அறை வாயிற்படியின்முன் வந்து நின்றான்.

"ராமு! மாமாவிடம் சொல்லவில்லையல்லவா?" என கேட்டாள்

சரஸு. ராமு தலைகுனிந்து கொண்டிருந்தான். ஒன்றும் பேசவில்லை.

"மாமாவிடம் நானேசொல்லி விடுகிறேன். அவர் ஒன்றும் சொல்லமாட்டார். நீ பயப்படுகிருய். ஆனல் எனக்குத்தெரியும்"

"வேண்டாம் சரஸு! நான் சொல்வதைக் கேள். நானே சொல்கிறேன்" என்ருன் தடுமாறியபடி ராமு.

"ஆயிரம்தரம் ஆகிவிட்டது. நீ சொல்வதாய் சொல்லி. மாமா கேட்டதையெல்லாம் தரும் தர்மப் பிரபு. அப்பேர்பட்டவரிடம் சொல்லமுடியாமல் அவஸ்தைப் படுகிருய். நான் நாளை அவரிடம் எல்லாவற்றையும் சொல்லி ஒத்துக்கொள்ளச் சொல்லுகிறேன் பார்!" என்று அவன் கையைப் பிடித்துக்கொண்டாள்.

"சரஸு" என்ருன் நடுங்கும் குரலில்.

இவைகளைக் கேட்ட சத்திய மூர்த்திக்கு ராமு இத்தனை கோழை என்பது இப்பொழுது தான் தெரிந்தது. அதனல்தான் சரஸு தன்னை......... "யாரும் சொல்லவேண்டாம். உங்கள் தரப்பில் நானே பெரியப்பாவுக்குச் சொல்லுகிறேன்" என்று ஆவேசம் வந்தவன்போல் உரத்துக் கூவிக்கொண்டு அவர்கள் முன் வந்துநின்ருன். அவனைக் கண்டதும் ராமு நடுங்கினன். சரஸு தன் கையை இழுத்துக் கொண்டு, தன்னை சமாளித்துக் கொண்டு, ஒன்றும் அறியாதவள் போல் இளமுறுவலுடன் "எங்களுக்காக நீ எடுத்துக்கொள்ளப் போகும் சிரமத்திற்கு எங்கள் இருவரின்நன்றிகள் உரித்தாகுக. எங்களிருவரின் விஷயத்தை அப்படி விடுங்கள். உங்கள்விஷயத்தை எங்கு மாமாவிடம் சொல்வேனுஎன்றஞ்சி குளத்தையோ குட்டையையோ பார்த்துக் கொண்டு போய்விடாதீர்கள். இருந்து விமரிசையாய் எங்கள் திருமணத்தை நடத்தி வையுங்கள்" என்ருள் தீர்க்கதரிசியைப் போல். சத்தியமூர்த்தி இருவரையும் மாறிமாறிப் பார்த்துக் கொண்டு நின்ருன். கனவில் கூடஎண்ணமுடியாத இம்மாதிரி சம்பவம் நேர்ந்ததற்கு தன் கவலையை வெளியிட எண்ணினன். வார்த்தை வாய்க்குள்ளேயே நின்றுவிட்டது.

* * * *

எப்பொழுது கண் அயர்ந்தானே தெரியாது. திடீரென்று விழித்துக்கொண்டான். மணி ஏழுமுறையடித்தது. முதலில் மேஜைமேல் அவன் பார்வை சென்றது. அவன் வைத்த கடிதம் அங்கில்லை. விதிர்த்தெழுந்தான். எல்லா புஸ்தகங்களையும் புரட்டிப் பார்த்தான். கடிதம்... யார் கையில் கிடைத்து வீடு என்ன அமளிப்படுமோ என்று பயந்தான். அதேசமயம் குறும்புக்காரிசரஸு உள்ளேநுழைந்து "மூர்த்தி! நீங்கள் இப்பேர்ப்பட்டவரென்றுநான்நினைக்கவேயில்லை.

மர்பி என்றுல்



(5 வால்வு மாடல் T A 152 A. C.)

சிறந்த ரேடியோ

விபரங்களுக்கு:

R. சோமசுந்தரம்,

ரேடியோ & எலக்ட்ரிகல் டீலர்,

விருதுநகர்.

தந்தி அட்ரஸ்: SILVERLINK.

போன் நம்பர்: 32.

கவலைப்படாதீர்கள். உங்கள் கடிதம் என்னிடம்தானிருக்கிறது'' என்றாள் நிதானமாய் சிரித்தபடி. சத்தியமூர்த்தி அப்படியே மலைத்து நின்றான். அவள் விர்ரென்று சென்றுவிட்டாள். இனி ஐந்து நிமிஷம் அங்கிருந்தால் தான் அவமானச் சுழலில் அல்லல்பட வேண்டுமென்று தெரிந்துவிட்டது. பரபரவென்று தன் புத்தகங்களை, துணிமணிகளை எடுத்து பெட்டியில் வைத்து பிரயாணத்திற்கு சித்தமானான்.

"போதாகிவிட்டதே! குளிக்கவில்லையா?'' என்று வாயிற்படியருகில் வந்து கலகலவென்று நகைத்தாள். அவன் வாயை மூடிக்கொண்டு குளிக்கச் சென்றான். ஐந்துநிமிஷத்தில் குளித்துவிட்டு தன் அறைக்குள் நுழைந்தபோது "பாருங்கள் மாமா! சொன்னால் கேட்காமல் இப்பொழுதே புறப்பட ஆயத்தமாய் எல்லாவற்றையும் எடுத்து மூட்டை கட்டியிருக்கிறார்'' என்று சரஸு சாம்பசிவத்திடம் சொல்லிக் கொண்டிருந்தாள்.

சாம்பசிவம் தமக்கே உரித்தானகம்பீரத்துடன் "ஏனப்பா? அவசரமா புறப்படுகிறே! இரு. அடுத்தவாரம் ராமுவுக்குக் கலியாணம். சரஸுவுக்கு ராமுவுக்கும் நடக்கும் கலியாணத்திற்கு நீதானே எல்லாம்நின்று பண்ண வேண்டும்?'' என்று "சரஸு அவன்ஒன்றும் போகமாட்டான். போ'' என்று தம் வேலையை கவனிக்கச் சென்றவர் சட்டென்று திரும்பி "உங்கப்பா அம்மா எல்லோரும் இங்கேயே வரப்போகிறார்களே'' என்றார்.

"ஆம், உங்கள் கடிதம் என்னிடமே இருக்கிறது. நீங்கள் உங்கள் சக்தி சாமர்த்தியங்களை உபயோகித்து எங்கள்கலியாணத்திற்காகஎடுத்துக்கொண்ட முயற்சிக்கு கலியாணமானதும் உங்கள் கடிதத்தை உங்களுக்கே திருப்பித் தருகிறேன்'' என்றாள்.

வேத சாஸ்திரங்கள் ஒவ்விடினும், கர்மகாண்டங்கள்தடுத்திடினும் நல்ல காரியமென்று அழைக்கும் மாமன், மருமகளின் பேச்சை சற்றே வெறுத்தான் சத்தியமூர்த்தி. அதையறிந்த அனுபவ ஞானி சாம்பசிவம், "ஒருவனுக்கு விருப்பமில்லாது மணம் செய்வித்து மாய்க்கடித்தேன். மற்றவனுக்காவது அவன் விருப்பத்தை நிறைவேற்றி உயிருடன் வைத்துக்கொள்கிறேன்'' என்று சொல்லிச் சென்றார். சத்தியமூர்த்தியின் முகம் வெளிர்த்தது. அவர்செல்வதைப் பரிதாபமாய்ப் பார்த்தான். இறந்த பிள்ளைக்கும், அவனுக்கும் அவள் கிடைக்காமல் போனதற்கு இதுதான் காரணமோ என்று நினைத்து அவளைப் பார்த்தான். அக்கண்களில் அளப்பறிய கர்வம் துளிர்த்துமின்னியது. இதுதான் "கன்னியின் சிறை''க் கூடமோ என்று முணுமுணுத்தான்.

நீதிபடும்பாடு

[ஏ. வி. பி. ஆசைத்தம்பி]

1 காதல் கடல்

தைத்திருநாள்! தமிழர்களுக்கு நல்ல நாள்! பொங்கல் விழா தமிழர் வாழும் மேதினி எங்கும் புனிதவிழாவாக கருதப்பட்டது. கோலாகலம்! கொண்டாட்டம்! கும்மாளம்! மக்களிடத்திலே மகிழ்ச்சி.

ஆனால், நாகராஜனிடத்தில்?

மகிழ்ச்சி அல்ல, மனவேதனை! இன்பமல்ல, துன்பம்! கோலாகலமல்ல, அலங்கோலம்! கொண்டாட்டமல்ல, திண்டாட்டம்! சோபிதமல்ல, சோகம்! கும்மாளமல்ல, குடலைப் புரட்டுவது போல் உள்ளத்திலே நினைவுச் சுழல்! புயல்! கொந்தளிப்பு! எரிமலை!

ஏன்?

இதே பொங்கல்விழா ஐந்து வருடங்களுக்குமுன் அவனுக்கு தந்த ஆனந்தம் கொஞ்சமா? பேரானந்தம்! பரமானந்தம்!

"தைபிறந்தால்வழிபிறக்கும்! இந்தபழமொழி என்மட்டிலும் பலித்துவிட்டது. என்வாழ்க்கை வளம்பெற, கனிமொழியாளை—காதல் கிளியாளை......என் என் இல்லக் கிழத்தியை கண்டுவிட்டேன்! இனி இன்பவாழ்க்கை! மோட்ச வாழ்க்கை!'' இப்படி இன்பக் கோட்டை கட்டினான் நாகராஜன், ஐந்து வருடங்களுக்கு முன் தைத்திருநாளில்!

ஆனால், இன்று?

அத்தனையும் தகர்ந்துவிட்டது! மனக்கோட்டை, கானல் காட்சியாகிவிட்டது! நினைப்பெல்லாம் நெருப்பாகிவிட்டது!



ஆசைத்தம்பியும், அவரது அருமை மகள் வசந்தாதேவியும்.

காரணம் என்ன?

நாகராஜனை வறுமை சூழ்ந்து கொண்டதா? இல்லை! வற்றாத செல்வம் இன்னும் இருக்கிறது.

பெரும் வியாதி பீடிக்கப்பட்டு மூப்படைந்துவிட்டானா?

இல்லவே இல்லை! இளைஞன் என்ற பட்டம் இன்னும் மாற வில்லை. திடகாத்திரமானவன் என்பதற்கு அவனது திரண்ட தோள்களே சாட்சியாயிருந்தன.

காதல் கைகூடவில்லையா?

காதல் கைகூடுமா, கூடாதா? என்ற கவலை இன்றல்ல, ஐந்து வருடங்களுக்குமுன் அவனுக்கு இருந்தது. நாயகியை பொது மேடையிலே பிரசங்கம் செய்யும் போது கண்டு, கண்ணால் காதல் மொழி பேசும்போது......காதல் ஈடேறுமா என்ற கவலை நாகரா ஜனுக்கு இருக்கத்தான்செய்தது.

ஆனால்—ஐந்து வருடங்களுக் குமுன்பு நடந்த பொங்கல் திரு நாளிலே—நாயகியை சந்தித்து தன் கருத்தை தெரிவித்ததும்... அந்த காதல் கவலையும் தீர்ந்தது.

“நாகு! நான் மனப்பூர்வமாக காதலிக்கிறேன்! உயிருள்ளவரை உங்கள்நினைவு மாறாது! நீ என் காதலைப் புறக்கணித்தால்கூட, நான் இன்னொருவனுக்கு கட்டா யப்படுத்தப்பட்டு, வாழ்க்கைப் பட்டால்கூட, சாகும்போது ‘நாகு’ என்று சொல்லிக்கொண் டுதான் சாவேன்!”

இப்படி நாகராஜனிடம் நாயகி சொல்லும்போது இன்பத்திற்கு எல்லை ஏது? தான் காதல் தெய் வமாக நினைத்த நாயகி வாயில் இருந்துவந்த வார்த்தைகள்...... அத்தனையும்தேன் துளிகள்! ஒரே தித்திப்பு! இந்த நினைப்பு நாக ராஜனை எந்த லோகத்திற்கோ இழுத்துச்சென்றது.

* * * *

அன்று நாகராஜனுக்குமூன்று பரிசுகள் வந்தன. ஒன்று வாழ்த் துரை! இரண்டாவது வெண் பொங்கல்! மூன்றாவது கரும்பு! யார் அனுப்பியிருக்க முடியும்? சாட்சாத் நாயகியேதான். இந்த நிகழ்ச்சி அவன் மனதிலே புத் துணர்ச்சியை ஊட்டியது, அந்த பொங்கல் நாளில்.

ஆனால்—இன்று?

கரும்பு வேம்பாகிவிட்டது! புத்துணர்ச்சி ஈட்டி குத்தும் உணர்ச்சியாக மாறி, வாட்டி வதைத்தது.

காதலுக்காகக் கவலைப்பட்ட நாகராஜன், காதல்உள்ளம் என் பது கபடர்கள்நடமாடும் உலகம் என்று வர்ணித்தான்.

பொன்னையும் பெண்ணையும் கண்ணால்கூட தீண்டேன் என்று கடும்விரதம்கொண்டான். பணக் கார நாகராஜன் பராரியானான்! மேடைப் பிரசங்கி நாகராஜன் அடையாளம் தெரியாத ஆளாக மாறினான்! இருந்த இடத்தை வேண்டும் என்றே துறந்தான்! அரசியல் வாழ்க்கையிலிருந்து ‘அஞ்ஞாதவாசம்’ பெற்றான்.

கல் செக்கில்

அசல்

தும்பை எள்ளில்

நேர் பார்வையில்

சுத்தமாக

தயார் செய்த

குணம், மணம்

நிறைந்த

எங்கள் "சந்திரா" மார்க்கு

நயம் நல்ல எண்ணெ

வாங்கி உபயோகியுங்கள்.

தயாரிப்பவர்:

ம. கு. க. குருசாமி நாடார்,

விருதுநகர்.

2 நாகராஜன்

நாகராஜன் அவ்வளவு அழகனல்ல; ஆனால் அந்தஸ்து உள்ள குடும்பத்திலே பிறந்தவன். தாயோ தந்தையோ இல்லாத தனிக்கட்டையாக இருந்தான்.

அவன் ஆஸ்திபூஸ்தி எல்லாம் லட்ச ரூபாய்வரை இருந்தது. அவன் லட்சாதிபதியாக இருந்தும்......பணக்காரர்களுக்குள்ள படாடோப லட்சணம் எதுவுமே அவனிடம் இருந்ததில்லை.

தன் கையால் நூற்ற கதர் கட்டுவதே ஒரு மகத்தான காரியம் என்று கருதினான். எளிய வாழ்க்கை நடத்தினான், ஏழையைவிட மோசமாக. மகாத்மாவின் சீடன் என்று சொல்லிக் கொள்வதிலே...அவனுக்கு ஒரு தனி ஆனந்தம்.

அவன் உயர்நிலைப்பள்ளியிலே படிக்கும்போதே காந்திய கொள்கையால் கவரப்பட்டிருந்தான். தேசிய திட்டத்தை பின்பற்றவும் பள்ளிக்கூடத்திலே தீவிரமாக பரப்பவும், நாகராஜன் பின்வாங்கியதே இல்லை.

இதன்பயனாக ஒரு சமயம் அவன் பள்ளியிலிருந்தே 'டிஸ்மிஸ்' செய்யப்பட்டான். ஆனால் அவன் தோழர்களின் கட்டுப்பாடான 'ஸ்டிரைக்' அவனை மீண்டும் பள்ளிக்கூடத்திலே சேர்த்தது.

இந்த சமயத்தில்தான் எஞ்சியிருந்த அவன் தாயும் பத்து நாள் படுக்கையில் இருந்துவிட்டு 'பரலோகயாத்திரை' சென்றாள்.

அதோடு பள்ளிப் படிப்பை அவன்நிறுத்திவிடவில்லை. காலேஜிலே சேர்ந்து படிக்க ஆரம்பித்தான். கல்லூரியிலே 'இண்டர்' படித்து முடித்துவிட்டு வீட்டுக்கு வந்தான்.

அதற்குமேல்படிக்கஅவனுக்கு ஆர்வம் இல்லாமல் போயிற்று. நாட்டுக்கு தீவிரதொண்டுசெய்ய திட்டம் போட்டான். தேசிய இயக்கத்திற்கு அவ்வப்போது தேவைப்பட்ட பணத்தை நூறு, ஆயிரமாககொடுத்து பலப்படுத்தி வந்தான். உள்ளூர் தேசியஇயக்தின் 'தலைவர்' பதவியும் அவனுக்கு கிடைத்தது.

இந்தப் பதவி அவனுக்கு மேலும் மேலும் உணர்ச்சியை ஊட்டுவதாய் இருந்தது. 'பேச்சாளி' ஆகவேண்டும் என்ற ஆசை அவனுக்கு நாளுக்குநாள் வளர்ந்தது.

மனம் இருந்தால் மார்க்கம் உண்டு என்பார்கள். இதோடு பணமும் இருந்தால்? கேட்கவா. வேண்டும், பாதையில்லாஊருக்கு பாலமே அமைத்துவிடலாம்! அப்படியிருக்க நாகராஜன்ஆசை வீண்போகுமா?

சிறந்த பேச்சாளர்கள் பட்டியலிலே நாகராஜனுக்கும் ஒரு இடம் ஒதுக்கப்பட்டது. மாகாணம் பூராவும் மக்களிடத்திலே அவனுக்கு நல்லமதிப்புஇருந்தது

அவன் ஊர் ஊராக சொற்பொழிவுசெய்ய வந்த இடத்தில் தான் நாயகியைக் கண்டான்; காதல் கொண்டான்; காதல் கைகூடுமா என்று கவலைப்பட்டான்; பல இடங்களிலே நாகராஜனும் நாயகியும் சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது. இருவர் காதலும்நாளுக்குநாள்வளர்ந்தது

நாயகியை சந்திப்பதிலே எப்போதாவது ஏமாற்றம் ஏற்பட்டால்......ஏக்கத்திற்கு எல்லையே இருக்காது. காதல்என்ன இலேசானதா? சிந்தனையைக்கெடுத்து சிறுகச்சிறுகசித்திரவதைசெய்து, மனிதனை பைத்தியமாக்கி, பிணமாக்கும்மகாசக்தி காதலைத்தவிர வேறு எதற்கு உண்டு?

ஆனால், அந்த நிலைஎல்லாம் நாகராஜனுக்கு வரவில்லை. தன் உள்ளத் துடிப்பை எல்லாம் கடிதத்திலேஎழுதி நீட்டிவிட்டான்; நாயகியும் நல்லபதிலையேகொடுத்தாள். அதன்பின்னர்தான் இருவரின் இன்ப சந்திப்பு. அந்த சந்திப்பிலேதான் ஒருவரை ஒருவர் கருத்தை அறிந்து...கட்டி அணைத்துக்கொண்டனர். அந்த சுகத்தை......என்றுமே மறக்க முடியாது.

இவர்கள் காதல் அடுத்தடுத்து உள்ளவர்களுக்கும் தெரிய ஆரம்பித்தது. தெளிவுள்ள நெஞ்சம் நாகராஜனுக்கு இருக்கும்போது யாருக்குத் தெரிந்தால் என்ன? காதல்திருமணம் செய்துகொள்ள காதலர்கள் முடிவு செய்தனர்.

ஐந்தாண்டுகளுக்குமுன் வந்த தைத்திருநாளில்—பொங்கல்புது நாளில் நாகராஜனுக்கும் நாயகிக்கும் கதர்த்திருமணம் சீர்திருத்த முறையிலேநடந்தேறியது. மிஸ் நாயகி, மிஸஸ் நாகராஜனாக மாறினாள்.

3 நாயகி

நாயகியும் சாதாரண ஆளல்ல. பி. ஏ. படித்தவள்; படிக்கும்போதே தேசிய இயக்கத்திலே நாகராஜனைப்போல் பங்குபெற்றிருந்தாள். பி. ஏ. பட்டம் பெற்றஉடனே, நாயகி படிப்பை நிறுத்திவிடவில்லை. பி. எல். படிக்கவும்ஆரம்பித்தாள். பி.எல். முடிக்கிறவரையிலும் தீவிரமாக அரசியலிலே பிரச்சாரம் செய்து வந்தாள்.

பொதுவாக அரசியலிலே பெண்கள் அதிகமாக பங்கு

பெறுவதில்லை; அதற்குக் காரணம் பலபல இருந்தன. அரசியல், சினிமா, நாடகம் போன்ற பொதுத் துறையிலே ஈடுபடுகிற பெண்கள் ஒழுக்கத்தோடுவாழ்க்கை நடத்தினாலும் அவள் அப்படிப்பட்டவள் இப்படிப்பட்டவள் என்று 'கயிறு' திரிக்க பலர் இருந்தனர்.

அதுமட்டுமல்ல, இப்படித் துணிந்து வருகிற பெண்களைக் கெடுக்க, வலைவீச கூடச்சேர்ந்தவர்களே முயற்சிசெய்வதும் சில இடங்களிலே சர்வ சாதாரணமானவிஷயமாகிவிட்டது. இதனால்தான் எத்தனையோ பெண்களுக்கு பொது வாழ்வில் ஈடுபட ஆசையிருந்தும் அது கனவாகி விடுகிறது.

பொதுவாக அரசியலிலே மட்டுமல்ல, ஆண் பெண் சந்திக்க வசதி உள்ள எந்த இடத்திலும் ஒழுக்கக்குறைவு ஏற்படத்தான் செய்கிறது. ஆலயமும் திருவிழாவும் புனிதமானதுதான்...அங்கே ஆண்பெண் சேர்க்கை ஏற்படுவதில்லையா? எல்லாம் சூழ்நிலையை பொருத்ததுதான்.

மனிதனின் வாழ்வும் தாழ்வும் சூழ்நிலையை ஒட்டிதான் இருக்கிறது. இதைத்தான் 'ஆண்டவன் அருள்' என்றும் 'விதி' என்றும் வைதீகர்கள் கூறுகிறார்கள்.

பஞ்சுக்கு தன்னைத்தானே பற்றிக்கொள்ளும் சக்தி கிடையாது. ஆனால் நெருப்போடு சேரும்போது...... எரிவதுமட்டுமல்ல, இருக்கிற இடம் தெரியாமல் ஒரு நொடியில், மடிந்து மறைந்துவிடும்! இதைப்போலதான் ஆணும் பெண்ணும்! பருவம் என்ற புயல் வீசும்போது... சாதாரண பஞ்சு என்ன செய்ய முடியும்?

அரசியலிலே ஈடுபட்ட நாயகியை நாகராஜன் பல இடங்களிலே சந்திக்க நேரிட்டது. சில ஊர்களிலே இருவரும் சேர்ந்து ஓரிடத்திலேயே தூங்கவேண்டிய நிலையும் ஏற்பட்டிருந்தன. இந்நிலையிலே இருவருக்கும் காதல் ஏற்பட்டது ஆச்சரியமா? காதல் கைகூடி கல்யாணம் நடந்ததுதான் ஆச்சரியம்!

நாயகிக்கு அரசியலிலே நல்ல ஆதரவு இருக்கத்தான் செய்தது. நாயகி பேசுகிற கூட்டத்திலே ஆயிரம் பேர் அதிகமாக கூடுவதோடு நில்லாமல், பெண்களும் ஏராளமாக கூட்டத்திற்கு வர ஆரம்பித்தனர்.

"நாயகி துணிச்சல்காரிதான்" கூட்டத்திற்கு வரும் ஒவ்வொரு ஆணும் பெண்ணும் இப்படி வியப்புடன் கூறினர். கொஞ்சமும் கூச்சமோ, பயமோ, வெட்கமோ எதுவுமின்றி விஷயங்களை பேசினாள். சுருக்கமாகச் சொன்னால் பெண்களுக்கு தேவையான நான்கு குணங்கள் நாயகியிடத்திலே கிடையாதோ என்று சந்தேகிக்கவேண்டியதாகஇருந்தது.

உள்ளபடியே நாயகி இன்று நேற்றல்ல, கல்லூரியிலே படிக்கும்போதே 'வாயாடி' என்று பட்டம் பெற்றவள். 'சோசியல்' என்ற வார்த்தையை வாழ்க்கையிலே அப்படியே கடைப்பிடித்தவள்.

கல்லூரி மாணவர்களிடம் பழகுவதற்கோ, பேசுவதற்கோ, சினிமா, பீச் போன்ற இடங்களுக்கு அவர்களுடன் செல்வதற்கோ நாயகி பின்வாங்கியதே இல்லை. இன்று ஒருவனோடு, நாளை இன்னொருவனோடு என்றபடி சதா 'குஷி'யாக இருப்பாள் நாயகி.

கல்லூரி மாணவர்கள்தான் குறும்புக்காரர்களாயிற்றே! 'வாயாடி' என்ற பட்டத்தோடு 'கலியுக பாஞ்சாலி' என்ற புதுப் பட்டத்தையும் சூட்டினார்கள். இந்தப் பட்டத்திற்கெல்லாம் நாயகி பயந்துவிடவில்லை. "ஆணுக்கு இங்கு பெண் இளைப்பில்லை காண்" என்று ஆணவமாகக் கூறினாள்.

இந்த நாயகிதான் அரசியலில் 'அவதாரம்' எடுத்தாள்; முழங்கினாள்; கர்ஜித்தாள்; நாகராஜனின் நாயகியாக, மனைவியாக மாறினாள், ஊரும் நாடும் அறியும்படி.

4 நாகராஜனும் நாயகியும்

நாகராஜன்—நாயகி திருமணத்திற்கு நாலா பக்கத்திலிருந்தும் நண்பர்கள் வந்திருந்தார்கள்.

புதிய
பாத்திர ஸ்டோர்,
விருதுநகர்.

எங்களிடம் ஒரிஜினல் இங்கிலீஷ் தகட்டினால் தயாரிக்கப்படும் பித்தளை & செப்புப் பாத்திரங்களும், ஸ்டீல் சாமான்களும் சகாயமான விலைக்குக் கிடைக்கும்.

மொத்த ஆர்டர்களும் கவனிக்கப்படும்.

★

K. S. S.
நடராஜன் அன் பிரதர்ஸ்,
பாத்திர வியாபாரம்,
விருதுநகர்.

வாங்குங்கள்

அருந்துங்கள்
பேபி காபி பவுடரை

அன்பர்களுக்கு புதுவருட வாழ்த்துக்கள்

ANTON BAKERY,

(Pro: B. RICHARD)

VIRUDHUNAGAR.

★ அபூர்வ அன்டனின் அபார தயாரிப்பு!

★ பணத்தில் குறைந்தது பலத்தில் நிறைந்தது!

★ இளைத்தவர் இரும்புபோலாவார்!

★ அநுபவித்தவர்களே ஆனந்திப்பார்கள்!

அன்டன் ரஸ்க், ரோஸ்ட் கெற்ப ஸ்திரீகளின் கேடயம்!
அன்டன் ஆரரூட், பிஸ்கட் பாலர்களின் ஆசான்!
அன்டன் ஆல்மண்ட் கேக் வாலிபர்களின் நேசன்!
அன்டன் கோதுமைரொட்டி வயோதிகர்களின் போஷகன்!

அன்டன் பேக்கரி

ஆர். எம். டி. ஸி. புட்பால் பூல்,
கலெக்ஷன் டிப்போ, விருதுநகர்.

வையகம் உய்ய வள்ளுவர் வாய்மொழி.

நளினி ஜெய்வந்த்

மாதுரிதேவி

மகிழ்ச்சி மலர்—1952.

அணங்குகொல்? ஆய்மயில் கொல்லோ? கனங்குழை
மாதர்கொல்? மாலுமென் நெஞ்சு. —குறள்.

வாழ்த்துத் தந்திகள் நூற்றுக் கணக்காக வந்திருந்தன. இந்த திருமணத்தைப்பற்றி பிரமாத மாக எழுதப்பட்டிருந்தன பத் திரிகைகளில்

பரிசாக வந்த புத்தகங்களுக் கும், வெள்ளிச்சாமான்களுக்கும் கணக்குப் பார்த்தால் ஐயாயிரம் ரூபாய் மதிப்பிடலாம். நாகராஜ னுக்கு வந்த பரிசுகளைவிட நாய கிக்குத்தான் அதிகமாக வந்தன; அதிலே பெண் நண்பர்கள்கூட குறைச்சல்தான்; நாயகிக்கு ஆண் நண்பர்கள்தான் அநேகர் இருந்தனர். அவர்கள் அளித்த பரிசுப்புத்தகங்கள் பெரும்பாலும் ஆண்பெண் உறவைத் தெளிவு படுத்தும் 'செக்ஸ்' (Sex) சம் பந்தப்பட்டவைகளாகஇருந்தன.

இதுமட்டுமா? கல்யாணத் திற்கு ஒருவருடத்திற்குமுன்பே நாயகி பி. ஏ. பி. எல்லாகி வக்கீல் தொழிலை ஆரம்பித்திருந் தாள். கட்சிக்காரர்கள் பரிசுக ளுக்கும் கணக்குவழக்கில்லாமல் இருந்தது.

இவைகளைக் கண்டு நாகராஜ னே மலைத்துவிட்டான். நாய கிக்கு இவ்வளவு சிநேகிதம் ஊர் ஊருக்குஇருக்குமென்று அவன் எதிர்பார்க்கவே இல்லை.

கல்யாணமான இரண்டொரு வாரத்திலேயே நாகராஜனுக்கு வாழ்க்கையில் ஏமாற்றம்தோன்ற ஆரம்பித்தது.

'முதல் இரவு' முடிந்த மறு நாள் நாயகி ஊரிலே இருக்க வில்லை. தேச சேவை செய்ய வெளியூர் போய்விட்டாள். நாக ராஜனுக்கு ஓரேகோபம். ஆனால் —நாயகிக்கு நல்லபுகழ்! வாழ்க் கையின்சுகத்தையே விட்டுவிட்டு சேவை செய்ய வந்துவிட்டாள், சேவகி! அவள் ஒப்பற்றதியாகி! இப்படிச் சிலர் கூறினர்.

ஆனால்...

நாகராஜனுக்கு இந்தப் போலி தியாகமெல்லாம் பிடிக்கவில்லை. நாயகியைக் கட்டுப்படுத்த நினைத் தான். கூட்டங்களுக்குச் செல் வதாய்இருந்தால் என்கூடத்தான் வரவேண்டும்; மற்றப்படி கூட் டங்களுக்குப் போகக்கூடாது என்று கட்டளையிடவில்லை, நய மாகச் சொன்னான்.

நளினமாகப் பேச நங்கையர் களுக்கு, குறிப்பாக நாயகிக்கு தெரியாதா?

"என்ன இப்படிபேசுகிறீர்கள்? பொதுநலவாதிபேசுகிற பேச்சா இது? என்கூட தாங்கள் இல் லாவிட்டாலும் என்தந்தை தங்க ராயர் இருக்கிறார் அல்லவா?"

இந்த சமாதானத்தைக்கேட்ட நாகராஜன் எதுவுமேபேசமுடிய வில்லை. அப்பாவும் மகளும் சேர்ந்துசெய்யும் அரும்பணியை அரசியல்வாதி நாகராஜன் ஆட் சேபித்தால்...உலகம்சிரிக்காதா?

"நாயகியின் தந்தையா தங்க ராயர்? தங்கராயரால் சுவீகாரம்

செய்யப்பட்டவள்தானே நாயகி? அப்படியிருக்க தங்கராயர் பிற புருஷனேதவிர, பெற்ற தகப்பனல்ல!'' இந்த எண்ணம் நாகராஜன்மனதிலே இருந்து என்ன பயன்? மெல்லவும் விழுங்கவும் முடியாமல் விழித்தான். கட்டிய மனேவி சதா சாக்குப் போக்குச் சொல்லிக்கொண்டு எட்டியே இருப்பதைக்கண்டு வருந்தினன்; வாடினன்.

இந்த வேதனையின் காரணமாக தான் அரசியலில் அதிகமாக ஈடுபடுவதை நிறுத்தினன். ஆடிக்கொருதரம் அமாவாசைக்கொருதரம் என்பதைப்போல எப்போதாவது எங்காவது கட்டாயத்தின்பேரிலே செல்வான்.

அப்படி அவன்சென்றுகொண்டிருந்தபோது ஒரு செய்தியைக் கேட்டுத் திடுக்கிட்டான். மனம் பதறினன். காற்றுவாக்கிலே வந்தசெய்திதான் அது; ஆனல் கர்ணகொடூரமானது! வதந்திதான்; ஆனல் வாழ்க்கையைப் பாதிக்கக்கூடியது.

''ஏண்டா! தங்கராயரும்நாயகியும் என்னதான் 'அப்பா மகள்' என்றாலும்......தங்கராயர் மடியிலே நாயகி கிடப்பதும்...... ஒரே கட்டிலில் இருவரும் படுப்பதும்......சேச்சே...பிரசங்கம் செய்ய வந்த இடத்தில், இந்த லீலாவினேதமா?''

இந்தச்செய்தி நாகராஜனுக்கு அதிர்ச்சியாக இருந்தது; பைத்தியம் பிடித்துவிடும்போல் இருந்தது. இந்தஉண்மையை எப்படி அறிவது? அதுவும் காற்றுவாக்கிலே வரத்தான் செய்தது.

இந்தநாயகியை 'தத்து' எடுத்தவன் தங்கராயர்; படிக்கவைத்து வளர்த்தவன் அவன்தான். நாயகி பருவமடைந்ததும் வீட்டோடு அவளைவைத்துக்கொண்டு தந்தை-மகள் நாடகம் நடத்தியவன்தான் தங்கராயர். உண்மையிலேயே தங்கராயரும் நாயகியும் அந்தரங்கக் காதலர்கள். பன்னிரண்டாவது வயதிலேயே நாயகியைக்கெடுத்துவிட்டானும் பாவி!

இவ்வளவு அறிந்த பின்னும் மானமுள்ளவன் சும்மா இருப்பான? பொதுக்கூட்டங்களுக்கே போகக்கூடாது என்று உத்தரவு போட்டான். தங்கராயர் இருக்கிற பக்கம் தலைவைத்து படுக்கக்கூடாதுஎன்றன். பி.ஏ பி.எல். படித்த வக்கீல் நாயகி இதற்கெல்லாம் வளைவாளா?

''சந்தேகம், சந்தோஷ வாழ்வின் சத்ரு'' இப்படிவேதாந்தம் பேசினள் நாயகி. ஆனல்...... நாயகி பப்ளிக் பிராசிக்கூட்டராக நியமிக்கப்பட்டாள். அதற்கப்புறம் அவள் கட்சி பிரசாரத்திற்கு போக முடியவில்லை.

இதனல் நாகராஜன் திருப்தி அடைந்தான? எப்படி அடையமுடியும்? கோர்ட் விஷயம் என்று கூறிக்கொண்டு வீட்டுக்கே வராமலிருந்தாள், நாயகி.

கணக்கற்ற ஆண்களோடு கண்ட கண்ட இடங்களிலே சுற்றிதிரிந் தாள். கண்டித்துக் கேட்டால்... வழக்குக்கு வேண்டியவர்கள் என்று பதில் சொன்னாள்.

இதைக்கூட கொஞ்சநாள் பொருத்தே வந்தான். ஆனல் அன்று இரவு அவன் கண்ட காட்சி......!

எவனோ கல்லூரியிலே கூடப் படித்தவனும். நாயகியை கட்டி அணைத்து முத்தமிட்ட காட்சி யைக் கண்ணாடியிலே பார்த்து விட்டான் நாகராஜன்.

வெளியே சொன்னால் வெட் கம்! சொல்லாமல் இருந்தால் வேதனை! வீட்டைவிட்டே வெளியேறிவிட்டான்.

5 இது என்ன உலகம்?

காடுமேலே எல்லாம் சுற்றினன்; வருடங்கள் ஒன்று இரண்டு என்று மூன்றுக்குமேல் ஓடின. நாகராஜன் நடைப்பிணமாக அலைந்துகொண்டிருந்தான். வா டிய முகத்திலே தாடி வளர்ந்து, பிச்சைக்காரனிலும் கேடுகெட்ட வனாகக் காட்சியளித்தான் லட் சாதிபதி நாகராஜன்.

காதல் என்பது கற்பனை! காதலின் பெயரால் நாட்டிலே தினமும் மக்கள் ஏமாற்றப்படு கிறார்கள்! உண்மைக் காதல் என்பதெல்லாம் உளறல்!

இந்த உடலை தீண்டும் உரிமை உங்களுக்குத்தான்என்று கூறிய நாயகி அடுத்தவன் அணைப்பிலே இருக்கிறாளே, இதுவா காதல்?

கல்யாணம் நடப்பதற்குமுன் காய்ச்சலாக படுத்திருந்த நாயகி யிடத்திலே "நாயகி நாலுநாள் காய்ச்சலிலே மெலிந்துவிட்டா யே...மருந்தும் டானிக்கும் சாப் பிடு என்று சொன்னதற்கு...... உங்களைப் பார்த்துக்கொண்டிருந் தாலே இரத்தம் என் உடம்பில் ஊறுமேஎன்று சொன்ன நாயகி இன்று என்னை உதாசீனம் செய் துவிட்டு வாழ்கிறாளே, இதுவா காதல்?

"காதலுக்கும் கடவுளுக்கும் பேதமில்லை" என்பார்கள்! உண் மைதான். எப்படி இல்லாத கடவுளை இருப்பதாகக் கூறி, அதற்கு ஆலயங்கட்டி, அப்பாவி மக்களை ஏமாற்றுகிறார்களோ, அதைப்போலதான் இல்லாத காதலை, அழகுபடக் கூறி கண் ணிலே மண்ணைத் தூவுகிறார்கள்.

இப்படி ஏதேதோ சொல்லி நாகராஜன் புலம்ப முடிந்ததே தவிர வாழமுடியவில்லை. பிச்சை எடுத்தான்; வீதியிலேபடுத்தான்.

இந்த சமயத்தில்தான் தைப் பொங்கல் வந்தது. பட்சியினங்க ளுக்காவது வெண்பொங்கல் கிடைத்தது. நாகராஜனுக்கு அன்றைய உணவுக்கே பஞ்சம்.

இதே பொங்கல் திருநாளில் ஐந்து வருடங்களுக்குமுன் திரு மணம்! ஆனல் இன்று...... நாளையோமறுதினமோ மரணம்

இலங்கை பூராவிற்கும்
மகிழ்ச்சியின்
சோல் ஏஜண்டாக
கீழ்க்கண்டவரை நியமித்திருக்கிறபடியால், இலங்கையில் சப் ஏஜன்ஸி எடுக்கவிரும்புகிறவர்கள் ஷையார் விலாசத்திற்கு எழுதிப் பெற்றுக்கொள்ள வேண்டுகிறோம்.

த. தம்பித்துரை,
நியூஸ் ஏஜண்ட்,
No. 226, ஆஸ்பத்திரி ரோடு,
யாழ்ப்பாணம்.

அன்று இரவு கையிலே கிடைத்த பிச்சைக்காசுடன் ஒரு குடிசையில் நுழைந்தான் நாகராஜன். கையிலே இருந்த பணத்தை அந்தக் குடிசையில் இருந்த பெண்ணிடம் கொடுத்தான். “ஐயா! கொஞ்ச நேரம் பொருத்துக்கொள்ளுங்கள். சாப்பாடு தயார்செய்கிறேன்”என்று சொன்னாள். ஆனால்......

அப்போது நுழைந்த போலீசார், அந்தப் பெண்ணையும் நாகராஜனையும் கைது செய்தனர். ‘விபசார’குற்றம்சாட்டி கோர்ட்டிலே நிறுத்தினர்.

‘நிரபராதி’ என்று எவ்வளவோ சொல்லிப்பார்த்தான் நாகராஜன். ஆனால் அந்தப் பெண் எப்போதோ விபசாரக் குற்றத்திற்காக முன்பு அபராதம் கட்டியவளாம்! இதைவைத்து நாகராஜனுக்கும் அந்தப் பெண்ணுக்கும் ஆறுமாதத்தண்டனை என்று சொல்லிவிட்டு நீதிபதி எழுந்து சென்றார்.

சிலைபோல் ஸ்தம்பித்து நின்ற நாகராஜன் நீதிபதி செல்வதை பார்த்துக்கொண்டே இருந்தான். நீதிபதி ஆணல்ல, பெண்!

“யார் அந்த நீதிபதி? நாயகி அந்த நீதிபதியா? நான் விபசாரம் செய்தேன் என்று நாயகியா தீர்ப்பளிப்பது? இது என்ன உலகம்?”

விழித்துப்பார்த்தான். அவன் இருந்த இடம் சிறை உலகம்?★

சுருட்டுகளில் சிறந்தது

தனுஷ்கோடி விலாஸ்

சுருட்டுகளே!

காரம், மணம்,
குணம், நீரும்
தன்மை
யுள்ளது
தனுஷ்கோடி
விலாஸ்
சுருட்டுகளே!

ஸ்தாபிதம் **1926.**

தனுஷ்கோடி விலாஸ்

சுருட்டுத்தொழிற்சாலை, விருதுநகர்.

தாங்கள் நல்ல காபி அல்லது டீ விரும்பும் சமயம்

"அய்யனூர்"

என்ற பெயரை நினைவு கூறுங்கள்
கலப்படமற்றது உத்திரவாதமுள்ளது.

தயாரிப்பாளர்:

அய்யனூர் காபி & டீ கம்பெனி,
தூத்துக்குடி.

பிராஞ்சுகள்:

மதுரை, திண்டுக்கல், திருநெல்வேலி,
கோவில்பட்டி, அருப்புக்கோட்டை &
கும்பகோணம்.

[நா. சதானந்தம்]

"என்ன மிஸ்டர் சுகுமார், இன்று அபூர்வமாகஇருக்கிறதே உன்னுடைய வரவு. இவ்வளவு நேரத்திற்கு எக்ஸ்பிரஸை மீட் பண்ண ஸ்டேஷனுக்குச்சென்று விடுவாயே" என்ற வியப்புடன் வினவினான் தனது காலேஜ் நண்பன்வருகைகண்டு சந்தோஷ்

"மிஸ்டர் சந்தோஷ் நீங்கள் கூறுவது சென்றவாரம்வரை உண்மைதான். ஆனால் கடந்த நான்கைந்து நாட்களாக என் மைண்டே சரியாகஇல்லை. ஒரே குழப்பமாக இருக்கிறது. கொஞ்சம் காற்றாட வாக்கிங் போய்வர உன்னை அழைத்துக்கொண்டு போகலாமென்றுதான்வந்தேன்" என்று அவன் கூறும்பொழுதே அவனது கலவரம்நிறைந்த முகம் ஏதோ ஒரு இக்கட்டானநிலையில் தவிக்கிறான் என்பதை புறவிதழைப்பொத்துக்கொண்டுசெக்கச் செவேரென்று வெளிக்கிளம்பிக் கொண்டிருக்கும் ரோஜா மொட்டுப்போல் காட்டியது.

தனது நண்பனை இந்நிலையில் கண்ட சந்தோஷ் வேறுபேச்சுக்கிடமின்றி தலையைவாரிக்கொண்டு புறப்பட்டான்.

* * * *

சுகுமாரும் சந்தோஷும் காலேஜ் நண்பர்கள். நான்கு ஆண்டுகள் ஒன்றாகவே பயின்று இவ்வாண்டுதான் பி.ஏ. முடித்து பட்டம் பெற்றுள்ளவர்கள்.

சுகுமாரனின் தகப்பனார் ஒரு சீர்திருத்தவாதி. பணக்காரர். பெண் கல்வியில் ஆர்வம் மிகுந்தவர். பல ஏழைமாணவிகளுக்கு ஆண்டுதோறும் இனாமாகப் புத்தகங்கள் வழங்கிவந்தார். சில பெண்களுக்கு பள்ளிச் சம்பளம் கூட மாதாமாதம் கட்டிவந்தார். பெண்கள் கல்வி கேள்விகளில் முன்னேறினால்தான் வருங்கால சந்ததிகள் வளமுடன் விளங்குவார்கள் என்ற உண்மையை உணர்ந்து ஏழை மாணவர்களை விட ஏழை, எளிய பெண்களில் தேர்ச்சியுள்ளவர்களுக்கு ஊக்கங் காட்டி வந்தார். ஊரிலும் நல்ல பெயர்.

இப்பேர்ப்பட்ட குணவானின் மகன்தான் சுகுமாரன். ஒரே

மகன். செல்வமாய்வளர்ந்தவன். பெண் கல்வியிலேயே அவ்வளவு சிரத்தை கொண்ட சிங்காரவேல வர், தன் ஒரே மகனை படிக்க வைக்காது விடுவாரா? அவனை யும் பி. ஏ. வரை படிக்கவைத்து விட்டார். அவன் பி. ஏ. வரை படித்து முடித்தது பிரமபிரயத் தனம்என்றுதான் கூறவேண்டும். படிப்பில் சுமார்தான் என்பது மட்டுமல்ல, தகப்பனரின் சொத் துக்கு ஒரே மகன் என்றதால் அவன் பத்தாவது முடிக்கு முன்பே பலர் நான், நீ என்று பெண்கொடுக்க முந்தியடித்துக் கொண்டு நின்றூர்கள்.

வருந்திப் பொருளீட்டவேண் டிய அவசியமில்லாதுகவலையற்று, ஏதோ பொழுது போக்கிற்குக் கலாசாலைக்குச் சென்றுகொண் டிருப்பதாக நினைத்து ஜாலியாகச் செலவு செய்துகொண்டு திரிந்த வன் காதில் 'கல்யாணம்' என்ற சொல், கணகண என்று ஒலித் தது. எப்படியாவது பத்தாவதை முடித்தவுடன் கல்யாணத்தைக் கட்டிக்கொண்டு சொகுசாக இருக்க வேண்டுமென்றே எண் ணினுன்.

ஆனுல் அவன் தந்தை விட் டால்தானே! ஒரேயடியாக பி.ஏ. முடித்துவிட்டுத்தான் வேறுபேச் செல்லாம் என்றுகூறியது கல்வி விட்ட மண்கலம்போல் அவனது இன்ப எண்ணங்களை சுக்கு நூருக்கிவிட்டது.

வேறுவழியின்றி காலேஜிலும் சேர்ந்தான். நாளடைவில் ஒரு வித ஆர்வம் பிறந்தது. காலேஜ் வாழ்க்கை ஒருவித புத்துணர்ச்சி யை ஊட்டியது. காரணம் அக் கல்லூரியில் அவனுடன் பல மாணவிகளும் சேர்ந்து பயின் ருர்கள். இது அவனுக்கு பெரும் உற்சாகத்தை அளித்தது.

தேரத்திற்கொரு அலங்காரம் செய்து உலாவலானுன். பணம் தண்ணீர்போல புளங்கியது. அவன் தகப்பனர், பையன் எப் படியாவது படித்தால் போதும் என்ற கொள்கையிலிருப்பவர். மகனின் செலவையா கணக்குக் கேட்கப்போகிருர். சிநேகிதர்க ளும் பெருகினுர்கள்.

மணி மாலை 5-30 என்ருல், சுகுமாரனை ரயில்வே பிளாட் பாரத்தில்பார்த்துக்கொள்ளலாம். அடாது மழையானுலும் விடாது தொடர்பு கொண்டிருந்தான் எக்ஸ்பிரஸ் டிரெயினை அனுப்பி வைப்பதில். இவனைப்போல் இன்னும் எத்தனையோ பிரகஸ் பதிகளைக் காணலாம் இப்படி எக்ஸ்பிரஸ் வண்டிகளை வழிய னுப்பும் வேலையில்.

பிளாட்பார காட்சிக்கென்றே தனிரகமாக அலங்கரித்துக் கொண்டு வரும் சட்டையின் காலரை விரைக்கத் தூக்கிவிட்டு ஸ்டைலாக சிகரெட்டைப் பிடித் து, இடம் பெயர்ந்து செல்லும் எரிமலைபோல் புகையைக் கக்கி

ஒன்றுக்கு ஐந்துமுறை எஞ்சின் முதல் L. V. போட்டிருக்கும் கார்டுவேன்வரைஉலாவித்திரிந்து எங்காவது வண்டிக்குள் ஒரு மாதிரியாகக் கலர் தெரிந்தால் அந்தக் கம்பார்ட்மெண்டிற்கு எதிராக நின்று நண்பனிடம் சண்டப்பிரசண்டங்களை அவிழ்த்துவிட்டு, வண்டிபோனவுடன் கொட்டாவி விட்டுத் திரும்பும் திருக்கூட்டத்தில் ஒருவனுகத் திரிந்தான் நமது சுகுமாரும்.

இப்பேர்ப்பட்டவன், சந்தோஷின் வீடுதேடி வந்து வருந்திய முகத்துடன் வாக்கிங் போக அழைக்கிருன் என்ருல் வியப்பாக இருக்காதா? மேலும் கல்லூரியில் பயிலும் காலத்தில் கண்டபடி இரயில் நிலையங்களிலும், காலேஜ் முடிந்த சமயங்களில் லேடிஸ்டூடன்ஸ் செல்லும் பாதைகளிலும் நின்று அரட்டை அடிப்பவைகளையும் இவன் கண்டித்த சமயங்களில் அதைப் பொருட்படுத்தாதவன் இப்பொழுது 'மைண்டே சரி இல்லை, குழப்பமாகஇருக்கிறது' என்று கூறிவந்தால் அதுபற்றி தெரிந்து, ஆறுதல் கூருமலிருக்க எப்படி மனம் வரும்?

இருவரும் நடந்துசென்று கொண்டே இருந்தார்கள். ஏறக்குறைய ஊரைவிட்டு இரண்டு பர்லாங்கிற்குமேல் சென்றுவிட்டார்கள். இதுவரையும் சுகுமார் இடைஇடையே பேசிக்கொண்டு வந்ததெல்லாம்ஏதோஒப்பனைக்கு என்பதை நன்கு உணர்ந்து கொண்டான் சந்தோஷ்.

ரோட்டைவிட்டு விலகி, சற்று தூரத்தில் ஓடிக்கொண்டிருந்த சிறு ஓடையின் புல் வெளியில் போய் அமர்ந்தார்கள் இருவரும். சிறிதுநேரம் இருவரும் மௌனமாக இருந்தார்கள். சந்தோஷ் தான் முதலில் ்பேச்சை ஆரம்பித்தான்.

"என்னசுகுமார், ஏதோ ஒரு வித கலேபரத்துடனேயேகாணப்படுகிருய். விஷயம் என்ன?"

"விஷயம் சாமான்யமானதல்ல என்வாழ்க்கையைப்பொருத்தது. எனது ஜீவனின் இறுதிநாள் வரை பிணைப்புக்கொண்டசமாச்சாரம். இதில் பல விஷயங்கள் குறித்து உன்னுடன் தர்க்கிக்கவே உன்னை அழைத்துவந்தேன்"

"ஓஹோ! கல்யாணவிஷயமா?"

"ஆம்! அதுதான் பெரும் மண்டையடியாக இருக்கிறது. எதைக் கொள்வது எதைத் தள்ளுவது என்று ஒன்றும் புலப்படவில்லை"

"என்னப்பா, நம்ம சிநேகிதர்கள் எத்தனையோ பேர்களுக்கு நீயே பெண் சூஸ் பண்ணிக் கொடுத்து காரியத்தை நிறைவேற்றியிருக்கிருய். இப்பொழுது உன் விஷயத்தில்......"

"முழுசைபராகத்தான் போய் விட்டேன். டாக்டரின் குழந்தைக்கு ரண சிகிச்சை என்ருல்,

அவர் எவ்வளவு கெட்டிக்காரராக இருந்தாலும் பிறடாக்டரை நாடுவதுபோல் உன்னை நாடி வந்துள்ளேன் இப்பொழுது''

"அவ்வளவுதடுமாற்றத்திற்குக் காரணம்''

"இதோ பார் சந்தோஷ், என் தகப்பனார் காலேஜில் வாசித்த ஒரு பெண்ணைக் கட்டவேண்டுமென்கிறார். யாரோ ஒரு சுமாரான இடத்துப் பெண், பி ஏ. படித்தவளாம். அவ்வளவு நிறமில்லாவிட்டாலும் சுமாராக இருக்கிறாளாம். அவளைக் கட்டிக்கொள்ளவேண்டுமென்கிறார்''

"அதற்கு உன் அபிப்பிராயம் என்ன?''

"எனக்குப் பிடிக்கவில்லை. படிப்பு என்ற முறைக்கு வண்ணான் கணக்கு எழுதவும், சில்லறை சரியாக வாங்கவும் தெரிந்தால் போதும். ஆனால் நல்ல அழகாக, கலருடன் இருக்கவேண்டும் என்று கருதுகிறேன். அப்படிப்பட்ட பெண்கள் ஏராளமாக பணக்காரர் வீடுகளிலிருந்து வருகின்றன''

"இது மிகவும் சிக்கலான விஷயம்தான் சுகுமார்''

"அதனால்தானே உன்னைநாடி வந்தேன்''

"இது முழுவதும் உன்னைச் சார்ந்தவிஷயம். நீயேதான் உன் மனதிற்குகந்த மங்கையைத்தேடி மணம்செய்துகொள்ளவேண்டும். இந்த விஷயத்தில் ஒவ்வொருவர் கருத்தும் ஒவ்வொருமாதிரியாக இருக்கும். சிலர் அழகையே பிரதானமாகக் கருதலாம். சிலர் அறிவை பெரிதெனவிரும்பலாம். மற்றும் சிலர் பணம் நிறையக் கிடைத்தால்போதும், பெண்எப்படி இருந்தாலும் பரவாயில்லை என்று 'ஏலத்தில் கூடியதொகை கேட்பவர்களுக்கே சாரிசெய்யப்படும்' என்ற நிபந்தனைபோல் யார் அதிகமாகப் பொன் கொடுத்து பெண்ணைக் கொடுக்கிறார்கள் என்று எதிர்பார்த்தும் இருக்கலாம்''

"சந்தோஷ் இந்த வேதாந்தப் பேச்சுக் கேட்கவரவில்லை. இப்பொழுது நாம்இருவரும் காமன் கதை பாடும் எரியும் கட்சி, எரியாக் கட்சி போன்ற இரு எதிரிகள். நான் அழகை விரும்புகிறேன். பணமும், படிப்பும் அடுத்தபடிதான்''

"நான் அறிவுக் கட்சி. அழகும் ஆஸ்தியும் அடுத்தபடிதான். 'கற்றாரைக் கற்றாரே காமுறுவர்' என்றபடி நான் கல்யாணம் செய்வதென்றால் என்னைப்போல் பி. ஏ. படித்த பெண்ணைத்தான் கல்யாணம் செய்துகொள்வேன். எம். ஏ. படித்த பெண் வந்து கட்டிக்கொள்ளுகிறேன் என்று சொன்னால்கூட பின்வாங்கமாட்டேன்''

"அப்படியானால் நீ ஒரு பைத்தியம் என்றே கூறுவேன்''

"அறிவை நாடுபவன் பைத்தியமானால், அழகை நாடுபவனை

விரைவில்
வெளிவருகிருள்!

குமாரி

புத்தாண்டில்
புதுமைகள் நிறைந்த
உன்னத
தமிழ்ச் சித்திரம்

தமிழ் மக்களின்
உள்ளங்கவர்ந்த நடிக
நக்ஷத்திரங்கள்
எம். ஜி. ராமச்சந்திரன்
செருகளத்தூர் சாமா
புளிமூட்டை இராமசாமி
ஸ்ரீரஞ்சனி (ஜூனியர்)
மாதுரி தேவி
முதலியோர் நடித்தது.

மதுரை,
இராமநாதபுரம்,
திருநெல்வேலி
ஜில்லா
புக்கிங் விபரங்களுக்கு
ராதாகிருஷ்ணு
பிலிம்ஸ் லிமிடட்.,
மதுரை :: திருநெல்வேலி

சந்தானம்
டைப் பௌண்டரி

டெயிலர் தெரு - தெற்குவெளி வீதி

மதுரை.

எங்களால் தயாரிக்கப்படும் தமிழ், ஆங்கில எழுத்துக்கள், சென்னைமாகாணத்தின் தென் பகுதியிலுள்ள அச்சாபீஸ் நிர்வாகிகள் அனைவரின் ஏகோபித்த நன்மதிப்பையும், ஆதரவையும் பெற்றுள்ளது!

ஏன்?

- ★ நீடித்த உழைப்பு
- ★ ஆழமான வார்ப்பு
- ★ கவர்ச்சிகரமான தோற்றம்
- ★ சமீபத்திலும், சமயத்திலும் கிடைக்கிறது.

SANTHANAM TYPE FOUNDRY,

Tailor Street, MADURAI.

எந்த வார்த்தையில் அழைப்பது என்றே தோன்றவில்லை. கேவலம் குறிப்பிட்ட காலத்திற்குள் அழியும் தன்மையுடைய அழகு ஒன்றிற்காகவா மண்டியிடுவது''

''மண்டியிடவில்லை சந்தோஷ மாலைகூட விரும்புகிறேன். மனிதனின் உணர்ச்சி பூராவையுமே கவரக்கூடியது அழகு''

''உணர்ச்சியைத்தான் கவர முடியுமே தவிர உள்ளத்தைக் கவரமுடியாது சுகுமார். உள்ளம் கவர்ந்ததுதான் என்றும், உருக்குலையாமல் நிலைத்து நிற்கும்''

''சுற்றி வளைத்துக்கொண்டு போகவேண்டாம். இப்பொழுது குடும்பத்துடன் ஏதாவது ஒரு ஊருக்குப் போகிறோமென்றால் உடன் வரும் மனைவி அழகுள்ளவளாக இருந்தால்தானே பெருமையாக இருக்கும்''

''அழகுள்ள மனைவியைப் பெற்றவன் நெருப்பின்மீது நடப்பவனை ஒத்தவன் என்று கூறுவதுண்டு. எதிரே வரும் அத்தனை பேரது கண்களும் அவள்மீது விழும். ஏனென்றால் அழகிற்கு ஆகர்ஷிக்கும் சக்தியுண்டு. இதை நான் தவறாக ஒன்றும் கூறவில்லை. அழகிருக்கும் இடத்தில் அறிவும் சேர்ந்திருந்தால் சூழ்நிலையை எளிதில் புரிந்து அதற்கேற்றபடி நடந்து கொள்ள முடியும். இல்லையெனில் ஒருசில கெடுமதி ஆண்களின் சிந்தனைக்கும், கண்களுக்கும் காட்சிப் பொருளாகவே அமைந்துவிடும் அந்த இடத்தில் அழகு''

''அப்படியானால் அழகுள்ள பெண்களைக் கட்டியவர்களெல்லாம்.........''

''வீணாக குதர்க்கம் பேசாதே அழகுடன் அறிவும் வேண்டுமென்று அப்பொழுதே கூறினேனே''

''அறிவு அறிவு என்று அடித்துக்கொள்ளுகிறாயே, சிலபடித்த பெண்கள் செய்யும் பகட்டுச் சாகசங்கள் உனக்குத்தெரியுமா''

''உனக்குச் சில படித்த ஆண்கள் செய்யும் அட்டகாசங்கள் தெரியுமா?''

''அப்படி ஆண்கள் அட்டகாசம் செய்கிறார்களென்றால், அது தங்களுக்கு மினுக்குக்காரிகளின் நெகிழ்ச்சியால்தான் இருக்கும். ஏன் 'இந்திரன் கெட்டதும் பெண்ணாலே, சந்திரன் கெட்டதும் பெண்ணாலே' என்று நீ கேள்விப்பட்டதில்லையோ?''

''இந்திரனையும் சந்திரனையும் பெருமைப்படுத்தி, கயிறு திரித்துக் கதை புனைந்தவர்கள் ஆண்கள் என்பதை மறந்துவிடவேண்டாம். தெரியாத ஒன்றை ஏன் கற்பனைசெய்யவேண்டும்? இன்று நடைமுறையில் நிகழ்வதை நாம் கண்முன்னேயே பார்க்கிறோமே. பெண்கள் அலங்காரமாக ஆடை அணிவது தப்பா? பள்ளியிலிருந்தும், கல்லூரியிலிருந்தும்

அவர்கள் செல்லும்போது ஆடுக ளைப்பின்தொடரும் ஓநாய்போல் திருட்டு விழி விழித்துத் திரிப வர்கள்ஆண்களா அல்லது பெண் களா? எங்காவது இப்படிப் பெண்கள்ஆண்களைத்தொடர்ந்து சென்றார்கள் என்று காட்ட முடியுமா?''

''இவை முன்பே நீ என்னைப் பற்றிக் கூறியவைதான். இருந் தாலும் கவர்ச்சிஇருக்கிற இடத் தை மனம் நாடுவது இயல்பு தானே! அவர்களின் விநோத மான நடையுடைகள் கண்களை உறுத்தத்தானே செய்கின்றன. காலேஜில் படிக்கும் கர்வம்தான் அவர்களை ஆபாசமாகவெல்லாம் உடை அணியச் செய்கிறது. இவர்களை தூரத்திலிருந்து பார்த்துரசிக்கத்தான் பயன்படுத் திக்கொள்ளலாமேதவிர, அருகில் சாஸ்வதமாக இருத்திக்கொள்ள இயலாதவர்களே''

''இங்குதான் ஆண்களின் சுய நலத்தை அப்பட்டமாகக் காண நேரிடுகிறது. பலபலவிதங்களில் பெண்கள் அழகுபடுத்திக்கொள் ளுகிறார்களென்றால், அவர்களுக் குரியஆடைகள் அப்படி அமைந் துள்ளன. இதைக்கண்டு பொறு மைப்பட வேண்டியதில்லை. அத னால் பின் செல்லவேண்டுமென் பதுவுமில்லை. இன்று வெளி வரும் அருவருக்கத்தக்க ஆபாச மான சினிமா படங்களின் குறைந்த தரத்தினாலும் சில பெண்கள் தங்களை அலங்கரித்துக் கொள்ளுகிறார்கள். இது விரும் பத்தக்கதல்லதான். அதற்காக அவர்களெல்லாம் என்றுமே அப்படியேஇருப்பார்கள்என்றோ நேர்மையைஏற்றுக்கொள்ளமாட் டார்களென்றோ முடிவுகட்டிவிட முடியாது. ஏனெனில் தமிழ்ப் பெண்களின் பண்பு, கல்யாண மானபின் கணவனின் விருப்பு வெறுப்பை ஏற்று நடப்பதே''

''அதுசரி, அந்தக் காலத்துப் பெண்களெல்லாம் பி.ஏ., எம்.ஏ. படித்துத்தான் பதிசேவை செய் கிறார்களோ''

''அன்று அநேக ஆண்களும் தான் பி.ஏ., எம்.ஏ. படிக்க வில்லை. நீயும் அவர்களைப்போல் வேஷ்டியும், தலையில் ஒரு முண் டாசும்கட்டிக்கொண்டு, சட்டை யின்றி வேலைவெட்டி பார்ப்பது தானே. எதற்கு இந்த சூட்டும் கோட்டும்? எல்லாம் காலத்தை ஒட்டிப் போகவேண்டும். கற் றோம்; அதற்குகந்தபடி பகுத்தறி வைப் பயன்படுத்துகிறோம். அது போலவே கற்ற மனைவியைப் பெற்றவன் பாக்கியவான்என்றே கருதுகிறேன். அதிலும் 'ஆணும் பெண்ணும் சரிநிகர் சமானமிந்த நாட்டில்'என்று பெருமைப்பட்டு வரும் இந்நாளில், சம கல்வியும் பெற்ற இரு தம்பதிகளைப்பற்றிப் பெருமைப்படாது இருக்கமுடி யுமா?

அழகு இருக்குமிடத்தில் சில சமயம் அறிவு இருக்காது. அந் நேரங்களில் காலேஜில் படித்த

நமக்கு புதிய இடங்களுக்குக் கூட்டிச்சென்ற சமயங்களில் நம் மனைவி அப்படி நடக்கவேண்டும் இப்படி நடக்க வேண்டுமென்று ஏதேதோ ஆகாயக்கோட்டை கட்டி, எடுத்துக் கூறினாலும் அவர்கள் அதைப் புரிந்துகொள் வதே மிகவும்சிரமமாகவும் இருக் கும். இவையெல்லாம் சில அனு பவசாலிகளின் உண்மை நிகழ்ச் சிகளை அறிந்தே கூறுகிறேன்''

''ஊர்சுற்றித் திரிவதற்காகவா கல்யாணம் செய்கிறோம் வீட் டிற்குள் வரும் புருஷனுக்கு உபசாரம் செய்து இருந்தால் போதாதோ''

''இப்படி பி. ஏ. படித்த நீ பேசுவது மிகவும் வியக்கத்தக்க தே. உனக்காக நான் மிகவும் வருந்துகிறேன்.

இது ஊர்சுற்றிகளின் உதவாக் கரைப் பேச்சு. உனக்கு இப் பொழுது வேண்டிய பணம் இருக்கிறது. எனவே நீ அடங்கி ஒடுங்கிக் கிடக்கும் பெண்ணை விரும்புகிறாய். மேலும் படித்த பெண்ணென்றால் நீ வெளியில் சுற்றுவதைக் கட்டுப்படுத்தி மட்டம் தட்டுவாளென்பதையும் தடுக்க இப்படி விரும்புகிறாய் என்றே நான் கருதுவேன்.

என் நிலையில், ஏழைப் பெண் என்றாலும் என் அளவில் கல்வி கற்ற பெண்ணை விரும்பி மணந் து, இருவருமே சம்பாதித்துச் சாப்பிடுவதையே உயர்வாகமதிப் பிடுகிறேன். இதில் கேவலம் ஒன்றுமில்லை.

இன்று நடைபெறும் வயது வந்தோர் ஓட்டுரிமையின் தேர்த லில், மலையாள நாட்டில் நடந்த வாக்குப் பதிவுகளின் எண்ணிக் கையைப் பார். 100க்கு 86, 90 பேர்வரை வாக்களித்திருக்கிறார் கள் என்றால் அது எதைக் குறிக் கிறது. அந்நாட்டின் கல்வியின் மேம்பாட்டையே யல்லவா. அம்மக்கள் இந்தியாவில் மட்டு மல்ல, வெளிநாட்டிலும், ஆணும் பெண்ணுமாக எத்தனை பேர் உயர்ந்த உத்தியோகங்களில் அமர்ந்துள்ளார்கள். அந் நாட் டார் கொள்கை எது தெரியுமா? 'மக்களின் அறிவுக் கண்களை கல்வியின்மூலம் திறந்து விட்டு விடவேண்டும். உலகம் பரந்து கிடக்கிறது; அதில் எப்படியும் உலாவித் தங்களைச் சமாளித்துக் கொள்வார்கள்' என்பதுதான். இதை நான் பெரிதும் போற்று கிறேன்.

அழகை நான் குறைத்துப் பேசவில்லை. ஆனால் அது ஒன் றை மட்டும் பிரதானமாகக் கரு தக்கூடாது ரோஜா மலர்ந்த அன்று அழகாகத்தான் இருக்கி றது, ஆனால் அடுத்த நாள்? அழகான ஆடை, ஒரு நாள் கிழியும் த்ன்மையுடையதுதான்!

வளர்பிறையில் சந்திரனின் அழகு அதிகரித்துக்கொண்டே போகிறது. பூரணப்பொலிவுடன்

விளங்குகிறது முழுநிலாவன்று. ஆனால் அதன் பின்?

அதுபோலவே மாதர் அழகும் விவாகமாகும்வரை, விவாகமாகி ஓரிரு குழந்தை பெறும் வரைதான். பின் படிப்படியாக உருமாற்றமேயாகிறது. இது மறுக்க முடியாதது. அழகு மட்டுமல்ல, ஆடை அலங்காரங்கள்கூட குறைந்துவிடுகிறது. உனக்கு நம்முடன் இண்டர் முதல் வகுப்பில் படித்த ஜீவகன் ஞாபகமிருக்கிறதா?''

"யார், படித்துக்கொண்டிருக்கும்போதே கல்யாணம் செய்து கொண்டு, பின் படிப்பில் நாட்டம் கொடுக்கவில்லை என்று கல்லூரியைவிட்டே ஓடினானே!''

"அவனேதான்! ஒரு அழகான பெண்ணைக் கண்ணி போட்டுக் கொண்டே திரிந்தான். அது என்று குமாரிஆனதோ அன்றே வீட்டிலுள்ளவர்களைத் துளைத்து கல்யாணம் செய்துகொண்டான். அது பணக்காரர்வீட்டுப் பெண். படிப்பு மிகவும் குறைவு. ஆனால் கண் நிறைந்த அழகு. இரண்டாண்டில் கையில் ஒன்றும் இடுப்பில் ஒன்றுமாக இரண்டு குழந்தைகள்.

ஆள் வெளுத்துப்போய், சோபையிழந்து, சோடனை குன்றி, சோர்வாகவே காணப்பட்டாள் எப்பொழுதும். சதா மருந்து தான். இந்நிலையில் மூன்றுமாதக் கர்ப்பம் வேறு. கேட்கவேண்டுமா பலவீனத்திற்கு.

படித்தபெண்ணாக இருந்திருந்தாலாவது எப்படியாவது தன் கணவனைக் கட்டுப்படுத்தியிருப்பாள், ஆண்டுக்கொரு பிள்ளை பெறும் யந்திரமாக உபயோகப் படுத்தாதிருக்கும்படி.

பலவீன உடம்பைப் பற்றிக் கொள்ள வியாதிகளுக்காபஞ்சம்? பெரியம்மைவேறு பற்றிக்கொண்டது. முகமெல்லாம் ஒரேகொப்புளம். ஒரு வழியாக அதிலிருந்து உயிரும் உடலும் மீண்டது. ஆனால் உடலும்முகமும் அம்மையின் அடையாளக் கரும்புள்ளிகளால் விகாரமடைந்தது.

அன்று அவளை எந்தநிலைமையில் நேசித்து ஏற்றானோ அதே ஜீவகனின் நடவடிக்கைகள் இன்று அதற்குநேர்மாறாகஇருக்கிறது. இவற்றைக்கூறி வீணாக உன்னை மிரட்டுகிறேன் என்று கருதாதே. நடந்த உண்மை.

உயிரும், உடலும் சேர்ந்தே அவஸ்தைக்குள்ளானாலும், உயிர் அப்படியே மீண்டுவிட்டது. ஆனால்உடல்? தன்நிலைமாறி, உருமாறிவிட்டது. உயிர்போலவே அறிவும் அப்படியே இருக்கும். ஆனால் அழகு இப்படிப் பல காரணங்களால்அழியக்கூடியதே.

கல்லாலோ, வெங்கலத்தாலோ அடித்த சிலையானால், அழகு குறைந்தால் உடனுக்குடன் மெருகு கொடுத்துக்கொண்டே இருக்கலாம். ஆனால் உயிர் படைத்தமக்களின் அழகு காலப்

போக்கிலும், சில சமயங்களில் காலத்திற்கு முன்பும் களங்கம் நேரக்கூடியதாகும்''

''முற்றும் கண்ட முநிபவர் போல் வெளுத்து வாங்கிவிட்டாயே!''

''இதெல்லாம் கேள்வி ஞானமும், ஊகமும்தான். குடும்பத்தில் புகுந்தால் எப்படியோ? என்னதான் இருந்தாலும் தன்னையொத்த கல்விக் கிழத்தியுடன் வாழ்தலே பலவகைகளிலும் சிறந்ததென்று நான்கருதுகிறேன். ஆனால் உன் அபிப்பிராயம் எப்படியோ? ஆனால் ஒன்று, உன் குற்றங்களை மறைக்க எண்ணி, படித்த பெண்களை இகழாதே; ஏற்க மறுக்காதே. ஒரு சில படித்த பெண்கள் தவருகக் கணவன்களிடம் அதிகாரத்துடன் புளங்குகிறார்கள்; ஆணவத்துடன் நடந்து கொள்ளுகிறார்களென்பதை எண்ணியும், சில அசட்டுப் பத்திரிகைகள் ஆபாசமாக கார்டூன்கள் தீட்டிகிண்டல் செய்வதை மனதில்கொண்டும், பீதியடைய வேண்டாம். 'ஊசிபோகும் பாதையில்தான் நூல்தொடரும்'. படித்த பெண்ணை படித்த ஆடவர்கள் தேடி மணக்கவில்லையானால் என்றுமே நாடு முன்னேற்றம் அடையப்போவதில்லை; மறந்துவிடவேண்டாம். அறிஞர் பெர்னட்ஷாவிடம்ஒருநாள் சினிமா உலகில் முதன்மை ஸ்தானம் வகிக்கும் பேரழகி ஒருவள் வந்து 'நான் பேரழகி, என்னை மணந்துகொண்டால், என்னைப் போன்ற அழகும், உங்களைப் போன்ற அறிவுமுள்ள குழந்தை பிறக்கும்' என்றாள். அவர் 'அப்படியே மாறி, உன் அறிவும், என் அழகும் உள்ள குழந்தை பிறந்தால்' என்றாராம். அதிகம் நான் கூறவேண்டியதில்லை உனக்கு''

தன் மனத்துள் நடந்தஇருவித போராட்டத்தை ஒருவழிக்குக் கொண்டுவந்து, தன் தந்தையின் ஆசைப்படி காலேஜ் குமாரியையே சுகுமார் மணந்தான் என்று கூறத் தேவையில்லை அறிவுள்ள இடத்தில் அழகு,தானேமிளிரும்.

''குமாரி''யில் மாதுரிதேவி

ரசிகர்கள் அனைவருக்கும்
எமது
பொங்கல் வாழ்த்துக்கள்!

விருதுநகர்
நியூமுத்து
டாக்கீஸில்
இப்பொழுது வெற்றியுடன்
3வது வாரமாக
நடைபெறுகிறது

T. R. ராமச்சந்திரன்,
லலிதா—பத்மினி—ராகினி
முதலியோர் நடித்த

சிங்காரி

எமது அடுத்த புதிய வெளியீடு:
நாராயணன்
அன் கம்பெனியாரின்

தாய் உள்ளம்

டைரக்ஷன்:
ராம்நாத்.

NEW GOLDEN PICTURES,
26, Chockappa Naicker Street,
MADURAI.
List of Pictures Available

FLASH GORDON
(Universal serial)
மர்மலோகம்

★

SUPERMAN
(Columbia)
சூப்பர்மேன்

★

பொங்கல் ரிலீஸ்
CALL OF THE SAVAGE
(Universal)
வனராஜ்யம்

★

ரேஹனா நடித்த
KIDKHI
கிட்கி

★

அசோக்குமார், சுரையா நடித்த
KILARI
கிலாரி
ஹிந்தி சமூகப் படம்.

★

Latest out-standing
Serials are available for
immediate Screening.

எப்பொழுதும்

குணம் மணம் நிறைந்த

எங்கள்

VVD

TRADE MARK

நல்லெண்ணெய்
கடலை எண்ணெய்
தேங்காய்எண்ணெய்

வாங்கி உபயோகியுங்கள்

★

வே. வ. தனுஷ்கோடி அன் கோ.,

உயர்ந்த எண்ணெய் தயாரிப்பாளர்கள்,

தூத்துக்குடி.

ASP தயாரிப்பு

செந்தமிழ் நாட்டுச் சிறுவர்களுக்கு
திடகாத்திரமளிக்கும்
★ சிறந்த உணவு ★

எங்கள்

ராஜா

பார்லி பிஸ்கட்

குளுகோ பிஸ்கட்

ஜிஞ்சர்நட் பிஸ்கட்

ராஜா பிஸ்கட் கம்பெனி,

(ஸ்தாபிதம் 1926.)

115, திண்டுக்கல் ரோடு, மதுரை.

உரிமையாளர்: ஆ. சங்கு பிள்ளை.

கிளை: 2, டவுன்ஹால் ரோடு, காலேஜ் ஹவுஸ்.

L. V. ஷண்முகம் பிள்ளை, மதுரை.

அன்பர்களுக்கு
எங்கள் பொங்கல் & புத்தாண்டு வாழ்த்துக்கள்

குன்ருத குணம், குறையாத மணம்,
கணக்கான காரம்

இவற்ருல் அன்பர்களை அகமகிழ்வித்து,
உற்சாகமூட்டி ஊக்கம் கொடுத்து
வேலைகளில் தீவிரப்படுத்துபவை
எங்கள்

போட்டோ & பூமார்க்
பீடிகள்



ஜி. எஸ். முத்தையா & பிரதர்.
போட்டோ & பூமார்க் பீடித்தொழிற்சாலை,
மைலாபுரம்.

அரியநாயகிபுரம் P. O. (Via) சேர்மாதேவி.

பிளாக்குகள்
சினிமா சிலேடுகள்
செய்யுமிடம்
புத்தாண்டு &
பொங்கல்
வாழ்த்துக்கள்.